Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

**அதிக பக்கங்களுடன் ...**


- 150 வருட பழமை வாய்ந்த முருகனின் வேல் பொலிஸ் நிலையத்தில் - பக். 05
- அள்ளித்தந்த நல்லவர் எம்.ஜி.ஆர். - பக். 11
- புலிகளின் இறுதி நாட்கள்...- பக். 14


விலை : ரூபா 20.00

செய்தி - 49 | செப். 03-09, 2016 | பக்கம் - 24

## மலேசியாவில் ராஜபக்ஷவின் வருகைக்கு கடும் எதிர்ப்பு




(கோலா லம்பூர்)

மலேசியத் தலைநகர் கோலாலம்பூருக்கு வருகை தந்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 50 இற்கும் மேற்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், அரசியல்வாதிகளும் கோலாலம்பூரில் உள்ள புத்ரா உலக வர்த்தக மையத்தின் முன்பாக நின்று தமது எதிர்ப்பையும் வெறுப்பையும் கோபத்தையும் வெளிக்காட்டினர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோலாலம்பூரில் உள்ள புத்ரா உலக வர்த்தக மையத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சர்வதேச ஆசிய பசுபிக் பாராளுமன்ற அமைப்பின் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு சென்றிருக்கிறார்.

02 இல்



## யாழ் வந்தார் பான் கீ மூன்

02 இல்

## பசுக்களைக் கொல்லும் கொடியவர்கள்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் பசுக்களைக் கொன்று இறைச்சிக்கு விற்றல் முஸ்லீம் மக்கள் மத்தியில் வேகமாக வளர்ந்து வரும் தொழிலாக மாற்றமடைந்து செல்கின்றது. பசுக்களைக் கொல்லும் செயற்பாடுகளைத் தடுப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் இதுவரை யாருமே எடுக்கவில்லை.

வடமாகாணத்திலுள்ள பிரதேச சபைகள் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு அனுமதி வழங்குகின்றன.

02 இல்



## ப. நோ.கூ.சங்கங்களில் ஈபிடிபியின் கொள்ளை



(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள 47 பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் புலிகளும், அதே நேரத்தில் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈபிடிபி என அழைக்கப்படும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் கொள்ளையடித்தது தெரிய வருகின்றது.

02 இல்

## ராஜீவை கொலை செய்யவும்

### விடுதலைப் புலிகளின் உத்தரவை நான் செவிமடுத்தேன்

### - கேணல் ஹரிகரன் -




(சென்னை)

விடுதலைப்புலிகளின் உரையாடல்களில் காணப்பட்ட விடயங்களைப் பார்த்து நான் அதிர்ச்சி அடைந்தேன். அந்த உரையாடல்கள் யாழ்ப்பாணத் தமிழில் காணப்பட்டன. அந்த உரையாடல் ராஜீவ்காந்தியை "டம்ப்" பண்ணுமாறு உத்தரவிட்டது.

02 இல்

### கொண்டோடிச் சுப்பர்



# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## பான் கீ மூன்றகு தினச் செய்தியின் கண்டனம்

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட 72 வயதான ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான்கீ-மூன் தென் கொரியாவைச் சேர்ந்தவர்.

அவர் தென் கொரியாவில் பல பதவிகளை வகித்தவர். 2004 ஜனவரி முதல் 2006 நவம்பவர் வரை தென்கொரியாவின் வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்தவர். அந்தக் காலத்தில் ஆபிரிக்கா கானா நாட்டைச் சேர்ந்த கோபி அனானின் பதவிக் காலம் முடிவுக்கு வந்தது.

அந்தச் சமயம் ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த ஒருவரையே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் பதவிக்கு நியமிக்கும் முறை வந்தது.

அந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பான் கீ-மூன் ஐ.நாவின் பொதுச் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிட்டார். அப்போது அவர் தென்கொரியாவின் வெளிவிவகார அமைச்சராக இருந்தமையினால் ஐ.நா பாதுகாப்பு சபையில் அங்கம் வகித்த நாடுகளுக்கும் மற்றும் ஏனைய நாடுகளுக்கும் சென்று தமது பதவிக்கான ஆதரவை அவரால் தேடக்கூடியதாக இருந்தது.

இதனையடுத்து, 2006 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி அவர் ஐக்கிய நாடுகள் சபையின் 8வது செயலாளர் நாயகமாக தெரிவு செய்யப்பட்டார்.

ஆனால் 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி அவர் கோபி அனானினிடம் இருந்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலலாளர் நாயகம் பதவியை பொறுப்பெடுத்தார்.

மேலும் 2011 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 6 ஆம் திகதி இரண்டாவது தடவையாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடுவதாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பையடுத்து, மீண்டும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி இரண்டாவது தடவையாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகமாகப் பதவியேற்றார்.

அவருடைய பதவிக்காலம், இந்த வருடம் அதாவது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்றது. இந்தப் பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் பான் கீ-மூன் தென்கொரிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட திட்டமிட்டிருப்பதாக தெரியவருகின்றது.

அவர் தனது பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு இன்னும் நான்கு மாதங்கள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், மூன்று நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமாக சென்ற செப்ரெம்பர் மாதம் 02 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

முன்னதாக மியான்மார்(பர்மா) நாட்டிற்கு சென்றிருந்த அவர், இலங்கை வந்த பிற்பாடு சீனாவில் நடைபெறவுள்ள ஜீ20 நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்குபற்றவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு சென்ற 02 ஆம் திகதி விஜயம் செய்த அவர் மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் கூரே, திரு சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழுவினரையும் வடமாகாண முதலமைச்சர் திரு.சி.வி விக்கினேஸ்வரன் மற்றும் அவரது அமைச்சர்களையும் சந்தித்துப் பேசினார்.

பின்னா, வலி வடக்கில் உள்ள நலன்புரி நிலையமொன்றிற்கும் அவர் விஜயம் செய்திருந்தார். ஆனால் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ-மூன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தபோது போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கண்டு கொள்ளாது சென்றமை அனைவரையும் கவலையடைய வைத்துள்ளது. பெரும்திரளான மக்கள் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட தாம் நீண்ட நேரம் காத்திருந்த போதிலும் பான் கீ-மூன் அவர்கள் தம்மைச் சந்திக்காது சென்றமை தமக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ-மூன் கண்டு கொள்ளாமல் சென்றமைக்கு தினச்செய்தி தனது கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றது.

## ஈபிடிபியின் கொள்ளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈபிடிபியைச் சேர்ந்த ஆட்கள் பலர் யாழிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்று பல லட்சம் ரூபாவை கடனாக பெற்றார்கள் என்றும் இன்றுவரை அவை மீளச் செலுத்தப்படவில்லை யென்றும் தெரியவருகின்றது.

இவ்வாறு சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சென்ற ஈபிடிபி உறுப்பினர்கள் பல லட்சம் ரூபாவை கடனாகப் பெற்றார்கள் என்றும் அவை இன்னமும் திருப்பி செலுத்தப்படவில்லையெனவும் தெரியவருகின்றது.

அண்மையில் யாழ் ஊடகமையத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் தகவல் வெளியிட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என அழைக்கப்படும் ஈபிடிபியின் முன்னாள் உறுப்பினர் பொன்னையா அக்கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட அக்கட்சியின் உறுப்பினர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். ஆனால் அவர் முன்னர் ஈபிடிபி யின் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களில் கொள்ளையடித்த பணத்தைப்பற்றி கூற மறந்து விட்டார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பான் கீ–மூன்...

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்ட ஐநா சபை பொதுச்செயலாளர் பான் கீ மூன் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்குடாநாட்டுக்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பான் கீ மூன் பிற்பகல் 1.40 மணியளவில் வடமாகாண ஆளுனரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்துக்கு விஜயம் செய்தார். அவருக்கு இந்து முறைப்படி நாதஸ்வரம் மேளம் முழங்க மாளை அணிவித்து வரவேற்கப்பட்டார்.

வடமாகாண ஆளுந ரெஜினோல்ட் கூரே, யாழ் மாவட்ட அரச அலுவலர் நா.வேதநாயகன் ஆகியோருடன் கலந்துரையாடினார். அச்சந்திப்பின்போது வடமாகாண நிலைபற்றி ஆளுனரிடம் ஐநா செயலர் கேட்டறிந்தார். வடமாகாண மாற்றம் பற்றி சுமார் 20 நிமிடம் ஆளுனர் விளக்கமளித்தார். வடமாகாணத்தில் இனங்களுக்கிடையேயான ஒருமைப்பாட்டை உருவாக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தமிழ் சிங்கள பிள்ளைகள் இணைந்து கல்விகற்கும் நல்லிணக்க பாடசாலைகளை நிறுவப்போவதாக ஆளுனர் தெரிவித்தார்.

அதேவேளை காணாமல் போனோரின் உறவினர்கள்,தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இடம் பெயர்ந்து மீள் குடியேறாது வலிகாமம் முகாமில் தங்கி இருப்பவர்கள் ஐநா பொதுச்செயலாளரின் கவனத்தி ஈர்க்கும் வகையில் ஆளுனர் மாளிகைக்கு முன்னால் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தினர்.

யாழ் அச்சு வீதி பாதுகாப்பு மண்டபத்தில் இருந்து 11 மணிக்கு ஆரம்பமான பேரணியில் கலந்து கொண்டவர்கள் ஊர்வலமாகச்சென்று ஆளுனரின் செயலகத்துக்கு முன் கவன ஈர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

ஆனால், ஐநா பொதுச்செயலாளர் ஆளுனர் மாளிகைக்குச் செல்லும் போதும் பின்னர் திரும்பி வரும் போதும் அவர்களைக் கண்டு கொள்ளவில்லை. கவன ஈர்ப்பு செய்தவர்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் ஐநா பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தனும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களும் பான் கீ மூனை யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் சந்தித்தனர். வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனும் நான்கு அமைச்சர்களும் ஐநா செயலரைச் சந்தித்தனர். இதேவேளை வலிகாமத்தில் உள்ல இடம் பெயர்ந்தோர் முகாமுக்கும் அவர் சென்றார்.

யாழ் மாவட்ட செயலகத்துக்கு பான் கீமூன் வியஜம் செய்த போதும் மாவட்ட செயலகத்துக்கு முன் நின்ற மக்களைச் கண்டு கொள்ளவில்லை. மக்களுடன் உரையாடவில்லை. இதனால் மக்கள் பெரிதும் ஏமாந்தனர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மலேசியாவில்...

ஆர்ப்பாட்டக்காரர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் வருகையினால் தங்களை அவமானப்படுத்தி விட்டார்கள் என்று கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தொலைந்து போ என்று சொல்லி ராஜபக்ஷவினுடைய உருவத்தின் மீது எழுதினார்கள். சுகை மாநில உறுப்பினர் ஏ.சிவனேசன் தெரிவிக்கும் போது தமிழர்கள் ஒழிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவரை மலேசிய அரசு அனுமதித்தது மிகவும் தவறானது என்று குறிப்பிட்டார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ராஜீவை கொலை...

"டம்ப்" என்ற சொல்லுக்கு மிகச் சரியான அர்த்தம் எனக்கு தற்போது நினைவில் இல்லாத போதிலும் அந்தச் சூழல் எனது மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது.

"டம்பிங்" என்பது விடுதலைப்புலிகள் படுகொலைக்கு பயன்படுத்தும் வார்த்தை. விடுதலைப்புலிகள் தங்கள் உரையாடல்களின் போது பயன்படுத்தும்மொழி குறித்து எனக்கு ஓரளவு பரிச்சயமிருந்தது.இருந்த போதிலும் அந்த உரையாடல் குறித்து உறுதிசெய்து கொள்வதற்காக யாழ்ப்பாண மொழிப்பாவனையை நன்கு தெரிந்த ஊடகவியாளர் ஒருவரை நான் தொடர்புகொண்டேன். அவர் அது ராஜீவ்காந்தியை கொல்வதற்கான உத்தரவு தான் என உறுதியாக தெரிவித்தித்தார். அதிர்ச்சியடைந்த நான் இந்திய அமைதிப்படையின் தளபதிக்கு இது குறித்து அறிவித்தேன்.அவர் என்னை இந்த விடயத்தை புறக்கணிக்குமாறு கேட்டுக்கொண்டார். அவரின் அந்த உத்தரவு சரியானதுதான். ஏனெனில் எங்களிற்கு அவ்வேளை செயற்படுவதற்கான தலைமைப் பீடமொன்று இருக்கவில்லை. மேலும் அந்த அதிகாரி அந்த உரையாடலின் பதிவை சென்னை புலனாய்வு பிரிவினரிடம் வழங்குமாறு என்னை கேட்டுக்கொண்டார். அத

(தொடர்ச்சி...04)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பசுக்களை...

அங்கே வகை தொகையாக மாடுகள், பசுமாடுகள் இறைச்சிக்கு வெட்டப்படுகின்றன. வெட்டப்படும் மாடுகளா இல்லையா என்பதை பரிசோதனை செய்யும் பொறுப்பு பொதுச்சுகாதார பரிசோதகர்களிடம்(PHI) விடப்பட்டுள்ளது.

ஆனால் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் (PHI) மாடுகளை வெட்டும் கொட்டகைகளுக்குச் (Slaughter House) சென்று வெட்டப்படும் மாடுகளை சீராக பரிசோதனை செய்கிறார்களா என்பது தெரியவில்லை. சில சந்தர்ப்பங்களில் சினையான பசுக்களைக் கூட இறைச்சிக்காக மாட்டிறைச்சிக் கடைக்காரர்கள் வெட்டுவதாக கூறப்படுகின்றது.

மாடுகள் பெரிய உருவமான மிருகங்கள். அவற்றின் மண்டையில் பெரிய சம்மட்டியால் அடித்து, பின்னர் அதன் தொண்டைக்குழாயில் கத்தியைவைத்து ஓதி வெட்டி அந்த மாட்டை உரித்து இறைச்சியாக்குகின்றார்கள். இதனைவிட பெரிய மிருகவதை உலகில் எங்கும் இருக்க முடியாது. வடமகாணத்தில் அநேகமான இறைச்சிக்கடைகளை முஸ்லீம்களே வைத்திருக்கிறார்கள்.

மேலும் வன்னியில் உள்ள முஸ்லீம்களின் ஆட்கள் மாடுகளை எல்லாம் விரட்டி தங்கள் இடங்களுக்கு சாய்த்துச் செல்கிறார்கள். இவ்வாறு சாய்த்துக் கொண்டுவரப்பட்ட மாடுகளை தங்கள் கொட்டகைளில் வெட்டி பெரிய குளிரூட்டி வாகனங்களில் கொழும்பிற்கு அனுப்புகிறார்கள். இவ்வாறு வெட்டப்பட்ட மாடுகளை ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு கொண்டு செல்வதற்கு உரிய அனுமதிகளை பிரதேச சபைகளிடம் பெறுகிறார்களா என்பது தெரியவில்லை.


இவர்கள் சட்டவிரோதமான இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டு கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். வடக்கில் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரிய பதவிகளில் இருப்பவர்கள் மாட்டு இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிகின்றது.

அதிகாரத்தையும் தங்கள் பதவிகளையும் பயன்படுத்தி கேட்பார் மேய்ப்பார், இல்லாமல் வன்னியில் மேய்ந்து கொண்டிருக்கும் கட்டாக் காலி மாடுகளைப் பிடித்து காட்டுப் பாதைகள் ஊடாக தங்கள் ஆட்களை வைத்து சாய்த்துக் கொண்டு போய் தங்கள் இடங்களில் வெட்டி இறைச்சிக்காக கொழும்பிற்கு அனுப்புகிறார்கள்.

இந்து சமயத்தில் பசுமாடுகள் சிவனோடு இணைக்கப்பட்டு போற்றி வணங்கப்படுபவை. மேலும் எமது பிள்ளைகளெல்லாம் தாய்ப் பாலை அடுத்து பசுப்பாலையே குடித்து வளர்கின்றார்கள். எனவே பசுமாடுகளை விஷமிகள் கொண்டு போய் இறைச்சிக் காக வெட்டி விற்பனை செய்வது வெறுக்கத் தக்கதும் அருவருக்கத் தக்கதும் கண்டிக்கத் தக்கதுமான ஒரு விடயம் ஆகும்.

# 150 வருடங்கள் பழமை வாய்ந்த வேல்

## நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது



(யாழ்ப்பாணம்)

காரைநகர் அல்வின் வீதியிலுள்ள ஆலடி முருகன் ஆலயத்தின் 150 வருடாங்கள் பழமை வாய்ந்த வேல் எதிர்வரும் திங்கட் கிழமை 5ஆம் திகதி ஊர்காவற்துறை பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது. இந்த வேல் சம்பந்தப்பட்டவர்களின் உரிமைப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட வேலின் உரித்துடைய வழக்காளிகளான முருகேசு தேவராஜா மற்றும் சுப்பிரமணியம் நாகராசா ஆகியோரும் மற்றும் எதிராளியான வேலுப்பிள்ளை குளானந்தராசாவும் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்று நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது.

ஆலடி வேல்முருகன் ஆலயமானது கடந்த 150 வருடாங்களுக்கு முன்பே தோற்றுவிக்கப்பட்டு சீனியன் என்பவரால் ஆதரிக்கப்பட்டு தற்போது அவரது வழித்தோன்றல்களான அவரது பரம்பரையினரால் ஆதரிக்கப்பட்டு வந்தது.

இவ் ஆலயம் உரித்துடையவர்களால் புனரமைக்கப்பட முற்பட்ட வேளை இவ் ஆலயத்திற்கு எக்காலத்திலும் வருகை தராத வேலுப்பிள்ளை குளானந்தராசா என்ற தனிப்பட்ட நபர் தனது அடியாட்களுடன் வந்து இவ் ஆலயத்தை இடித்து தரைமட்டமாக்கினார்.

அத்துடன் இவ் ஆலயத்தில் 19 வருடாங்களாக பூஜை செய்து வந்த பூசாரியையும் தாக்கினர். பலமாகத் தாக்கப்பட்ட பூசாரி யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். இவ் ஆலயம் தரைமட்டமாக்கப்பட்ட 21.08.2016 அன்று ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரிகள் தமது வாகனத்தை கொண்டு வந்து இவ் ஆலயத்தின் வேலை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். இந்த ஆலயத்தின் பழமை வாய்ந்த முருகனின் வேலை மீண்டும் தம்மிடம் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆலயத்தை வழிபடும் மக்கள் முன் வைத்ததையடுத்து இது குறித்து முடிவு செய்வதற்காக ஊர்காவற் துறை நீதிமன்றம் குறித்த வழக் காளிகளை எதிர்வரும் ஐந்தாம் திகதி திங்கட்கிழமை நீதிமன்றத்திற்கு அழைத்துள்ளது.



# தொண்ணூறு இலங்கை தமிழ் அகதிகள்

## தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் தொண்ணூறு இலங்கை தமிழ் அகதிகள் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதர உள்ளனர்.

இவர்களில் சுய விருப்பின்பேரில் மூன்று குழுவினர்களாக 54 பேர் (20 குடும்பங்கள்) திருச்சியிலிருந்து இலங்கை விமானசேவையினூடாக மு.ப. 10.15 மணியளவிலும் 36 பேர் (15 குடும்பங்கள்) சென்னையிலிருந்து இலங்கை விமானசேவை யினூடாக நண்பகல் 12.20 மணியளவிலும் 2016ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13ம் திகதியன்று இலங்கைக்கு வருகைதர உள்ளனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சரின் முயற்சியால் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும், இலங்கை விமானசேவை நிறுவனமும் அவர்களது பயணப்பொதியின் அளவையும் அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 90 பேரில் 45 ஆண்களும் 45 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் மன்னார், திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை, கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு இலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமானபயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75 அமெரிக்க டொலர்களும், போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும், உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

2011ம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4,945 இலங்கை தமிழ் அகதிகள் (1,798 குடும்பங்கள்) தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்தியாவில் 64,000 பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில்இருக்கின்றனர். மொத்தமாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் கௌரவ சுவாமிநாதன் அவர்கள் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளை வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்ததன் பேரில் தற்போது அமைச்சினால் ஆகக்கூடிய தொகையாக 100,000 ரூபா தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அமைச்சினால் வழங்கப்படுகின்றது.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இவ் அமைச்சானது, வீடுகள் மற்றும் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடுகளை வழங்குமாறு, ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியிருக்கின்றது.

வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படும் அரசாங்கமானது இந்தியாவிலிருந்து கட்டம் கட்டமாக சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிக்ஞையாக காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

# கஞ்சாப் பொதிகளை கடத்தியவர் கைது



(தலைமன்னார்)

தலைமன்னார் படப்பிடி பகுதியில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாப்பொதிகளை தன்வசம் வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவரை இன்று சனிக் கிழமை காலை கைது செய்துள்ளதாக மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உ.கௌசிகன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சியந்த பீரிஸின் வழிகாட்டலுக்கு அமைவாக மன்னார் மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உ.கௌசிகன் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே கேரளா கஞ்சாப்பொதிகளை மீட்டுள்ளனர்.

இன்று சனிக்கிழமை காலை 4.30 மணியளவில் தலைமன்னார் படப்பிடி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தன்வசம் வைத்திருந்த இரண்டு பொதிகளை கொண்ட 3 கிலோ 352கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ளதோடு, தலைமன்னார் கிராமம் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேரளா கஞ்சா சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி வய்ந்தது என தெரிவித்த பொலிஸார் விசாரனைகளை மேற்கொண்டு வருவதாகவும், மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளார்.

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் இந்தியத் துருப்புகளின் பங்களிப்பு

1990 களில் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது இந்தியத் தொழில் நுட்பவியலாளர்களும் இந்தியப்படை அதிகாரிகளும் இலங்கைப் பாதுகாப்புப் படையுடன் சேர்ந்து யுத்தத்தில் ஈடுபட்டார்களா?

அண்மையில் திரு நா.யோகேந்திரநாதன் எழுதிய "நீந்திக் கடந்த நெருப்பாறு" எனும் நூல் வெளியானது அதில் 224 ஆம் பக்கத்தில் இந்தியத் தொழில் நுட்பவியளாளர்களும் இந்தியப் படை அதிகாரிகளும் ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினருடன் சேர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்ற மார்ச் 17 1999 இல் தள்ளாடியில் இருந்த ஸ்ரீ லங்கா இராணுவத்தின் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டு முழுமையாக சேதமாக்கப்பட்டது. இது சம்பந்தமாக யோகேந்திரநாதன் தனது நூலில் குறிப்பிடும் போது "அன்று காலை 10 மணியளவில் கொழும்பில் இருந்து விசாரணைக் குழு உலங்குவானூர்தியில் வந்து இறங்கியது. அவர்கள் பல கோணங்களில் விசாரணைகளை நடத்தியும் போராளிகள் முகாமுக்குள் இறங்கி இருந்தனர் என்பதை மட்டுமே முடிவு செய்ய முடிந்தது. எப்படி தொடர் வெடிப்புகள் இடம் பெற்றன என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. மனிதக் குண்டு வெடிப்புகள் வெடித்திருப்பதற்காக ஆதாரங்களையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

அடுத்தடுத்த நாட்களில் மேலும் சில நிபுணர்கள் வந்து ஆய்வுகளையும் விசாரனைகளையும் நடத்திய போதிலும், மேலதிகமாக எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.

இறுதியில் இந்தியத் தொழில்நுட்பவியலாளர்கள் வந்து 'பிக்ஸ்' அடிக்கப்பட்டு அதை இலக்காக வைத்து ஆட்டலறிகள் ஏவப்பட்டதைக் கண்டு பிடித்தனர். அதன் அடிப்படையில் கவலரண்களில் நின்ற சில படையினரும் ரோந்துப் பணியில் ஈடுபட்ட சிலரும் தண்டனைக்குட்படுத்தப்பட்டனர்,

# இங்கைத் தமிழருக்கு உதவியவருக்கு

## 3500 டொலர்கள் அபராதம்!



(மெல்பேண்)

இலங்கைத் தமிழர் ஒருவர் ஒருவர் நாடு கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக விமானத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திய Jasmine Pilbrow என்ற மெல்பேண் பல்கலைக் கழகத்தை சேர்ந்த 22 வயது மாணவிக்கு அவுஸ்திரேலிய டொலர் 3500 டொலர்களை அபராதமாக நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

Broadmeadows Magistrates நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை குற்றவாளி என அறிவிக்கப்பட்டார்.

நாடு கடத்தப்படவிருந்த இலங்கைத் தமிழர் அவுஸ்திரேலியாவின் விமானத்தில் ஏற்றப்பட்டிருந்தார். அதைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் அந்த பட்டதாரி மாணவி விமானத்தில் பயணம் செய்தார். அந்த விமானத்தில் அவர் பயண இருக்கையில் அமர மறுத்து தனது எதிர்ப்பினை வெளிக்காட்டினார்.

இவ்வாறு ஓடும் விமானத்தில் பயண இருக்கையில் இருக்க மறுப்பது சட்டப்படி குற்றமாகும். இதையடுத்து இலங்கைத் தமிழர் நாடு கடத்தப்படுவதை தடுக்க முயற்சித்த ஜஸ்மின்வ் பில்பறோ மீது சிவில் விமானச்சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது.

இவ் வழக்கு மீதான விசாரணை நேற்று மெல்பேர்ணில் Broadmeadows Magistrates நீதிமன்றில் நடைபெற்றது.

தான் தமிழ் அகதிகளுடன் நெருங்கியிருப்பதற்கான காரணத்தை ஜஸ்ரின் பில்பறோ நீதிமன்றத்தில் கூறினார். அவர் செய்த குற்றத்தை சுட்டிக்காட்டிய பெண் நீதிபதி Meghan Keogha விமானம் பயணிப்பதற்கு காலதாமதத்தை ஏற்படுத்தியமைக்காக அவுஸ்ரேலிய டொலர் 3500 ஐ குவான்ராஸ் விமான நிறுவனத்திற்கு செலுத்துமாறு உத்தரவிட்டார்.

சென்ற பெப்ரவரி மாதம் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதற்காக மெல்பேர்னிலிருந்துடார்வின் செல்லும் Qantas விமானத்தில் ஏற்றப்பட்டார்.

இதைத்தடுத்து நிறுத்துவதற்காக, பயணச் சீட்டு ஒன்றைப் பெற்று குறித்த விமானத்தில் ஏறிய Jasmine Pilbrow என்ற பல்கலைக் கழக மாணவி விமான இருக்கையில் அமர மறுத்து தனது எதிர்ப்பினை வெளிக்காட்டினார். இதனையடுத்து, Jasmine Pilbrow செய்த குற்றத்தை சுட்டிக்காட்டிய நீதிபதி, விமானம் பயணிப்பதற்கு காலதாமதத்தை ஏற்படுத்தியமைக்காக 3500 டொலர்களை Qantas விமான நிறுவனத்துக்கு செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்த வழக்கின் இறுதி தீர்ப்பு எதிர்வரும் டிசம்பர் மாதம் 11ஆம் திகதி வழங்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை, Jasmine Pilbrow விற்கு ஆதரவாக அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தமிழர்கள் நீதிமன்றவளாகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




## பிலிப்பைன்ஸ்சில் குண்டு வெடிப்பு - 12 பேர் பலி

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டில் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் 12 பேர் பலியாகி உள்ளதாகவும் 60-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தெற்கே அமைந்துள்ள தாவே நகரில் இரவு நேர சந்தை இயங்கி கொண்டிருந்தது. அப்போது அந்த பகுதியில் பொதுமக்கள் அதிக அளவில் கூடியிருந்தனர். இந்நிலையில் திடீரென சக்திவாய்ந்த குண்டு அந்த பகுதியில் வெடித்தது.

இதில், சம்பவ இடத்திலேயே 10 பேர் பலியாகினர். மருத்துவமனைக்கு கொண்டு சென்ற இடத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். 60க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்த குண்டு வெடிப்புக்கான காரணம் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை. தகவல் அறிந்து வந்த பொலிஸார் மற்றும் மீட்பு குழுவினர் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர். மேலும் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டுள்ளனர்.



இந்த குண்டு வெடிப்பு குறித்து அந்நாட்டு ஜனாதிபதி ரொட்ரிகோ கூறியதாவது.

குண்டு வெடிப்பு குறித்து உரிய விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர். நாட்டு மக்கள் அமைதியாக ஒற்றுமையாக இந்த பிரச்சனையை எதிர் கொள்ள வேண்டும். இந்த குண்டு வெடிப்பில் பலியானவர்கள் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65வது ஆண்டு நிறைவு விழா

(கொழும்பு)


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65வது ஆண்டு நிறைவு விழா நாளை குருநாகலில் உள்ள மலிங்காப்பிட்டிய மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த விழாவிற்கு கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை வகிப்பார்.



2020 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை கைப்பற்றும் விதத்தில் கட்சியின் நடவடிக்கைகள் செயற்திட்டங்கள் அனைத்தும் உருவாக்கப்பட்டு வருவதாகவும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை லட்சக்கணக்கில் அதிகரிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும் அமைச்சரும் கட்சியின் செயலாளர் நாயகமுமான துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

அதே நேரத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு நிறைவு விழாவைப் புறக்கணிக்க கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர் என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடிமையாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ள காரணத்தினால் இத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



(02 ஆம் பக்க தொடர்ச்சி)

## ராஜீவை கொலை...

னையடுத்து நான் ஐபி அலுவலகத்திற்கு சென்று அதன் இயக்குநரை சந்தித்தேன். அவர் பல வருடங்களாக எனது சிறந்த நண்பர் ஆவார்.

அவர்அந்த உரையாடலை செவிமடுத்து விட்டு விழுந்து விழுந்து சிரித்தார் - அவர் என்னை பார்த்து "கேர்ணல் இது முற்றிலும் 'பேய்க்காட்டும்' சாகச முயற்சி ராஜீவ்காந்தி எப்போது எப்படி கொல்லப்படுவார் என்பதை அவர்கள் இந்தப் பதிவில் விசேடமாக குறிப்பிடவில்லையே?" என்றார்.

அவர்களால் ராஜீவ்காந்தியை கொல்ல முடியும் என நான் கருதவில்லை. அவர்கள் ஏன் கொல்ல வேண்டும்? என என்னிடம் அவர் கேள்வி எழுப்பினார். எனக்கு அந்த உரையாடல் ஏமாற்றமளித்தது. இருந்த போதிலும் அதில் சில உண்மைகள் இருப்பது போல தோன்றியது. நான் குழப்பமடைந்த மனதுடன் அங்கிருந்து வெளியேறினேன்.

மீண்டும் நான் இலங்கையில் உள்ள எனது நண்பரை தொடர்புகொண்டேன். அவர் ராஜீவ்காந்தி கொல்லப்படுவார். அது தான் பிரபாகரன் பாணி என்றார். அதன் பின்னர் நடந்தது எல்லாம் வரலாறு.

ராஜீவ்காந்தியின் படுகொலை எனக்கு அதிர்ச்சியாக அமைந்தது. நான் குற்றவுணர்ச்சியால் பாதிக்கப்பட்டேன். எனக்கு கிடைத்த தகவல்களை தீவிரமாக ஆராய்ந்திருந்தால் அந்தப் படுகொலையை தடுத்திருக்கலாம் என நான் கருதினேன். ராஜீவ்காந்தியின் படு கொலைக்கு பின்னர் உருவாக்கப்பட்ட கார்த்திகேயன் தலைமையிலான விசேட விசாரணை குழுவிடம் நான் இடைமறித்துக் கேட்ட அந்த தகவல் குறித்தும் அதன் ஒலிப்பதிவு நாடா ஐபியிடம் வழங்கப்பட்டது குறித்தும் தெரிவித்தேன். அவர் இந்திய கடற்படையினரும் விடுதலைப்புலிகளின் தகவல்களை இடைமறித்த வேளை அவ்வாறான தகவல்களை கார்த்திகேயன் தெரிவித்தார்.

# 150 வருட பழமை வாய்ந்த முருகனின் வேல்

# பொலிஸ் நிலையத்தில்







சுமார் 150 வருடங்களுக்கும் மேலாக பூசிக்கப்பட்டு, வணங்கப்பட்ட கந்தனின் வேல் கோவில் மூலஸ்தானத்தில் இருந்து பொலிஸாரால் பிடுங்கி எடுக்கப்பட்டு ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலடி முருகன் ஆலயம் பரம்பரை பரம்பரையாக கந்தன், கதிரன், சீனியன், முருகேசு, தேவராஜன், கடையன், ராமலிங்கம், ராசலிங்கம், சுப்பிரமணியம், நாகராசா ஆகியோரினால் பராமரிக்கப்பட்டு வந்தது.

திடீரென அந்தப்பகுதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குணானந்தராசா, வேலுப்பிள்ளை சிவானந்தராசா ஆகிய இரண்டு சகோதரர்களும் கோயில் நிலம் தமக்கே சொந்தமென கூறிக்கொண்டு அவர்களது அடியாட்களால் என 60 பேர் கொண்ட ரௌடிக் கும்பல் கடந்த ஆகஸ்ட் 21 ஆம் திகதி கோயிலை இடித்து தரைமட்டமாக்கியது.

இதற்கிடையில் சென்ற 12 ஆம் திகதி கோயில் உரிமையாளர்கள் ஊர்காவற்துறை மாவட்ட நீதிமன்றில் நம்பிக்கை சொத்து சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வழக்கு நிலுவையில் இருக்கும் போது அடாத்தான வேலைகளைச் செய்து கோவிலை இடித்து தரைமட்டம் ஆக்கியுள்ளார்கள்.

கோவில் நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் ஐந்து முறைப்பாடுகளைச் பொலிஸில் செய்தும் பொலிஸார் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தி ஊர்காவற்துறை உதவிப் பொலிஸ் ஆணையாளர் H.D.S. துஷித்த குமாரவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த கோயில் விவகாரம் குறித்து தினச்செய்தி காரைநகரில் உள்ள கோயில் அமைந்துள்ள பகுதிக்குச் சென்று அப்பகுதியிலிருக்கும் கோயில் சம்பந்தப்பட்டவர்களை பேட்டி கண்டது.


இந்தப் பேட்டியின் விபரங்களை கீழே தருகின்றோம்:



"நான் கந்தப்புளியடி காரைநகரைச் சேர்ந்தனான். 1986 ஆம் ஆண்டு திருமணம் முடித்து இங்கு வந்தேன். அன்று முதல் இந்த கோயிலை ஆதரித்து வருகிறேன். எனது மகன் நிதர்சன் (29). இவரே இந்தக் கோயிலின் பூசகராக இருந்து வருகிறார்.

கோயிலை இடித்த பின்னர் அடுத்த வெள்ளிக்கிழமை கோயில் இருந்த இடத்தில் பூஜை செய்வதற்கு எனது மகன் ஆயத்தங்கள் செய்தபோது எனது தம்பிகளான வேலுப்பிள்ளை குணானந்தராசா, வேலுப் பிள்ளை சிவானந்தராசா ஆகியோர் இருவரும் கூட்டமாக வந்து எனது மகனை அடித்து காயப்படுத்தினார்கள். எனது மகன் அடி காயங்களுடன் யாழ் போதனா வைத்திய சாலையில் 3 நாட்கள் அனுமதிக்கப்பட்டு இப்போது தான் வீடு திரும்பியுள்ளார்.

1990 இல் காரைநகரில் ஏற்பட்ட பிரச்சினைகளினால் மக்கள் அனைவரும் வெளியேறினார்கள். மீண்டும் 1996 இல் வந்து சேர்ந்தனர், நானும் வந்தேன். அன்று முதல் இன்று வரை இந்த கோயிலை ஆதரித்து வருகின்றேன். நாங்கள் வாழ்வதும் தாழ்வதும் அந்த குலதெய்வத்தினால் தான். எமக்கு ஆலடி முருகனே தஞ்சம்."







நான் அல்வின் வீதி காரைநகரில் வசித்து வருகிறேன். பருத்தித்துறையைச் சேர்ந்த நான் 2006 இல் திருமணம் முடித்து அன்று முதல் இன்று வரை இங்கேயே வாழ்ந்து வருகிறேன். இந்த ஆலயம் எனது கணவர் பத்மராசாவின் பரம்பரைக் கோயில். இந்த ஊருக்கு நான் திருமணம் செய்து வந்த நாள் முதல் நாங்களும் உறவினர்களும் அயலவர்களும் சேர்ந்து இந்தக் கோயிலை ஆதரித்து வருகிறோம்.

இவ் ஆலயத்தில் நவராத்திரி பூஜை திருவெம்பாவை முதலான திருவிழாக்கள் சிறப்பாக இடம்பெறும். ஆவணி ஞாயிறுகளில் 63 நாயன்மார்களின் குருபூஜைத் தினமாகும். இங்கு பெரிய பூசைகள் நடைபெறும்மேலும் அருகிலுள்ள வயல்வெளியில் பெரிய தம்பிரான் கோயில் உள்ளது. அந்தக் கோயிலில் விசாகப் பொங்கல் நடைபெறும். அன்று ஆலடி முருகன் ஆலயத்தில் சாடி சாந்தி பூஜைகள் நடைபெற்று மூன்று பெரிய பொங்கல் பானைகளில் வழுந்து எடுத்து மேளதாளத்துடன் கொண்டு செல்வோம்.



நான் 2002 ஆம் ஆண்டு திருமணம் முடித்து மீசாலையிலிருந்து இங்கு வந்தேன். எனது கணவர் தேவராசா தான் இக் கோயிலின் தலைவர். இவரது தகப்பனார் முருகேசு இக்கோவிலின் பரம்பரைப் பரிபாலகர்.


இந்த கோயிலைச் சுற்றியுள்ள 90 குடும்பங்கள் இந்த ஆலடி முருகனை தமது குல தெய்வமாக கருதி வழிபட்டு வருகின்றோம். சித்திரைக் கஞ்சியும் அந்தக் காலத்தில் நாங்கள் வார்ப்பதுண்டு. கந்த சஷ்டி விரத காலத்தில் அந்த 6 நாட்களும் நாங்கள் கந்தனுக்கு பெருவிழா எடுப்போம்.



நாங்கள் எல்வின் வீதியில் தான் பிறந்து வளர்ந்தோம். ஆலடி முருகன் கோயில் எங்கள் பரம்பரைக் கோயில். குணானந்தராசாவும் சிவானந்தராசாவும் அடியாட்களுடன் வந்து. இந்தக் கோயிலை இடித்து தரைமட்டமாக்கி நாசம் செய்துவிட்டுப் போய் விட்டார்கள். இந்த முருகன் மிகவும் சக்தி வாய்ந்தவர். முருகன் ஆலயத்தை இடித்தவர்களுக்கு முருகன் தகுந்த தண்டனை கொடுப்பார் என்று நாங்கள் நம்புகின்றோம்.

கடைசி ஆவணி ஞாயிறு அன்று பொலிஸார் எடுத்துச் சென்ற எங்கள் முருகனின் வேல் எங்கள் கைக்கு மீண்டும் வர வேண்டும்.

(தொடர்ச்சி 22 இல்)




# சொன்னார்கள் சொன்னார்கள்



வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே அண்மையில் கிளிநொச்சியில் கருத்து தெரிவிக்கும் போது வடமாகாண கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 6 ஆயிரம் மில்லியன் ரூபாய் திறைசேரிக்கு திரும்பவுள்ளதாக தெரிவித்து இருந்தார். இக் கருத்து தொடர்பில் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா கருத்து தெரிவிக்கும் போது, வடமாகாண கல்வி அமைச்சுக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியே 4 ஆயிரம் மில்லியன் ரூபாய் மட்டுமே, அப்படி இருக்கையில் எவ்வாறு 6 ஆயிரம் மில்லியன் ரூபாய் திரும்பும்? ஆளுநர் தவறுதலாக 600 மில்லியன் ரூபாய் தான் 6 ஆயிரம் ரூபாய் என கூறி இருந்தார் என வைத்துக் கொண்டாலும், அதுவும் தவறே.



கட்சிகளை பிளவுபடுத்துவதில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கெட்டிக்காரர் என அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். அந்த வகையில் ஸ்ரீல.சு.க. வை பிரிப்பதற்கு காணியின் உரிமையாளர்கள் உரிமை இல்லாதவர்களென இரு சாரர் போட்டி போட்டு வருவதாகவும் அமைச்சர் நேற்று சுட்டிக் காட்டினார். எது எவ்வாறானாலும் ஸ்ரீல.சு.க. பிளவடைந்தால் அது ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் சாதகமாக அமையும் என்பது சிறு பிள்ளைகள் கூட அறிந்த விடயமென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



உண்மையை கண்டறியும் ஆணைக் குழுவிற்கான சட்டமூலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்துள்ளார். கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் நிரந்தர அலுவலகம் அடுத்த மாதம் அமைக்கப்படும் என குறிப்பிட்டார்.



காணாமல் போனவர்கள் அலுவலகம் தொடர்பான அரசாங்கத்தின் சட்டமூலத்தில் சாட்சிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்கப்படவில்லை என தெரிவித்த வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசி தரன், உண்மைகளை கண்டறியவும் பாதிக் கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டு மாயின் சர்வதேச மத்தியஸ்தம் அரசின் பொறுப்புக்கூறும் கடப்பாட்டு பொறிமுறைக்கு அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.



ஐக்கிய தேசிய கட்சி அடுத்த உள்ளூராட்சி சபை தேர்தலில் தனித்து போட்டியிடவே தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான கட்சி மட்ட பேச்சுவார்த்தைகளே தற்போது மேற் கொள்ளப்படுவதாக அரச தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிம் தெரி வித்தார்.



அரசியலமைப்பின் உரிய நடைமுறை களைப் பின்பற்றாமல், பெறுமதி சேர் வரித் திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபாநாயகர் சபையில் அறிவித்ததும், பிரதமர் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச்சேர்ந்த தினேஷ் குணவர்தன எம்.பி. உரையாற் றினார். 'அரசியலமைப்புக்கு ஏற்ப, சட்டமூல மொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். எந்த அமைச்சரும், அதை மீற முடியாது. அரசியல மைப்புக்கு ஏற்புடையதாக இல்லையென்றால், அது தொடர்பாக உயர்நீதிமன்றம் தலையிடும்" என, தினேஷ் எம்.பி. தெரிவித்தார்.

உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் தினமுரசு வாரமலரின் ஆசிரியர் அற்புதன் நடராஜன,மகேஸ்வரி உட்பட யாழில் நடை பெற்ற முக்கிய கொலைகளுடன் ஈழமக்கள் ஜனநாயகட்சியின் தலைவர் டக்ளஸ் தேவா னந்தா உள்ளிட்ட பல உறுப்பினர்கள் சம்பந் தப்பட்டுள்ளதாக, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் நீண்டகால உறுப்பினர் சு. பொன்னையா குறிப்பிட்டுள்ளார்.




இந்தியரான கௌரி நந்தா என்ற பெண்மணி வடிவமைத்த கடிகாரம் தான் 'கிளாக்கி'. ஸ்நூஸ் பட்டனை மணிக் கணக்கான நேரத்துக்கு இஷ்டத்துக்குத் தட்டி சரியான நேரத்தில் எழ முடியவில்லை என நொந்து கொண்டவர்களுக்கானது இது. இந்தக் கடிகாரத்தில் ஒருமுறை ஸ்நூஸ் செய்யலாம். அடுத்த முறை எழுந்திருக்காவிட்டால் இதன் இரு புறங்களிலும் இருக்கும் சக்கரம் சுழல




ஆரம் பித்து, அறையின் ஏதாவது ஒரு மூலையில் ஓடி ஒளிந்துகொள்ளும். கடிகாரத்தைக் கண்டுபிடித்து ஸ்நூஸ் பட்டனைத் தட்டும்வரையில் அலாரம் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். மேலிருந்து கீழே விழுந்தாலும் உடைந்துவிடாத வகையில் இந்தக் கடிகாரம் வடிவமைக் கப்பட்டுள்ளது.


## ஆ மந்திரகாளி!



இன்விசிபிள் உடை யிருக்கிறது 'தி ஈஷ்' நிறு வனம். ஆனால் இந்த ஃப்ளாஷ் பயன்படுத்தி உடையை அணிந்தால், எடுக்கப்படும் புகைப் படங் களில் நமது உருவமானது மறைந்து விடும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது. காரணம், இந்த உடை யானது ஃப்ளாஷ் பயன் படுத்தும் போது ஒளியை அபரிமிதமாக பிரதிபலிப் பதால், அணிந்திருப்ப வரின் முகம் இருளாக மறைந்து விடுகிறது. பாப்பராஸி தொல்லையில் இருந்து தப்பித்துக் கொள் வதற்காக இந்த உடை யைப் பல பிரபலங்கள் விரும்பி வாங்கி வருகின் றனர்.

நெதர்லாந்தைச் சேர்ந்த சயீப் சித்திக் 2009 ஆம் ஆண்டு ஆம்ஸ்டர் டாம் நகரில் தனது நண்பர் களுடன் சுற்றிக் கொண்டிருந்த போது எடுத்த புகைப்படத்தில் பைக் ஒன்றின் ரிஃப்ளெக்டரில் ஃப்ளாஷ் பட்டு நண்பர்களின் முகம் எதுவும் தெரியவில்லை. இந்த ஐடியாவைப் பயனுள்ளதாக மாற்ற வேண்டுமென நினைத்த சயீப், பாப்பராஸி தொல்லையில் இருந்து விடுபடுவதற்காகத் தொழில் நுட்ப வல்லுநர்களுடன் இணைந்து வடிவமைத்த ஆடைதான் 'தி ஈஷ்'

## நேரம் மதிப்பற்றது




நம்நாட்டு நடைமுறைக்கு கொஞ்சமும் சரிப்பட்டு வராது என்றாலும் இந்தக் கடிகாரத்தின் அடிப்படை சுவாரசியமானது. 'நேரம் பொன் போன்றது" எனப் பொன்மொழி கேள்விப்பட்டிருப்போம். இந்த அலாரம் கடிகாரம் உணர்த்துவது அதைத்தான்.

உறங்குவதற்கு முன் இதில் பண நோட் டுகளை அடுக்கிவிட வேண்டும். அலாரம் அடிக்கும்போது குறிப் பிட்ட நேரத்தைத் தாண்டியும் எழா விட்டால் இதில் வைக் கப்பட்ட பணமானது ஒவ்வொன்றாகக் கிழிக் கப்படும்.

பணம் கிழிக் கப்படும் ஓசை கேட் டால் யார்தான் நிம்மதியாக உறங்க முடியும்?

# சிறு குற்றவாளிகளைக்கூட இரக்கம் இல்லாமல் கிட்டு தண்டித்தார்

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

அரசகேசரி

1986களில் கிட்டுவின் ஆளுமை யாழ் மாவட்டத்தில் மேல் ஓங்கி நின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட கட்டளை தளபதியான கிட்டு வைத்தது தான் சட்டமாக இருந்தது.

சிறிய சிறிய குற்றங்கள் செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் பகுதி அமைப்பாளர்கள் யாரையும் கைது செய்தால், அவ்வாறான கைது சம்பந்தமாக கட்டளைத்தளபதி என்ற முறையில் கிட்டுவுக்கு அறிவிப்பார்கள். கிட்டு அமைப்பாளர்களின் முறைப்பாட்டை கேட்ட பிற்பாடு, தூஷண வார்த்தையால் பேசி எந்த விதமான விசாரணையும் இல்லாமல் "டம்பு" பண்ணு என்று உத்தரவு பிறப்பிப்பார்.

கிட்டுவின் உத்தரவை அடுத்து சம்பந்தப்பட்ட குற்றவாளி அந்த பகுதி விடுதலைப்புலிகளின் அமைப்பாளரால் விளக்கு கம்பங்களில் கட்டப்பட்டு துப்பாக்கி சூட்டுக்கு இலக்காக்கப்படுவார். அந்த காலத்தில் தான் நிறைய விளக்கு கம்ப கொலைகள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கிட்டு எப்போதும் ஒரு யதார்த்தவாதி அந்த காலத்தில் புளட் அமைப்பு யாழ்மாவட்டத்தில் இருக்கக்கூடாது என கிட்டு உத்தரவிட்டார். அந்த உத்தரவை அடுத்து கிட்டு யாழ்மாவட்ட புளட் தளபதி மெண்டிஸை விட்டு வைப்பதாக இல்லை. பேச்சு வார்த்தைக்கு வருமாறு மெண்டிசை கிட்டு அழைத்திருந்தார். அவ்வாறான அழைப்பின் பெயரில் கிட்டுவை பார்க்க வந்த மெண்டிஸை கைது செய்தார். கைது செய்யப்பட்ட மெண்டிஸ் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார்.

ஒரு முறை மென்டிஸ் ஒரு சந்தர்ப்பத்தில் தன்னிடம் இருந்த பிஸ்ரலை காட்டி கிட்டுவை எச்சரித்திருந்தார். அந்த துப்பாக்கியை காட்டி எச்சரித்ததற்கு பாடம் படிப்பிப்பதற்காகவே மென்டிஸ் கைது செய்யப்பட்டார். இறுதியில் இரத்தம் சொட்ட சொட்ட குற்றுயிரும் குலையுயிருமாக யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அதன் பின்னர் மெண்டிஸ் சுட்டு கொலை செய்யப்பட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பை அடுத்து மெண்டிஸ் அணிந்திருந்த தங்கச்சங்கிலியையும், உடுப்பையும் மென்டிஸ்சின் பெற்றோரிடம் கையளித்தார்கள்.

அந்தக் காலத்தில் வஞ்சம் தீர்க்கும் படலம் தொடர்ந்து கொண்டே இருந்தது. அப்பாவி தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்டு வந்தார்கள். இவ்வாறு வஞ்சம் தீர்க்கும் முகமாக எல்லை ஓரங்களில் இருந்த சிங்கள கிராமங்களை திடீர் திடீர் என தாக்கி அங்கு இருந்தவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

1986 ஆம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி சர்வதேச விமான நிலையத்தில் எயர் லங்கா விமானத்தை குண்டு வைத்து தகர்த்தார்கள். அந்த விமானம் லண்டனில் இருந்து வந்து மாலைதீவு தலை நகரமான மாலேக்கு புறப்பட இருந்தது.

அதையடுத்து நான்கு நாள் கழித்து கொழும்பு கேந்திர நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்தது. அதில் 12 பேர் கொல்லப்பட்டார்கள் 125 பேர் காயமடைந்தார்கள். இந்தக் கொலைகள் குண்டு வெடிப்புகள் எல்லாம் அன்றாட நிகழ்வாக மாறி கொண்டு வந்தன.

இதற்கிடையில் யூன் 1986 ஆம் ஆண்டு பிரபாகரனின் மனைவி மதிவதனி இரண்டாவது பிள்ளையை பிரசவித்தார். அந்த பிள்ளைக்கு துவாரகா என்று பெயர் சூட்டினர்.

ஈழம் தேசிய இடதுசாரி முன்னணி 1986 ஆம் ஆண்டளவில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக மாறிக்கொண்டு வந்தது.

நான்கு போராட்ட குழுக்கள் இணைந்தன. இந்த ஈழதேசிய இடதுசாரி முன்னணியின் கூட்டங்களை பகிஸ்கரிக்த் தொடங்கினார்கள். அதையடுத்து ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், ஈரோஸ் போன்ற மூன்று போராளிக் குழுக்களும் கூட்டாக பிரபாகரனுக்கு ஓர் கடிதம் அனுப்பின. அந்த கடிதத்தில் ஒற்றுமையாக இயங்குவதன் முக்கியத்துவம் பற்றி வற்புறுத்தி இவ்வாறு அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு பிரபாகரனிடம் இருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை. அவரிடம் இருந்து எந்தவிதமான பதில்களும் வராததையடுத்து இடதுசாரி முன்னணி தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து தங்கள் முன்னணியில் இயங்க முன்வரவில்லையா? ஏன் முன்வரவில்லை என கேள்வி எழுப்பியது.

ரெலோ தலைவரை அழித்த பிற்பாடு ஈழம் தேசிய இடது சாரி முன்னணிக்கு பிரபாகரன் Good bye சொல்லி விலகிக் கொண்டார். இருந்த போதிலும் இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கிக் கொண்டே இருந்தது.

அந்த காலத்தில் தான் 10 பேர் அடங்கிய விடுதலைப்புலிகளின் போராளிகள் குழு ஒன்றிற்கு விமான எதிர்ப்பு பீரங்கியை எவ்வாறு கையாளுவது என்ற 6 மாத பயிற்சியை இந்திய அரசாங்கம் வழங்கிற்று.

அன்றைய காலத்தில் விமான எதிர்ப்பு பீரங்கி சம்பந்தமாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெரிதும் ஆதரவாக இருந்த நெடுமாறன் குறிப்பிடுகைளில் "இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு விமான எதிர்ப்பு பீரங்கிகள் தருவதாக வாக்கு கொடுத்துள்ளது," என்று பகிரங்கமாக குறிப்பிட்டார்.


விமான எதிர்ப்பு பீரங்கிகள் தங்களுக்கு வேண்டும் என்று விடுதலைப்புலிகள் வற்புறுத்திய போது றோவினர் (RAW) இவ்வாறான விமான எதிர்ப்பு பீரங்கி தேவையாயின் இரண்டு ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர்களை ஆலோசகராக வைத்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்கள்.

விடுலைப்புலிகளுக்கு இவ்வாறான ஒரு நிபந்தனையை ஏற்றுக்கொள்ள விருப்பம் இல்லை, இருந்த போதிலும் அந்த நிபந்தனைக்கு அவர்கள் கட்டுப்பட்டார்கள். விடுதலைப்புலிகள் றோவின் நிபந்தனையை ஏற்ற போதிலும் இறுதி நேரத்தில் றோவினர் விமான எதிர்ப்பு பீரங்கி சம்பந்தமான வாக்குறுதியை நிறைவேற்ற தவறிவிட்டனர்.

ஏமாற்றம் அடைந்த விடுதலைப்புலிகள் இந்தியா மீது மேலும் குரோத மனப்பான்மையுடன் நடக்க தொடங்கினார்கள். இவ்வாறு விமான எதிர்ப்பு பீரங்கி கொடுக்காமல் விட்டது இந்தியா அவர்களை அடிமைப்படுத்த முயற்சிக்கிறது என்று கருதிக் கொண்டார்கள்.

அந்த நேரத்தில் தான் சிங்கள ஹோம் காட்ஸ் என்று அழைக்கப்பட்ட படையினர் திருகோணமலையில் உள்ள ஒரு கிராமத்தை தாக்கி 10 அப்பாவித் தமிழர்களை அதில் 2 பெண்கள், 8 வயது சிறுமி ஒருத்தி அடங்கலாக கொன்று மலசலகூட கிடங்கில் தூக்கி எறிந்தார்கள்.

இந்த தாக்குதலை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் திருகோணமலையில் 16 சிங்களவர்களை, பெண்கள் குழந்தைகள் உட்பட,சுட்டுக்கொன்று அவர்களை குளத்தில் தூக்கி எறிந்தார்கள். விடுதலைப்புலிகளின் இந்த தாக்குதலை அடுத்து ஹோம் காட்ஸ் மீண்டும் வெறிகொண்டு திருகோணமலைக்கு பேருந்தில் வந்து கொண்டு இருந்த 9 தமிழர்களை கொன்று இறந்த உடலுக்கு பெற்றோல் ஊற்றி எரித்தார்கள். அதே நேரத்தில் இந்தியா ஒரு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றை கொண்டு வருவதற்கு பகிரங்கமாக முயற்சிகளை மேற்கொண்டது. இந்த பேச்சு வார்த்தையில் பங்குபற்றுவது. சம்பந்தமாக தமிழர் ஜக்கிய முன்னணியினர் 1986ஆம் ஆண்டு ஆடி மாதம் கொழும்பு சென்றார்கள்.



அதேநேரம் இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்த தீர்வுத் திட்டத்துக்கு பிரபாகரன் தனது கடுமையான எதிர்ப்பை புதுடெல்லிக்கு தெரிவித்தார். அதே சமயம் தமிழர்களை காட்டி கொடுக்க முன்வந்ததற்காக தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணியின் தலைவரான அமிர்தலிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மரணதண்டனை விதிக்கப்பட்டு விட்டார் என யாழ்ப்பாணத்தில் வதந்திகள் பரவத் தொடங்கின.

அந்தக்காலங்களில் பிரபாகரனுக்கு தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணியினர் மேல் கடுமையான ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டது. அவர்கள் பேச்சுவார்த்தையில் பங்கு பற்ற விரும்புவதை பிரபாகரன் கடுமையாக எதிர்த்தார்.

தனது கோபத்தை வெளிக்காட்டும்விதமாக "ஏன் தமிழர் ஜக்கிய விடுதலை முன்னணியினர் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளில் பங்கு பற்ற விரும்புகிறார்கள்?" என்று ஆக்கிரோசமாக கேள்வி எழுப்பினார்.

"அவர்களின் திட்டம் என்ன என்று புரிந்து கொள்ள முடியவில்லை. இந்திய அரசின் பேச்சு வார்த்தை மூலம் சமாதானம் ஒன்று உருவாக்கும் முயற்சி நிச்சயம் தோல்வியில் தான் வந்தடையும் என, பிரபாகரன் தனது சகாக்களுக்கு கூறிக்கொண்டே இருந்தார்.

அந்த காலத்தில் சட்ட விரோதமான தொலைக்காட்சி சேவை ஒன்றையும் தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்தி வந்தார்கள். அந்த தொலைக்காட்சி சேவையில் யுத்த சம்பந்தமான படங்கள் சனி, ஞாயிறு வார இறுதி நாட்களில் முன்கூட்டியே பதிவு செய்யப்பட்ட பிரபாகரனின் பேச்சுக்கள் என்பனவற்றை ஒளிபரப்பினார்கள்.

அதே நேரத்தில், யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கான மிருகக்காட்சிசாலையும் உருவாக்கப்பட்டது. அதுமாத்திரமல்லாது போராளிகள் நடத்திய நீதி மன்றங்கள் பல பகுதிகளில் இயங்கத் தொடங்கின. யாழ் நகர வீதிகளில் எல்லாம் யுத்த நிலைமைகளை அறிவிக்கும் விளம்பரப் பலகைகள் வைக்கப்பட்டன. அந்த விளம்பரப் பலகைகளின் அருகில் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அந்த பெட்டிகளில் மக்கள் தங்களுடைய கருத்துக்களை அன்றேல் புகார்களை எழுதி போடுவதற்காகவே வைக்கப்பட்டிருந்தன.

மேலும் ரெலோவினர் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்ட பிற்பாடு வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்கே பணம் அனுப்பத்தொடங்கினர். மேலும் இளைஞர் யுவதிகள் எல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகளில் வந்து சேர தொடங்கினார்கள்.

(தொடரும்...)

RAW

### தமிழ்ச்செல்வனின் மறைவு பற்றி - தமிழினி

2007ம் ஆண்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்செல்வனும் அவரின் உதவியாளர்களுமாக ஏழு போராளிகள் இலங்கை வான் படையினரின் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தார்கள். தலைவரை பொறுத்த வரை தமிழ்செல்வனின் இழப்பு ஓர் பேரிழப்பாக இருந்தது. தலைவரின் எந்தக் கருத்தையும் மறு கேள்வி கேட்காமல் செயற்படுத்தும் உயர் விசுவாசம் கொண்ட போராளியாக அவர் இருந்தார். தலைவருக்குரிய பல தனிப்பட்ட வேலைகளையும் அவரே பொறுப்பாக செய்து கொடுப்பது வழக்கம்.

1993 இலிருந்து அரசியல்துறை நிர்வாகத்தில் தமிழ்செல்வன் அவர்களின் பொறுப்பிலே நான் பணியாற்றியிருந்தேன். உடன்பிறந்த சகோதரனின் இழப்பைப் போல அவரது இழப்பு என்னை மிகவும் பாதித்திருந்தது. எந்த வொரு வேலைத் திட்டத்தை எமக்கு விளக்கப்படுத்தும் போதும் "அண்ணை இப்படித்தான் எதிர்பார்க்கிறார் நாங்கள் அதற்கேற்ற விதமாகத்தான் செயற்படவேண்டும்' என்று வார்த்தைக்கு வார்த்தை தலைவரையே குறிப்பிடுவார். குறிபார்த்துச் சுடுவதில் மிகவும் திறமைசாலியான தமிழ்செல்வன் தமிழ் நாட்டில் ஆயுத பயிற்சியெடுத்து தலைவரின் மெய்ப்பாதுகாவலர் அணியில் செயற்பட்டிருந்தார். 1993 இல் அதுவரை மாத்தையாவின் பொறுப்பிலிருந்த அரசியல்பிரிவு இவரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளராகா தனது இறுதிக்காலம்வரை செயற்பட்டிருந்தார்.

–ஒரு கூர்வாளின் நிழலில்
பக்கங்கள் 186–187–

வரலாறு படைக்கும் தென்பகுதி மாத்தறையில் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் விஜயம் செய்து பௌத்த இந்து சமயங்களுக்கிடையிலான தொடர்பு பற்றியும் சிங்கள தமிழ் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

# பிரிவினை அல்ல

# அதிகாரப் பரவலாக்கமே தேவை

## இரா. சம்பந்தன்



மாத்தறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் முத்துகே பத்திரனவின் அழைப்பின் பேரில் சென்ற சம்பந்தன் சமாதி சமூக இன அபிவிருத்தி நிலையத்தில் வேலை வாய்ப்பு பயிற்சி பெற்ற இளைஞர்கள் மத்தியில் மேலும் உரையாற்றுகையில்,

"மாத்தறை எமது வரலாற்றில் குறிப்பிடப்பட்ட ஒரு பழைய பட்டணமாகும். பண்டைக் காலத்தில் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட ருகுணு ராஜ்ஜியம் பின்னர் ஒல்லாந்தரின் கைக்கு மாறி பிரிட்டிஷ் அரசினால் கைப்பற்றப்பட்டது. 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைக்கும் வரை பிரிட்டிஷ்சாரின் கையில் இருந்தது.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முத்துகே பத்திரனவுடன் பௌத்த விகாரைக்குச் சென்று அங்குள்ள விகாராதிபதியைச் சந்தித்தேன். அங்கிருந்து சில மைல் தொலைவில் ஒரு சிவனாலயம் இருப்பதாகவும் அது பாழடைந்து இருப்பதாகவும் விகாராதிபதி கூறினார். இலங்கையில் பிரசித்தி பெற்ற ஐந்து சிவாலயங்கள் இருந்ததாக வரலாற்றாசிரியரான சேர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். திருகோணமலையில் திருக்கோணேஸ்வரம், மன்னாரில் திருக்கேதீஸ்வரம், சிலாபத்தில் முனீஸ்வரம், கீரிமலையில் நகுலேஸ்வரம், தென் பகுதியில் தெண்டீஸ்வரம் என அவர் குறிப்பிடுகிறார். விஷ்ணு தேவாலயம் கதிர்காமம் ஆகியவற்றுக்கும் சென்றிருந்தேன்.

அங்கெல்லாம் சிறப்புப் பூஜை செய்யப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டோம். இந்தப் பூஜை வழிபாடுகளை பார்க்கும் போது சிங்கள பௌத்தம் தமிழ் இந்துவுடன் எவ்வளவு தூரம் கலாசார மரபு வழியாக பின்னிப்பிணைந்துள்ளோம் எனத் தெரிய வந்தது.

துரதிர்ஷ்டவசமாக எங்களுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையில் பிரிவினை தோன்றியது. அதனால் ஏனைய நாடுகள் அபிவிருத்தியில் முன்னேறிவிட்டன. எங்களால் அபிவிருத்தியடைய முடியவில்லை. உதாரணமாக சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யூ ஸ்ரீலங்காவைப் போல் சிங்கப்பூரை முன்னேற்றப் போவதாகக் கூறி, செய்து காட்டினார். நாங்கள் ஸ்தம்பித்துவிட்டோம்.

சிங்கப்பூர் பிரமாண்டமாக அபிவிருத்தியடைந்தது. உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகளின் பட்டியலில் சிங்கப்பூர் இருக்கிறது. ஐரோப்பிய அமெரிக்க ஆசியக் கண்டங்களில் உலக நாடுகள் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு முடிவுகட்டி நாட்டை அபிவிருத்தி செய்து சுயதேவையை பூர்த்தி செய்யும் நாடுகளாயின" என்றார்.

மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன அங்கு உரையாற்றுகையில் வடக்கிலும் தெற்கிலும் நடைபெற்ற கலவரங்கள் பற்றிக் குறிப்பிட்டார்.

"தென் பகுதியில் நடைபெற்ற கலவரங்கள் முடிவுக்கு வந்து தலைவர்கள் நாடாளுமன்றத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். வட பகுதியில் மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற கலவரம் முடிவுக்கு வந்துள்ளது. வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துரதிர்ஷ்டவசமாக மக்களின் விருப்பத்துடன் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படவில்லை. ஆனால், இன்று மக்களின் சம்மதத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஐக்கியப்பட்ட ஸ்ரீலங்காவில் ஒருகாலமும் பிரிக்கப்படாத நாட்டை உருவாக்க நாம் திட்டமிட்டுள்ளோம். நாம் இந்த நாட்டை பிளவுபடுத்த விரும்பவில்லை. ஆனால், மக்கள் தம்து பிரதேசத்துக்கு அதிகாரம் வேண்டும் என விரும்புகின்றனர். அதாவது நாட்டின் ஐக்கியம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை நிலை நிறுத்தக்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவதற்கு அதிகாரப் பரவலாக்கத்தை முன்னிறுத்த வேண்டும்.

நாட்டின் பாதுகாப்பு, இராணுவம், விமானப்படை, கடற்படை, வெளிவிவகாரம், நாணயம், நிதி, குடிவரவு குடியகல்வு என்பன மத்திய அரசின் கீழ் இருக்க வேண்டும். நாட்டை பிரிவினை இல்லாமல் வைத்திருக்க இது அவசியமாகும்.

அதிகாரப் பரவலாக்கலின் போது தென் மாகாணசபை பரவலாக்கப்பட்ட அதிகாரங்களைப் பெறும். சப்ரகமுவ, மத்திய மாகாண சபைகளும் அதேபோல் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளும் அதிகரிக்கப்பட்ட பரவலாக்கத்துடன் இயங்கும். எமது கோரிக்கை பிரிவினை அல்ல. அதிகாரப்பரவலாக்கலே" என்றார்.

## விமான விபத்தில்தான் சுபாஷ் உயிரிழந்தார்

# உறுதிபடுத்தியது ஜப்பான் அரசு



சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விமான விபத்தில்தான் உயிரிழந்தார் என்று ஜப்பான் அரசு உறுதி செய்துள்ளது. இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவரான சுபாஷ் சந்திர போஸ், இந்திய தேசிய இராணுவத்தை நிறுவி ஆங்கிலேயர்களுக்கு எதிராக போரிட்டவர். இவர் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி தைபேயில் நடந்த விமான விபத்தில் உயிர் இழந்ததாக கூறப்பட்டது. பலர் அவர் இன்னும் உயிரோடு இருப்பதாக நம்பி வருகின்றனர். அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது இன்னும் பெரிய சர்ச்சையாகவே இந்தியா மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் உள்ளது.

சுபாஷின் மரணம் குறித்த சர்ச்சைகளை அடுத்து, அவர் மறைந்தது உண்மை தானா என்பதை விசாரிக்க 3 விசாரணை கமிஷன்கள் தனித்தனியாக அமைக்கப்பட்டன. அதில் 2 விசாரணை கமிஷன்கள், சுபாஷ் சந்திர போஸ் விமான விபத்தில் இறந்தது உண்மைதான் என்று கூறின. ஆனால் நீதிபதி எம்.கே. முகர்ஜி தலைமையில் அமைக்கப்பட்ட 3 ஆவது விசாரணைக் கமிஷன் மட்டும் விமான விபத்திற்கு பின்பும் நேதாஜி சுபாஷ் உயிரோடு இருக்கிறார் என்று கூறியது. ஆக, சுபாஷ் சந்திர போஸ் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது குறித்த சர்ச்சைகள் நீடித்துக் கொண்டே இருக்கின்றன. இந்நிலையில், சுபாஷ் சந்திர போஸ் உயிரிழப்பு தொடர்பான ஆவணங்களை ஜப்பான் அரசு வெளியிட்டுள்ளது. இந்த ஆவணங்கள், 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி தைவான் நாட்டில் தைபே விமான தளம் அருகே நடந்த விமான விபத்தில் சுபாஷ் சந்திர போஸ் உயிரிழந்தார் என்று தெளிவாக்கியுள்ளது. ஜப்பான் வெளியிட்டுள்ள 17 பக்கங்கள் கொண்ட ஆவணத்தில் 7 பக்கங்கள் ஜப்பான் மொழியிலும் 10 பக்கங்கள் ஆங்கிலத்திலும் உள்ளன. இதில் விமான விபத்து நடந்தவுடன் சுபாஷ் சந்திரபோஸ் படுகாயத்துடன் பிற்பகல் 3 மணி அளவில் தைபே இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, இரவு 7 மணிக்கு உயிரிழந்தார் என்று ஆவணத்தில் காணப்படுகிறது. மேலும், ஆகஸ்ட் 22 ஆம் திகதி தைபேயில் நேதாஜி சுபாஷ் சந்தர போஸிற்கு இறுதிச் சடங்குகள் செய்யப்பட்டதற்கான குறிப்புகளும் ஆவணத்தில் காணக் கிடைக்கின்றன.

# சிலேடை

கி. வா. ஜ. அவர்கள் ஒரு கூட்டத்தில் இம்மை - மறுமை என்ற தலைப்பில் பேச அழைக்கப்பட்டிருந்தார். அவர் உரை யாற்ற ஆரம்பித்ததும் மைக் கோளாறாகி விட்டது. அதை அகற்றி விட்டு வேறு மைக் வைத்தார்கள். அதுவும் கொஞ்ச நேரத்தில் சரியாகச் செயல்படவில்லை.


கி.வா.ஜ உடனே இம்மைக்கும் சரி யில்லை, அம்மைக்கும் சரியில்லை" என பேசவிருந்த தலைப்பிற்கு ஏற் றவாறு சிலேடையில் சொல்ல அனைவரும் ரசித்தனர்.

கேரள மாநிலத்தில் உள்ள எடமுட்டத்தில் பணக்கார குடும்பத்தில் பிறந்தவர் சுஜித் குமார், காலிகட் பல்கலையில் பி.எஸ்.சி., செவிலியர் பட்டம் பெற்ற திருநங்கையான இவர், இந்தியா முழுவதும் வேலை தேடியும்



கிடைக்கவில்லை. கடைசியில், சவுதி இரா ணுவ மருத்துவமனையில் வேலைக்கு சேர்ந்தார். சில ஆண்டுகள் கடந்தபின், புதி தாக வந்திருந்த கேர்னல் ஒருவர், இவ ருடைய சான்றிதழ்களை பார்த்த போது, திருநங்கை என்று அறிந்து, இவரை பணி நீக்கம் செய்தார். தாயகம் திரும்பியவர், தன்னுடைய பெரிய வீட்டில், துணைக்கு யாரும் இல்லாத நிலையில், 10 நாய்களை வளர்ந்து வரு கிறார். 'திருநங்கையாக பிறந்தது என் குற்றமா?' என்று கேட்கும், 48 வயது சுஜிக்குமார் என்ற சுஜியை, சுவிஸ் நாட்டை சேர்ந்த கோட் என்ற வாலிபர், வாழ்க்கை துணையாக்க விரும்பிய போது, 'நாய்களையும், நண்பர்களையும் விட்டு வர முடியாது…" என கூறிவிட்டார், சுஜி!

## ஆறு வித்தியாசங்கள்



ஆறு வித்தியாசங்களை கண்டு பிடித்து
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.
எனும் மூகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

# சு டோகு புதிர் - 2

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | 4 | | | 9 | | |
| | | | 1 | 6 | | | 2 | |
| 4 | | 2 | 3 | | | 7 | | |
| | 9 | | | | 3 | | | 6 |
| 6 | | 5 | | 7 | | 4 | | |
| | | 3 | | 1 | | 2 | | 9 |
| | | | | 5 | | 8 | 1 | |
| | 7 | | | | 2 | | 4 | |
| | 8 | | 7 | | 1 | 6 | | |

**விளையாடும் முறை**

1. ஒவ்வொரு அறையிலும் 1 முதல் 9 வரை உள்ள எண்களை ஒரு முறை மட்டுமே எழுத வேண்டும்.
2. ஒவ்வொரு கிடைமட்ட (Row) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.
3. ஒவ்வொரு நெடு (column) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.

சுடோகு புதிரை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி

**சுடோகு புதிர் - 2**
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சுடோகு புதிர் 1 இன் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | 4 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 |
| 6 | 7 | 2 | 1 | 9 | 5 | 3 | 4 | 8 |
| 1 | 9 | 8 | 3 | 4 | 2 | 5 | 6 | 7 |
| 8 | 5 | 9 | 7 | 6 | 1 | 4 | 2 | 3 |
| 4 | 2 | 6 | 8 | 5 | 3 | 7 | 9 | 1 |
| 7 | 1 | 3 | 9 | 2 | 4 | 8 | 5 | 6 |
| 9 | 6 | 1 | 5 | 3 | 7 | 2 | 8 | 4 |
| 2 | 8 | 7 | 4 | 1 | 9 | 6 | 3 | 5 |
| 3 | 4 | 5 | 2 | 8 | 6 | 1 | 7 | 9 |



# குறுக்கெழுத்துப் போட்டி - 18

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 18**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | ■ |
| | ■ | 4 | | | |
| ■ | 5 | | ■ | | ■ |
| 6 | | ■ | 7 | ■ | 8 |
| ■ | 9 | | | 10 | |
| 11 | ■ | ■ | 12 | | ■ |

**இடமிருந்து வலம்**

1. காற்றுடன் பறப்பது.
4. நாட்டை ஆள்பவன்.
5. கற்பகதரு.
6. குடித்தால் மயக்குவது.
9. ஜெமினி நடித்த திரைப்படம் (குழம்பியுள்ளது)
11. கேட்கும் எழுத்து.
12. இது இதனைக் கெடுக்குமாம்.

**மேலிருந்து கீழ்**

1. இது வந்தால் பத்தும் பறந்து போகும்.
2. தாய் (குழம்பியுள்ளது)
3. பூக்களில் இருப்பது.
5. பொம்மை
7. கடலில் கிடைப்பது.
8. தோழி.
10. இன்றைய இளைஞர்கள் விரும்பி வளர்ப்பது.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடை களை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் செப். 15 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர் 17.09.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப்போட்டி - 16 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. வானவில்
4. விதி
5. வில்லு
7. காசு
8. கொடை
9. பசு
11. கிலி

**மேலிருந்து கீழ்**

1. வாடை
2. விசில்
3. மதில்
5. விசு
6. கொலுசு
7. காயம்
9. பனி
10. எலி

**சரியான விடையை எழுதியவர்கள்**

1. திருமதி செல்வராணி பாக்கியநாதன், 182 டச்சு வீதி, சாவகச்சேரி.
2. ஜெ. சியாமளாதேவி, இராஜகிரி வீதி, மானிப்பாய்.
3. என். சவிதா, கரவெட்டி, மேற்கு.
4. ப. சந்தியா, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
5. சு. சிவராசா, கூமாங்குளம், வவுனியா.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ....................................
முகவரி : ....................................
....................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 18**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# அரசகேசரியின் பதில்கள்

**கேள்வி: ஒலிம்பிக்கில் வெற்றி பெறாத சிம்பாப்வே வீரர்களைக் கைதுசெய்ய அந் நாட்டு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளாராம். ஒலிம்பிக்கில் பங்குபற்றி வெறும் கையுடன் நாடு திரும்பியவர்களுக்குத் தண்டனை கொடுக்க வட கொரிய ஜனாதிபதி முடி வெடுத்துள்ளாராம். இது என்ன விளை யாட்டு?**

கி.வரதன், கிளிநொச்சி.

பதில்:விளையாட்டு வீரர்களுக்காக அரசாங் கம் அதிகளவான பணத்தைச் செலவளிக்கும் போது அவர்கள் வெற்றிபெற்று நாட்டின் கொடியை ஏற்ற விரும்புவது இயற்கையே. ஆனால், தோல்வியடையும் வீரர்களுக்கு தண்டனை கொடுப்பது வரவேற்கத்தக்க விடயமல்ல.

**கேள்வி: வடமாகாணசபை அமைச்சர்களை விசாரிக்க குழு நியமிக்கப்பட்டுள்ளதாம். குற்ற ங்கள் வெளிவருமா?**

நி.ரோகினி, நல்லூர்.

பதில்: பொறுத்திருந்துதான் பார்க்க வேண் டும். விக்கினேஸ்வரன் ஐயா செய்வதெல் லாம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. அமைச்சர்கள் குற்றவாளிகள் என முதலமை ச்சர் கருதினால் அவர்களை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க முடியும். அவ்வாறில் லாமல் குழுக்கள் வைத்து விசாரிப்பது சுத்த ஹம்பத்தனமாக இருக்கிறது.

**கேள்வி: பான் கீ மூனின் விஜயத்தால் இலங்கை அரசியலில் மாற்றம் ஏற்படுமா?**

வி.அமுதலிங்கம்,திருகோணமலை.

பதில்: நன்மை நடக்கும் என எதிர்பார்ப் போம்.

**கேள்வி: முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் ஆட்சிக்கும் இன்றைய ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?**

டி.ஜேக்கப். வங்காலை.

பதில்: அப்போது ஜனாதிபதியின் பேச்சே இறுதியானது. இப்போது யார் பேசுவது இறுதி என்பதை சரியாகப் புரிந்து கொள்ள முடியாதுள்ளது.

**கேள்வி: வடக்கு கிழக்கு இணைப்புக்கு முஸ்லிம்களில் சிலர் எதிர்ப்புத் தெரிவிப்பதன் காரணம் என்ன?**

சி. முகுந்தன், பம்பலப்பிட்டி.

பதில்: வடகு கிழக்கு இணைந்தால் அவர்க ளின் கை ஓங்காது என்ற பயம்தான் கார ணம்.

**கேள்வி: உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் ஜனாதிபதியின் கட்சியும் பிரதமரின் கட்சியும் இணைந்து போட்டியிடுமா?**

இ.சரவணன்,முல்லைத்தீவு.

பதில்: தனித்துப் போட்டியிடப் போவதாக பிர தமரின் ஐக்கிய தேசியக் கட்சி அறிவி த்துள்ளது.

**கேள்வி: அரசமொழிக் கொள்கையில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா?**

டி. தங்கேஸ்வரி, புளியங்குளம்.

பதில்: சொல்ல முடியவில்லை.

**கேள்வி: வத்தளையில் தமிழ்ப்பாடசாலை கட்டுவதற்கு ஏன் சிலர் எதிர்ப்புத் தெரிவிக் கின்றனர்.?**

கி.வானதி, பருத்தித்துறை.

பதில்: வத்தளை சிங்களப் பிரதேசமாக இருக்க வேண்டும் என சிலர் கருது



கின்றனர்.


**கேள்வி: இந்தியாவும் பாகிஸ்தானும் ஏட்டிக்குப் போட்டியாக நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குவது எதற்காக?**

ஏ.பஸ்தியன், வவுனியா..

பதில்: சந்தோசமாகச் சண்டை போடத்தான்.

அரசியல், சினிமா,
விளையாட்டு சம்பந்தமான உங்கள்
கேள்விகளை தபால் அட்டையில்
எழுதி அனுப்பவும்.
*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*
அரசகேசரி
தினச்செய்தி
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

## காதலி கடித்து, காதலன் பலி



ஜூலியோ கோன்சலஸ் (Julio Macias Gonzalez) மெக்சிகோவில் வசித்து வரும் 17 வயது வாலிபர். ஜூலியோ கோன்சலஸ் 24 வயது நிரம்பிய இளம் பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்தனர். இருவரது காதலும் நன்றாக தான் சென்றுக் கொண்டிருந்தது. ஓர் இனிய மாலை வரை. சில நாட்களுக்கு முன்னர், குடும்பத்துடன் டின்னர் உண்டுக் கொண்டு இருக்கும் போது ஜூலியோ கோன்சலஸ் -க்கு வலிப்பு வந்தது. டின்னர் டேபிளில் சுருண்டு விழுந்தார். இதனால் பிரைன் ஸ்ட்ரோக் உண்டாகி ஜூலியோ கோன்சலஸ் சில மணிகளில் பரிதாபமாக உயிரிழந்தார்.

வலிப்பு வர காரணம் அன்று டின்னர் உட்கொள்ளும் முன்னர் ஜூலியோ கோன்சலஸ்-க்கு அவரது காதலி கொடுத்த லவ் பைட் (முத்தமிட்டு கடிப்பது) தான் என தெரியவந்துள்ளது.

ஜூலியோ கோன்சலஸ்-ன் காதலி கொடுத்த காதல் கடியின் காரணமாக உண்டான இரத்த கட்டி, ஜூலியோ கோன்சலஸ்-ன் மூளை வரை பயணித்து சென்றுள்ளது. இதன் காரணமாக வலிப்பு வந்தது.

மருத்துவ உதவியாளர்கள் உடனடியாக இடத்திற்கு வந்தும் கூட பயனேதும் இன்றி ஜூலியோ கோன்சலஸ் பரிதாபமாக உயிரிழந்தார். லவ் பை என்ற பெயரில் ஜூலியோ கோன்சல ஸ்-ன் காதலி கழுத்தில் கடித்து உறிஞ்சியதால் தான் இரத்த கட்டி உருவானது மருத்துவ பரிசோதனையில் தெரியவந்து ள்ளது. இது தான் ஜூலியோ கோன்சலஸ்-க்கு பிரைன் ஸ்ட்ரோக் ஏற்பட காரணமாக இருந்துள்ளது

தன் காதலன் இறப்புக்கு தான் காரணமா என்ற அச்ச த்தில் காதலி மாயமாகிவிட்டார். ஜூலியோ கோன்சலஸ்-னதன் காதலன் இறப்புக்கு தான் காரணமா என்ற அச்சத்தில் காதலி மாயமாகிவிட்டார். ஜூலியோ கோன்சலஸ்-ன் பெற்றோர் காதலி யால் தங்கள் மகன் இறந்தார் என குற்றம் சாற்றியுள்ளனர்.

இந்த நிகழ்வு இதுவே முதல் முறை அல்ல, நியூசிலாந்த்தில் ஒருமுறை காதலன் ஒருவர் அவரது காதலிக்கு கழுத்தில் லவ் பைட் என்ற பெயரில் கடித்தால், கழுத்தின் முக்கிய நரம்பில் தாக்கம் உண்டாகி அவ ருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. அந்த பெண்ணின் வயது 44.

திடீர் பக்கவாதத்திற்கு என்ன காரணம் என மருத்துவர்கள் போராடி கடைசியில் லவ் பைட் தான் காரணம் என கண்டறிந்தனர்.

## வேற்று கிரகவாசிகள் அனுப்பிய சிக்னல்




உண்மையில் வேற்று கிரகவாசிகள் உள்ளார்களா? இல்லையா? என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆனால் அதை பற்றிய பரபரப்பு செய்திகளுக்கு மட்டும் குறையே இல்லை.

அந்த வகையில் ரஷ்யாவின் தொலை நோக்கியான ஜெலென்சு க்ஷயா பூமிக்கு அப்பால் இருந்து ரேடியோ சிக்னல் ஒன்றை கண்டறிந்துள்ளது. இந்த சிக்னல் 6.3 மில்லியன் பழமை வாய்ந்த நட்ச த்திரத்தில் இருந்து வருகிறது என்றும், 94.4 ஒளியாண்டுகளை கடந்து வருகிறது எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த ரேடியோ சிக்னலை வேற்று கிரகவாசிகள் அனுப்பி இருக்கலாம் என வும் கருதப்படுகிறது. அதுமட்டும் அல்லா மல் அவர்கள் பூமியை தொடர்பு கொள்ள இந்த ரேடியோ சிக்னலை அனுப்பி இருக் கலாம் எனவும் கருதப்படுகிறது. இதனால் இந்த ரேடியோ சிக்னல் குறித்து விஞ்ஞா னிகள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

வேற்றுக்கிரகவாசிகள் பற்றி அவ்வப் போது வரும் செய்திகள் பரபரப்பாக பேசப்படுவதும் பின்னர் அடங்கி போவ தும் வழமையானது. . வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய தகவல்களை எந்த ஒரு நாடும் பகிரங்க படுத்தவில்லை.

## எலெக்ட்ரொனிக் பூச்சிகள்!



கற்பனைத் திறனும் ஆர்வமும் இருந் தால், குப்பையையும் கலையாக மாற்ற லாம் என உலகம் முழுவதும் பலரும் பல வகையில் நிரூபித்து வருகிறார்கள். அதில், இது வேற லெவல்" என்கிறார் பிரிட்டனைச் சேர்ந்த ஜூலி ஆலிஸ் சேப்பல் (Julie Alice Chappell)

பழைய கொம்பியூட்டர் மற்றும் லப்டப்க ளில் உள்ள சர்க்யூட் போர்டு, வயர், பட்டன் கள் போன்ற எலெக்ட்ரொனிக் பொருட்க ளைச் சேகரிக்கிறார். அவற்றில், வண்டு, பட்டாம்பூச்சி, தும்பி என ஆச்சர்யமூட்டும் உருவங்களை உருவாக்குகிறார். அவற்று க்கு வண்ணம் தீட்டி, "வாவ்" என அனை வரையும் வாயைப் பிளக்கவைக்கிறார்.

## புற்றுநோயை கண்டுபிடிக்கும்!





வீட்டை காவல் காத்து வந்த நாய்கள், பின், குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும் ஈடு படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், புற்றுநோயை மிக துல்லியமாக கண்டுபிடி க்கும் திறமை, நாய்களுக்கு இருப்தாக சமீ பத்திய ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த, 1989ல் சர்வதேச மருத்துவ பத்தி ரிகையான, "லான்செட்"டுக்கு பெண் ஒருவர் எழுதிய கடிதத்தில், தன் உடலில் ஒரு மச்சம் உள்ளதென்றும், அதை, தன்னுடைய நாய் நுகர்ந்து பார்த்து, தொல்லை செய்தது விரட் டினாலும், போவதில்லை. அந்த மச்சம் வள ர்ந்து வருவதால், மருத்துவரிடம் சென்று, சோதனை செய்ததில், அது, புற்றுநோய் என உறுதி செய்யப்பட்டதாக தெரிவித்திருந்தார்.

அதையடுத்து, நடைபெற்ற ஆராய்ச்சியில் தான், நாய்களுக்கு இந்த திறமை இருப்பது உறுதி செய்யப்பட்டது.

# அள்ளித் தந்த நல்லவர் எம்ஜிஆர்...!



புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பொறுத்தவரை தன்னை வைத்து படம் எடுப்பவர்களுக்கு எந்தப் பிரச்சனை வந்தாலும் அதைத் தன்னுடைய சொந்தப் பிரச்சனையாக எடுத்துக் கொண்டு அதைச் சரி செய்து படத்தையும் நல்லமுறையில் எடுத்து கொடுத்து வியாபாரத்திற்கும் பொறுப்பேற்று படத்தை வெளியிடுகின்ற வரையிலும் முக்கியப்பங்கு வகிப்பார். நடிகை கண்ணாம்பா எம்.ஜி.ஆரை வைத்து தயாரித்த “தாலி பாக்கியம்“ படமும் இதற்கு விலக்கல்ல. இந்தப் படத்துக்கு அவுட்டோரில் ஒரு பிரச்சனை வந்தது. அதையும் தனது சொந்தப் பிரச்சனையாக எடுத்து தீர்த்துக் கொடுத்தார்.

நடிகை கண்ணாம்பா எம்.கே-தியாகராஜா பாகவதருக்கும் (அசோக்குமார்) பி.யூ. சின்னப்பாவிற்கும் (கண்ணகி) ஜோடியாக நடித்தவர். எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் (தாய்க்குபின் தாரம், தாய் சொல்லைத் தட்டாதே) சிவாஜி அவர்களுக்கும் (உத்தமபுரத்திரன், மனோகரா) அம்மாவாக நடித்தவர். இவர் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக நடிக்க வைத்து, “தாலி பாக்கியம்“ என்று சொந்தமாக ஒரு படத்தை தயாரித்தார். இதில் சரோஜாதேவி, எம்.என்.ராஜம், எஸ்.வி.சுப்பையா, எம்.என். நம்பியார் ஆகியோர் நடித்தார்கள். இந்தப் படத்திற்கான வசனத்தை ஆரூர்தாஸ் எழுதியிருந்தார். இசையை கே.வி. மகாதேவன் அமைத்தார். படத்தின் இயக்குநராக முதலில் எம்.ஏ.திருமுகத்தை போட்டார்கள். ஆனால் கண்ணாம்பாவின் கணவர் கே.பி. நாகபூஷணம் தங்களது சொந்தப் படம் என்பதால் தானே இந்தப்படத்தை இயக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்துவிட்டார். அதனால் “தாலி பாக்கியம்“ படத்தை கே.பி.நாகபூஷணம்தான் இயக்கினார்.

கண்ணாம்பா எம்.கே.தியாகராஜாபாகவதருடன் ஜோடியாக நடித்த அசோக்குமார் படத்தை அடிப்படையாகக் கொண்டு தாலி பாக்கியத்தை உருவாக்கினார்கள். ஒரு வயதானவர் (எஸ்.வி.சுப்பையா) தனக்கு இரண்டாந்தாரமாக ஒரு பெண்ணைப் (எம்.என் .ராஜம்) பார்த்து திருமணம் செய்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்கிறார். அதற்காக தனது பக்கத்து வீட்டிலிருக்கும் இளைஞன் (எம்.ஜி. ஆர்.) ஒருவரை உடன் அழைத்துச் செல்கிறார். அங்கே மணப்பெண் உடன் வந்த இளைஞன்தான் மாப்பிள்ளை என்று நினைத்து திருமணத்திற்கு சம்மதம் தெரிவிக்கிறார். திருமணநாளும் வருகிறது. தாலிகட்டும் போதுதான் தெரியவருகிறது மாப்பிள்ளை இளைஞனில்லை, கிழவர் தான் என்று. அவளால் மறுக்க முடியவில்லை. ஊருக்காக கிழவனையும், உள்ளத்தில் இளைஞனையும் கணவனாக ஏற்றுக் கொள்கிறாள். அதற்காக அவர்களது குடும்பத்தில் சூழ்ச்சிகளைச் செய்கிறாள். அதனால் பலவிதமான பிரச்சனைகள் உருவாகின்றன. இளைஞனுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் இருந்து வந்த காதலிலும் பிரச்சனைகள் தலை தூக்குகின்றன. இப்படி போகிறது இந்த படத்தின் திரைக்கதை.

“தாலி பாக்கியம்“ படத்திற்கான அவுட்டோர் படப்பிடிப்பு கர்நாடகாவில் உள்ள முக்கியபகுதிகளில் நடந்ததுக் கொண்டிருந்தது. அவுட்டோரில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், நடிகர், நடிகையர்கள் கலந்துக் கொண்டனர். எம்.ஜி.ஆர், சரோஜாதேவி சம்பந்தபட்ட காதல் காட்சிகள், எம்.ஜி.ஆர். - எம்.என்.ராஜம் சம்பந்தட்ட மோதல் காட்சிகள், எம்.ஜி.ஆர், எம்.என்.நம்பியார் சம்பந்தப்பட்ட சண்டைக் காட்சிகள் வேகமாக படமாக்கப்பபட்டன. ஒருநாள் இதேபோன்று படப்பிடிப்பு நடந்து முடிந்து அனைவருக்கும் சம்பளமும், பேட்டாவும் கொடுப் பதற்கு ஏற்பாடுகள் செய்தார்கள். அப்பொழுதுதான் தெரிய வந்தது தயாரிப்பாளர் தரப்பில் மொத்த படப்பிடிப்பிற்காக கொண்டு வந்த பணம் திருட்டு போயிருப்பது. தயாரிப்பாளர் கண்ணாம்பா, அவரது கணவர் கே.பி.நாகபூஷணம் அவுட்டோரில் வந்து மாட்டிக் கொண்டோம் என்று அதிர்ச்சியடைந்தார்கள். படப்பிடிப்பு குழுவினரால் பணம் திருட்டு போன விஷயம் பரபரப்பாக பேசப் பட்டது. யார் யாரையோ விசாரித்துப் பார்த் தார்கள். திருட்டுப் போன பணம் திரும்பி வரவேயில்லை. இப்பொழுது என்ன செய்வது, தொடர்ந்து படப்பிடிப்பை நடத்துவதா? கேன்சல் செய்துவிட்டு ஊருக்கு கிளம்புவதா? அப்படி ஊருக்குப் போவதாக இருந்தாலும் அவர்களுக்கு தரவேண்டிய பணத்தை செட்டில் செய்யாமல் எப்படி போவது? இடிந்து போய் உட்கார்ந்துவிட்டார்கள் இருவரும்.

இந்தச் செய்தி பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆரின் காதுகளுக்குச் சென்றது தொழிலாளர்களும், நடிகர் நடிகையர்களும் பிரச்சனைகளை அவரிடம் கொண்டு சென்றார்கள். கண்ணாம்பாவும், அவரது கணவர் கே.பி. நாகபூஷணமும் அதிர்ச்சியில் எதுவும் பேசாமல் அமைதியாகஅமர்ந்துவிட்டார்கள். எம்.ஜி.ஆர் சூழ்நிலையைப் புரிந்துக் கொண்டு அனைவரையும் வரவழைத்து அமைப்படுத்தினார். தயாரிப்பாளர்களுக்கு தைரியம் சொன்னார். படப்பிடிப்பு நிற்க வேண்டாம் அவுட்டோர் படப்பிடிப்பு திட்டமிட்டபடி நடக்கட்டும். எல்லாப் பிரச்சனைகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன். பணத்திற்கும் ஏற்பாடு செய்கிறேன் என்றார். எம்.ஜி.ஆர் உடனடியாக பணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தமிழ் நாட்டிலுள்ளள சத்தியா ஸ்டுடியோவிற்கு டிரங்க்கால் போட்டு எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் குஞ்சப்பனிடம் பேசினார். படப்பிடிப்பிற்கான தொகை ரூபாய் ஐந்து லட்சத்தை உடனடியாக கொண்டு வரச்சொன்னார். கேட்ட பணம் முழுவதும் படப்பிடிப்பு நடக்கும் இடத்திற்கே வந்து சேர்ந்தது. அனைவருக்கும் சம்பளமும், பேட்டாவும் கொடுக்கப்பட்டது. திட்டமிட்டப்படி அவுட்டோர் படப்பிடிப்பு முழுவதும் நடந்து முடிந்தது. “தாலி பாக்கியம்“ படத்தின் தயாரிப்பாளர் கண்ணாம்பா எம்.ஜி.ஆர். அவர்களுக்கு தனிப்பபட்ட முறையில் சந்தித்து நன்றி சொன்னார். ”படம் எடுக்க கால்ஷீட்டும் கொடுத்து படப்பிடிப்பில் பிரச்சனை வந்ததால் பணமும் கொடுத்து எனக்கு எந்தப் பிரச்சனையும் வராமல் பார்த்துக் கொண்டீர்கள். என்றென்றும் நன்றியோடு இருப்போம்,” என்றார்.




கண்ணாம்பா தனது இறுதிக் காலத்தில் தியாகராய நகரிலுள்ள தனது வீட்டை விற்க முயற்சி செய்தார். அந்த வீட்டை எம்.ஜி. ஆர்.விலை கொடுத்து வாங்கிக் கொண்டார். ”உங்களது இறுதிக் காலம் வரை நீங்கள் இந்த வீட்டில்தான் இருக்க வேண்டும். வேறு வீட்டிற்கு போகக் கூடாது,” என்று வேண்டுகோள் வைத்தார். கண்ணாம்பாவும் தனது கடைசிகாலம் வரைஅந்த வீட்டில்தான் இருந்தார். அவர் இறந்த பிறகுதான் எம்.ஜி. ஆர்.அந்த வீட்டைப் பயன்படுத்திக்கொள்ள ஏற்பாடுகள் செய்தார். கவிஞர் வாலி எம்.ஜி.ஆரை சரியாக கணித்துத்தான் பாடல் எழுதினார். “உள்ளமதில் உள்ளவரை அள்ளிதரும் நல்லவரை விண்ணுலகம் வா என்றால் மண்ணுலகம் என்னாகும்....“


கண்ணாம்பா

## எதற்காக இந்த குட்டி பொக்கெற்



எல்லா விஷயங்களும் ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் உருவாக்கப்படுகின்றன. ஆனால், காலப்போக்கில் நாம் அதை ஏன்? எதற்காக என தெரியாமலேயே விட்டு விடுகிறோம் அல்லது அதை வேறு எதற்காகவாவது உபயோகிக்க துவங்கு விடுகிறோம். பெரிய, பெரிய விஷயங்களில் இருந்து நாம் தினமும் உடுத்தும் ஆடைகள் வரை பலவற்றில் நாம் இதை காண முடியும். அதில் ஒன்று தான் ஆண்கள் வருடம் முழுக்க தினமும் உடுத்தும் ஜீன்ஸ் பொக்கெற்றில் இருக்கும் ஒரு குட்டி பொக்கெற். பெரும்பாலும் நாம் இதை பயன்படுத்தவே மாட்டோம். ஆனால், இது உருவாக்கப்பட்ட போது ஒரு தனிப்பட்ட காரணத்திற்காக தான் டிஸைன் செய்தனர்.800களில் கவ்போய் கலாசாரத்தில் அவர்கள் பயன்படுத்தும் தொப்பி, ஜாக்கெட், ஷூ, என எல்லா பொருட்களும் சற்று வித்தியாசமாக தான் இருக்கும்.

அந்த வித்தியாசமான பொருட்களில் கடிகாரமும் ஒன்று. அவர்கள் சங்கிலியில் இணைக்கப்பட்ட கடிகாரத்தை தான் அதிகமாக பயன்படுத்தி வந்தனர். அவர்கள் அதை கோட்டில் தொங்கவிட்டு பயன்படுத்தி வந்தனர்.அது சில சமயங்களில் உடையவும் வாய்ப்புகள் இருந்தன. இதை மாற்ற தான் லீவிஸ் ஜீன்ஸ் கம்பெனி ஜீன்ஸ் பேண்ட்டில் இந்த குட்டி பொக்கெற் முறையை அறிமுகப்படுத்தியது.

சிலர் இதை டிக்கட் பொக்கெற் என்றும் குறிப்பிடுகின்றனர். ஆரம்ப காலத்தில் அவரவர் தனியாக தைய்த்து உடை உடுத்தும் வழக்கம்தான் இருந்து வந்தது. அப்போது, எளிதில் தொலைந்து போகும் டிக்கட் போன்ற சிறிய பொருட்களை வைக்க டிக்கட் பொக்கெற் என்ற ஒன்றை பயன்படுத்தி வந்தனர். பின்னாளில் ஜீன்ஸ் வழக்கத்திற்கு வந்த பிறகு, அதற்காக இது சேர்க்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

லீவிஸ் ஜீன்ஸ் கம்பெனியில் பணியாற்றிய நபர் (என்ற பெயரில்) இணையத்தளம் ஒன்றில் கூறியிருக்கும் பதிலில், இது காண்டம் பொக்கெற் என்றும். 19 ஆம் நூற்றாண்டில் ஜீன்ஸ் உற்பத்திக்கு வந்த பிறகு இதை வாட்ச் ஒக்கெற் என மாற்றி அழைக்கதுவங்கினர் என்றும் கூறியுள்ளார்.

ஜீன்ஸ் உற்பத்தி துறையில் பணிபுரியும் நபர் ஒருவர், இதை கோய்காய்ன் பொக்கெற் என்று அழைப்பதுண்டு. ஆனால், இது ஆரம்பத்தில் 18-ம் நூற்றாண்டில் ஃபாப் என அழைக்கப்படும் சங்கிலி கடிகாரம் (Chain Watch)வைக்க தான் டிஸைன் செய்யப்பட்டது என கூறியுள்ளார்.

## சலவைக்கல் படகு




சீனாவின்கன்மிங் ஏரியின் ஒருபகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த சலவைக்கல் படகு, 36 மீற்றர் நீளமும் எட்டு மீற்றர் உயரமும் கொண்டது. 1893ல் தான் பேரரசி சிக்சியால் இது நிர்மானிக்கப்பட்டது. இரு அடுக்குகளைக் கொண் ட இந்த மாபெரும் படகு கொஞ்சம் ஐரோப்பியக் கட்டடக்கலையினையும் இணைத்து கட்டப்பட்டதுபேரரசி சிக்ஸி சில சமயங்களில் தன்னைப் பார்க்க வருபவர்களை இங்கேயே சந்தித்தாராம். இரவு வேளையில் நிலாக் காலங்களில் இந்தப் படகில் அமர்ந்து பொழுதுபோக்குவது அவருக்கு மிகவும் பிடித்த ஒன்றாம்.நீரும், நிலமும், கோவில்களும், அரண்மனைகளும் சூழ்ந்து அந்த இடம் தேவலோகம் போலக் காட்சியளித்தது.

## பிரம்மாண்ட படத்தில் ஜெயம் ரவி



சுந்தர்.சி. அடுத்ததாக தன்னுடைய இயக்கத்தில் வரலாற்று பின்னணியில் அமைந்த பிரம்மாண்ட திரைப்படம் ஒன்றை உருவாக்கவிருக்கிறார். இப்படத்தை மிகப்பெரிய பட்ஜெட்டில் தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கவிருக்கிறது. இது தேனாண்டாள் பிலிம்ஸ் தயாரிக்கும் 100 ஆவது படமாகும். இப்படத்தில் நடிக்க ஜெயம் ரவியிடம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இதில் நடிக்க அவர் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. இவருடன் தெலுங்கு நடிகர் மகேஷ் பாபுவும் நடிக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

## ஹாலிவுட்டில் அரவிந்தசாமி!



ஹாலிவூட் படத்தில் நடிக்கவிருக்கும் அரவிந்த்சாமி, அதற்காக, லண்டன் சென்று, தன் எடையை குறைத்து, "பொடி லாங்குவேஜை" மாற்றி வருகிறார்.



## பாகுபலியை கட்டப்பா கொலை செய்யவில்லை?

பாகுபலி இரண்டாம் பாகத்தில் இதற்கு என்ன பதில் வைத்திருக்கிறார் ராஜமௌலி என்பதை அறிவதற்காகவே பாகுபலி 2 படத்தை ஆவலுடன் உலகம் எதிர்பார்க்கிறது. இப்போது திடீர் திருப்பமாக, பாகுபலி உயிருடனும் இருக்கலாம் என்று புதுக்குண்டை வீசியிருக்கிறார், கதாசிரியரும், ராஜமௌலியின் தந்தையுமான விஜயேந்திர பிரசாத்.சமீபத்தில் அவர் அளித்த பேட்டியில், பாகுபலியை கட்டப்பா குத்தினார் என்பது எல்லோருக்கும் தெரியும், ஆனால், பாகுபலி உயிருடனும் இருக்கலாம் என்று கூறி, பாகுபலி எதிர்பார்ப்பில் திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறார். பாகுபலி 2 வெளியாகும்வரை சஸ்பென்சுக்காக காத்திருக்க வேண்டியதுதான்.



## அனுஷ்காவான ஸ்வீட்டி

34 நான்கு வயதிலும் 16 வயது சிறுமி போ
வருகிறார் நடிகை அனுஷ்கா. தெலுங்கு இயக்
அழைப்பால் நடிப்புத் துறைக்கு உள்ளே வந்தார். நடி
மல் சினிமாத் துறைக்கு வந்தவர். அவரை அடையாளப்ப
என்றால் கையில் இருந்த பாஸ்போர்ட் சைஸ் ஃபோட்டோ மட்டுமே.
ஹைதராபாத் அழைத்துச் சென்று ஃபோட்டோ ஷூட் எடுத்தார்கள். படிப்பு மற்
என எல்லாவற்றிலும் பெயர் "ஸ்வீட்டி" என்றே இருக்கும். அதைத்தான் "இஞ்சி இடுப்பழகி"
வைத்தார்கள். அனுஷ்கா என்கிற பெயர் சினிமாவுக்காக வைக்கப்பட்டது. ஆரம்பத்தில் நா
என்று கூப்பிட்ட பிறகுதான், திரும்பிப் பார்ப்பார். அதுவே, ஸ்வீட்டி என்றால் உடனே திரும்





# ஜெய்யின் அபிமான நாயகி

ஜெய் - அஞ்சலி இணைந்து நடித்த, எங்கேயும் எப்போதும் படம், சூப்பர் ஹிட்டானது. அதையடுத்து, சில காலம், காதலர்களாக சுற்றித் திரிந்த அவர்கள், பின்னர் பிரிந்து விட்டனர். இருப்பினும், தற்போது தான் நடிக்கும், திகில் படத்தில் நடிக்க, அஞ்சலிக்கு அழைப்பு விடுத்துள்ளார், ஜெய். அவர் கேட்ட அதே திகதியில், வேறொரு தெலுங்கு படம் இருந்த போதும், ஜெய் விரும்பி கேட்டதால், தெலுங்கு பட தயாரிப்பாளரிடம் பேச்சு வார்த்தை நடத்தி, அந்த கால்ஷீட்டை, ஜெய் படத்துக்கு கொடுத்துள்ளார், அஞ்சலி.



லை?

ஜமௌலி
ர்பார்க்கிறது.
துக்குண்டை
ந்திர
தினார் என்பது
என்று கூறி,



# குத்துப்பாட்டால் வாய்ப்பிழந்த நயன்

சூர்யா நடிப்பில் "சிங்கம் 3" படத்தை இயக்கி வரும் ஹரி, அடுத்து விக்ரம் நடிக்கவுள்ள "சாமி 2" படத்தை இயக்கவுள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே. இப்படத்தில் த்ரிஷா மற்றும் நயன்தாரா நாயகிகளாக நடிக்கவுள்ளதாக கூறப்பட்டது. ஆனால் இந்த தகவலை தற்போது ஹரிக்கு நெருக்கமான தரப்பு மறுத்துள்ளது. விஜய், தனுஷ் படங்களில் ஒரு பாடலுக்கு நடனமாடிய நயன்தாரா தனது "சிங்கம் 2" படத்தில் நடனமாட மறுத்துவிட்டார். ஹரி இனிமேல் தனது படத்தில் நயன்தாராவை புக் செய்வதில்லை என முடி வெடுத்து விட்டதாகவும் இதன் காரணமாக "சாமி 2" படத்தில் நயன்தாரா நடிக்க வாய்ப் பில்லை என்றும் கூறப் படுகிறது.





விஷால் நடித்து வரும் 'கத்திச்சண்டை' படத்தில் ஸ்ருதிஹாசன் இணைய வுள்ளார். இப்படத்தின் கதாநாயகியாக தமன்னா நடித்துவரும் நிலையில், தற்போது ஸ்ருதிஹாசன் இப்படத்தில் ஒரு பாடல் பாடவுள்ளார். ஹிப் ஹொப் தமிழா ஆதி இசையமைப் பில் உருவாகும் ஒரு பாடலை பாடுவதற்காக ஸ்ருதிஹாசனை அணுகிய தாகவும், அவர் பாட ஒப்புக்கொண்டுள்ள தாகவும் கூறப்படுகிறது.

# விஷால் படத்தில் ஸ்ருதிஹாசன்

யது சிறுமி போல துறு துறுவென நடித்து
தெலுங்கு இயக்குநர் பூரி ஜெகநாத்
ள வந்தார். நடிப்புப் பற்றி எதுவும் தெரியா
அடையாளப்படுத்துவதற்கான படம்
டோ மட்டுமே. அதற்கு பிறகு,
ள். படிப்பு மற்றும் பாஸ்போர்ட்
சி இடுப்பழகி" படத்தில் "ஸ்வீட்டி" என்று
ரம்பத்தில் நான்கு, ஐந்து முறை அனுஷ்கா
டனே திரும்பிப் பார்த்து விடுவார்.



# புலிகளின் இறுதி நாட்கள் ஒரு காலக்குறிப்பு

மே-13-2009: இந்திய பாராளுமன்றத் தேர்தலில் இறுதிக்கட்ட வாக்களிப்பு.

மே-14-2009: அமெரிக்க அதிபர் ஒபாமா "புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்". இதற்கு சில வாரங்களுக்கு முன்பு அமெரிக்காவின் பாதுகாப்பு புலனாய்வு மற்றும் முக்கிய அதிகாரிகள் இலங்கை சம்பந்தமாக இரகசிய சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர்.

மே-14-2009: முல்லைத்தீவில் குறுகிய நிலப்பரப்பிற்குள் சிக்கிய புலிகளை இன்னும் 48 மணி நேரத்திற்குள் முழுமையாகத் தோற்கடித்து புலிகளின் பிடியிலுள்ள பொதுமக்களை படைவீரர்கள் விடுவித்து விடுவார்களென நம்புகின்றேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜோர்தான் சென்ற ஜனாதிபதி அங்கு தொழில் புரியும் இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

மே-15-2009: இலங்கையில் பாதுகாப்பு வலயத்தினுள் சிக்கியுள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றுவது மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க கடற்படையினர் தயார் நிலையில் இருந்தார்கள்.

அமெரிக்க பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் திமேத்தி ஜே கீட்டிங் படகு கொன்றின் மூலம் தப்பிச் செல்ல முயன்ற கடற்புலிகளின் தலைவர் சூசையின் மனைவி,மகன்,மகள் மற்றும் இரு உறவினர்கள் இன்று (மே.15.2009) மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் டீ.கே.பி திஸநாயக்க தெரிவித்தார்.

புலிகளின் சிரேஷ்ட முக்கிய தளபதிகளான சொர்ணம் மற்றும் சசி மாஸ்ரர் ஆகிய இருவரும் (மே.15.2009)ல் கொல்லப்பட்டனர். வெள்ள முள்ளி வாய்க்கால் பிரதேசத்தில் நிலைகொண்டுள்ள பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில்களிலேயே இவர்கள் இருவரும் கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

பாதுகாப்பு வலயத்திற்குள் முடக்கப்பட்ட பிரபாகரனையும் அவரது முக்கிய சகாக்களையும் இலக்கு வைத்து படையினர் தாக்குதல் நடத்திய வண்ணம் முன்னேறி வருவதாகவும் இறுதிக்கட்ட நடவடிக்கை வெற்றியளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மே-16-2009:இன்று இந்தியத் தேர்தல் முடிவுகள் வெளியாகின. விடுதலைப் புலிகளுக்கு அனுதாபமான அரசியல் கட்சிகள் தோல்வியடைந்தன.

மே-16-2009:" நாங்கள் எதுவும் செய்யத் தயாராக இருக்கின்றோம்" என்று எல்ரிரிஈ சர்வதேசப் பொறுப்பாளர் இன்று அமெரிக்க அதிபர் ஒபாமாவிற்கு வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். சில தினங்களுக்கு முன்னர் எல்ரிரிஈ அயுதங்களை ஒப்படக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் விடுத்த வேண்டுகோளிற்கு இந்தியத் தேர்தல் முடிவுவரை காத்திருந்துவிட்டு தற்போது நாங்கள் எதுவும் செய்யத் தயாராக இருக்கின்றோம் என எல்ரிரிஈ தெரிவித்துள்ளது.

மே-16-2009: ஜோர்தானுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுதலைப் புலிகளின் காட்டுமிராண்டித் தனமான நடவடிக்கைகளில் இருந்து விடுதலை பெற்ற நாட்டிற்கு நான் நாளை திரும்புவேன் என்று கூறியுள்ளார்.முன்னதாக பி.பி.ஸி.ற்கு செவ்வி வழங்கிய இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஒரு சதுரக் கிலோ மீற்றர் நிலப்பரப்பில் விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

மே-17-2009: வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் சிவிலியன்களை முற்றாக விடுவித்த இராணுவத்தினர் 400x600 மீற்றர் பெட்டிக்குள் எல்ரிரிஈ தலைவர்களை முடக்கியதாக களநிலைத்தகவல்கள் தெரிவிக்கின்றன. புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்வதாகவும் இன்றைய இரவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் எனவும் களநிலைத் தகவல்கள் தெரிவித்தன.

மே-17-2009: இலங்கை விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தனது தேசியப் பாதுகாப்பு ஆலோசகருடன் ஆலோசனை நடத்தியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவிக்கின்றது.

இந்தியப் பிரதமர் அவர்கள் தனது தேசியப் பாதுகாப்பு அலோசகருடன் மேற்கொண்ட ஆலோசனை குறித்த மேலதிக விபரங்கள் வெளியிடப்படவில்லை.

மே-17-2009: சூசை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி.

'ஜெனீவாவில் உள்ள அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுக்கொண்டோம். நாம் அவர்களை (மக்களை) அனுப்பி வைக்கின்றோம். நீங்கள் பொறுப்பு எடுங்கள் எனக் கேட்டோம். இருந்த போதிலும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை. இங்கு என்ன நடைபெறுகின்றது என்பதையிட்டு எவ்விதமான அக்கறையும் இல்லாததாகவே அனைத்துலக சமூகம் இருக்கின்றது. நாம் படையினருடன் தொடர்ந்தும் சண்டையிட்டுக் கொண்டே இருக்கின்றோம்.

இறுதி வரையில் நாம் அடிபணியப் போவதில்லை. கடுமையான சண்டை நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. அதற்குள் பொதுமக்களும் கொல்லப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அனைத்துலக சமூகம் திரும்பிப்பார்க்கவேயில்லை. நாங்கள் நேற்று முன்தினம் (மே-15-2009) இரவு தொடக்கம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். போர் இப்போது இறுதிக் கட்டத்தில் உள்ளது. இப்போது கடைசி மணித்தியாலச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இரண்டு கிலோ மீற்றர் நிலப்பரப்பிற்குள் பரவலாக ஆட்லறி தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

மே-17-2009: "எமது துப்பாக்கிகளை மௌனமாக வைத்திருப்பதற்கு நாம் தயாராக உள்ளோம் என்ற எமது நிலைப்பாட்டை உலகத்திற்கு நாம் ஏற்கனவே அறிவித்திருக்கிறோம். ஆனால் இந்தக் கோரிக்கையாருடைய காதிலும் விழவில்லை. இராணுவத்திடம் சரணடையும் போராளிகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு அனைத்துலக சமூகத்தை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தப் போர் கசப்பான ஓர் முடிவுக்கு வந்திருக்கின்றது. எம்மிடம் இப்போது கடைசியாக ஒரே ஒரு தெரிவு தான் இருக்கின்றது. எமது துப்பாக்கிகளை மௌனிக்கச் செய்வதற்கு நாம் தீர்மானித்திருக்கிறோம்."

செல்வராஜா பத்மநாதன்
சர்வதேச இணைப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

மே-17-2009: " தமிழ் புலிகள் சர்வதேச சமூகத்திடம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக தம்மிடம் மிகத் தெளிவாகத் தெரிவித்து உள்ளனர்" என மே 17 2009 மாலை நோர்வே அபிவிருத்தி மற்றும் உதவி நிவாரண அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்துள்ளார்.

மே-17-2009: தமிழ் புலிகளுடன் தான் பல தடவைகள் தொடர்பு கொண்டதாக தெரிவித்து உள்ள எரிக்சொல்ஹெய்ம் அந்தப் பகுதிகளுக்கு சென்று சுயாதீனமாக நிலைமைகளை ஆராய்வதும் காயப்பட்டவர்களை மீட்பதுமே இப்போதுள்ள முக்கிய விடயம் எனத் தெரிவித்துள்ளார்.

மே-17-2009: இராணுவம் இன்று (மே .17:2009)காலை எல்.ரி.ரி.ஈ யினரால் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்த 4 கடற்படை வீரர்களை மீட்டுள்ளனர். இவ்வாறு 4 கடற்படை வீரர்களையும் 3 இராணுவத்தினரையும் மீட்டுள்ளதாக படைத்தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

மே-17-2009: புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட இராணுவ வெற்றிச் செய்தியை எதிர்வரும் 19ஆம் திகதி 9:30 மணிக்கு பாராளுமன்றிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நாட்டு மக்களுக்கு வைபவரீதியாக தெரிவிப்பார் என அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்தது.

மே-17-2009: முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் பகுதியில் பதுங்கு குழிக்குள் மறைந்திருந்த சுமார் 300 விடுதலைப் புலிகள் தற்கொலை செய்து கொண்டதாக இந்திய மற்றும் வெளிநாட்டு இணையத்தளங்கள் சற்று நேரத்திற்கு முன்னர் செய்திகளை வெளியிட்டன. இதே வேளை புலிகள் மறைந்திருக்கும் பகுதியிலிருந்து தீச்சுவாலையுடன் வெடிபொருட்கள் வெடித்துச் சிதறும் சத்தம் தொடர்ந்தும் கேட்டவாறு உள்ளதாக கூறப்படுகின்றது. அவர்கள் இவ்வாறானதொரு தற்கொலைக்கு முன்னதாக தம்மிடமிருந்த ஆயுதங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையாக அவற்றிற்கு தீ வைத்திருக்கலாமெனவும் நம்பப்படுகின்றது.

மே-18-2009: இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதியான வி.ஜே.நம்பியாருடன் விடுதலைப்புலிகளின் சர்வதேச இணைப்பாளரான கே.பி தொலைபேசியில் கதைத்துள்ளார். இருவரிடையே நடந்த தொலைபேசி பேச்சுவார்த்தையின் போது இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ள பிரபாகரனை விடுவிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி நம்பியாரிடம் கே.பி கேட்டுக் கொண்டுள்ளார். கே.பியுடனான இந்த உரையாடலை நம்பியார் கட்டுநாயக்க விமான நிலையத்தின் மலசலகூடத்திலிருந்து நடத்தியுள்ளார். நம்பியார் இந்தியாவின் வெளிநாட்டு செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட அதே நேரம் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கண்காணிக்கும் ஒரு அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.


மே-18-2009: இன்று காலை வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களான நடேசன் புலித்தேவன் மற்றும் ரமேஷ் ஆகியோரது சடலங்களை பாதுகாப்பு படையினர் மீட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. இத் தகவலை பாதுகாப்பு அமைச்சகத்தின் பேச்சாளர் லக்ஸ்மன் உலுகல்ல தெரிவித்துள்ளார்.

அதே வேளை கரியமுள்ளி வாய்க்கால் பகுதியில் இன்று காலை படையினர் சடலம் ஒன்றை மீட்டுள்ளனர். இது விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவரான வே.பிரபாகரனின் மகனான சாள்ஸ் அன்ரனியினது என சந்தேகிப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மே-18-2009: தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் சீ.புலித்தேவன் ஆகிய இருவரும் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு தொடக்கம் இன்று அதிகாலை வரையில் உலகின் பல்வேறு பாகங்களில் உள்ள தமது தொடர்பாளர்களுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பாக பேசியுள்ளனர். ஐரோப்பா வட அமெரிக்கா கொழும்பு உட்பட உலகின் பல இடங்களின்


(தொடர்ச்சி...21 இல்)





# சிறுவர் பக்கம்

## கெடுவான் கேடு நினைப்பான்



அது ஒரு அழகிய காடு. அந்தக் காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவே நீரோடை ஒன்று இருந்தது. அந்தத் தேளுக்கு இக்கரையிலிருந்து அக்கரைக்கு செல்ல வேண்டி இருந்தது. அக்கரைக்கு போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு ஆகியவற்றிடம் உதவி கேட்டது.

ஆனால் பொல்லாத தேள் நம்மைக் கொட்டி விடும் என அவை மறுத்து விட்டன. எப்படி நீரோடையைக் கடப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தபோது நீரோடையில் தவளை ஒன்று வந்து கொண்டிருந்தது.

தவளையைக் கண்ட தேள், “தவளை யாரே நான் அக்கரைக்குப் போக வேண்டும் என்னைக் கொண்டு சென்று விட முடியுமா” என்று கேட்டது.

“நானும் அக்கரைக்குத் தான் போகிறேன். என் முதுகில் ஏறிக் கொள்ளும். எம்மை நான் கொண்டு சென்று விடுகின்றேன்” என்றது தவளை.

தேளும் தவளையின் முதுகில் ஏறிக் கொண்டது. தவளை நீரில் நீந்திச் செல்ல ஆரம்பித்தது. சிறிது தூரம் சென்றிருக்கும். தேளுக்கு ஒரு யோசனை வந்தது. நான் பலபேரைக் கொன்றிருக்கிறேன். அவர்கள் வலியால் துடித்ததையும் பார்த்திருக்கிறேன்.

ஆனால் ஒரு நாளும் தவளையைக் கொட்டவில்லை. இந்தத் தவளைளைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்று தவளையைக் கொட்டிப் பார்க்க நினைத்தது.


தேள் தவளையின் முதுகில் கொட்டியது. ஆனால் தவளை பேசாமல் போய்க் கொண்டிருந்தது.

தேள் தவளையைப் பார்த்து “தவளை யாரே உமது உடம்பில் வலியே வருவதில்லையா? என்று கேட்டது. தேளின் எண்ணத்தைக் புரிந்து கொள்ளாத தவளை “எனது முதுகு வழவழப்பானது. அதனால் அந்த இடத்தில் எனக்கு வலிப்பதில்லை” என்றது. ஓகோ அப்படியே என்ற தேள் தவளையின் கழுத்துப் பகுதிக்குச் சென்று தலைப்பகுதியில் கொட்டத் தொடங்கியது. அதையறிந்த தவளை தலையை தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டது. தேள் நீரோடையில் விழுந்தது.

தவளைக்கு கேடு விளைவிக்க நினைத்த தவளை நீரில் மூழ்கி இறந்தது. தவளை நீரில் நீந்தி கரைக்குச் சென்றது.

ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்யதாராயின், அந்த உதவியை எம் வாழ்நாளில் என்றுமே மறந்து விடலாகாது. அவருக்கு நன்றியுடையவராக இருத்தல் வேண்டும். மாறாக அவருக்கு கேடு நினைப்பின் அது நம்மையே வந்து சேரும்.

## உலகின் மிகப்பெரிய முத்து



பிலிப்பைன்ஸ் நாட்டு மீனவர் ஒருவரின் வலையில், உலகின் மிகப்பெரிய முத்து 10 வருடங்களுக்கு முன்பு சிக்கியது பற்றிய தகவல், தற்போது வெளியாகி உள்ளது. இந்த முத்தின் நிறை 34 கிலோ் நீளம் 2.2 அடி அகலம் ஒரு அடி. அந்த மீனவர், தனது படகில் தட்டுப்பட்ட இந்த முத்தினை ஓர் அதிர்ஷ்டக் கல்லாக நினைத்து, இவ்வளவு காலமாகத் தனது வீட்டில் வைத்திருந்தார். வேறொரு பகுதிக்குக் குடிபெயர வேண்டி இருந்ததால், சுற்றுலாத்துறையில் பணியாற்றி வரும் தனது உறவினர் ஒருவரிடம், விலை மதிப்பற்ற இந்த முத்தை வழங்கியுள்ளார். அந்தப் பெண்மணி, நகர மேயரிடம் ஒப்படைத்ததால், இத் தகவல் தற்போது வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது.

## வாரமொரு குறள்



*குறள் 45*

*அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது.*

**பொருள்**

இல்வாழ்க்கை பண்புடையதாகவும் பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும் அதை யொட்டிய நல்ல செயல்களும் தேவை.

## உங்களுக்கு தெரியுமா?



### பால் பொங்குவது ஏன்?



தண்ணீரைப் போல பால் என்பது ஓர் எளிய திரவம் கிடையாது. பாலில் நீர், கொழுப்பு, புரதம், கார்போஹைட்ரேட், தாதுப் பொருள் கள் உள்ளன. பாலைக் கொதிக்க வைக் கும் போது தனது கொதி நிலையை அடையும் நீர், கொதித்து நீராவியாக மாறுகிறது. அதேநேரத்தில் கொழுப்பு, புரதம் போன்றவை தனியாகப் பிரிந்து பாலின் மேல்புறத்தில் ஆடையாக படர் கின்றன. அந்த நேரத்தில் நீராவி மேல் நோக்கி ஆவியாகச் செல்கிறது. ஆனால், அந்த நீராவியை மேலே செல்லவிடாமல் பாலில் படர்ந்துள்ள பாலாடை தடுக்கிறது.

அப்போது அந்த ஆடையைத் தள்ளிக்கொண்டு நீராவி மேலெழும்பி வரும். இதைத்தான் பால் பொங்குகிறது என்கிறோம். பால் பொங்கும் போது அடுப்பை குறைப்பது மற்றும் கரண்டியால் கலக்குவது ஏன்? அடுப்பின் வெப்பத்தைக் குறைத்தால், பாலில் உள்ள நீருக்குக் கிடைக்கும் வெப்பத்தின் அளவு குறையும். இதனால் பாலில் உள்ள நீர் கொதிநிலையை எட்டும் வேகமும் குறையும். அதேபோல் பாலைக் கரண்டியால் கலக்கும்போது பாலின் மேலே படர்ந்திருக்கும் பாலாடை உடைக்கப்பட்டு, நீராவி மேலே செல்வதற்கான தடை நீக்கப்படும். தடையின்றி நீராவி மேலே செல்வதால் பால் பொங்குவதும் நின்று விடும்.

## விடுகதை விளையாட்டு

ஆபிரிக்காவில் விடுகதைகளுக்குப் பஞ்சமே இல்லை. அங்கு “விடுகதை விளையாட்டு” என்று ஒரு விளையாட்டே உண்டு. சிறுவர்கள் இரண்டு குழுக் களாகப் பிரிந்து கொண்டு விளையாடுவார்கள். ஒரு குழுவில் ஐந்து அல்லது ஆறு பேர் இருப்பார்கள். ஒரு குழுவிலிருந்து ஒருவர் விடுகதை போட மற்ற குழுவிலிருந்து ஒருவர் அதற்கு விடை சொல்வார். பிறகு அவர் புதிர் சொல்ல மற்றவர் விடை அளிப்பார். இப்படியே மாறி மாறி நேரம் போவதே தெரியாமல் விளையாடுவார்கள்.

இதைப் போலவே பிஜி தீவு களில், இளைஞர்கள் விடுகதை விளையாட்டு விளையாடுவார்கள். ஆனால் ஒரு கண்டிஷன் இருந்தது. வெற்றி பெற்றவர்களுக்கு, தோற்றவர்கள் விருந்து வைக்க வேண்டும் என்பதுதான் கண்டிஷன்.

## மரங்கள்



மனிதர் பெற்ற பேறு - வளர்
மரங்கள் எனவே கூறு!
கனிகள் சுவையின் ஊற்று! - மரத்தின்
கனிவு தூய காற்று!

இலைகள் பச்சைக் குடைகள் - வெயிலை
எதிர்க்கும் குளிர்ச்சிப் படைகள்!
அலையும் காற்றின் மாசு - மரத்தால்
அகலும் என நீ பேசு!

மரந்தான் மழைக்குத் தூது - மழை
மறைந்தால் உலகம் ஏது?
வறட்சி போக்கும் மழையே - மரம்
வளர்க்கா விட்டால் பிழையே!






# பளிச் முகத்திற்கு...

வெயில் காலங்களில் சூரிய ஒளி பட்டு முகம் கறுப்பாவது வழக்கம். பலருக்கு வெளியூர் சென்றால்கூட இதுபோன்ற நிலை ஏற்படும். இந்த கறுப்பு முகத்தை களையாக மாற்ற வீட்டிலேயே இருக்கு கண்கண்ட அழகு சாதன பொருட்கள். அவற்றை உபயோகித்துப் பாருங்களேன் கறு

ப்பு மறைந்து முகம் களையாக மாறும். அழகு தரும் தேங்காய் அன்றாட சமையலில் முக்கிய இடம்பெறுவது தேங்காய், இதில் உள்ள எண்ணெய் சத்து நமது தேகத்தை அழகாக வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. தேங்காய் பால் 2 ஸ்பூன், கடலை மாவு ஒரு ஸ்பூன் எடுத்து, இரண்டையும் கலந்து பசைபோல ஆக்கிக்கொள்ள வேண்டும். இந்த பசையை முகத்தில் பூசிக்கொண்டு, உலர்ந்ததும் தண்ணீர் கொண்டு கழுவிவிட வேண்டும். வாரம் இருமுறை இப்படி செய்து வந்தால் முகம் பிரகாசமாகும். இளநீரில் உள்ள வழுக்கை தேங்காயை நன்கு அரைத்து, அதனோடு சிறிதளவு இளநீர் கலந்து முகத்தில் கீழ் இருந்து மேல்நோக்கி பூசி, அது உலர்ந்ததும் நீர் கொண்டு சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தினமும் இப்படி செய்து வந்தால் மாசு மருவின்றி முகம் மிளிரும். கரும் புள்ளிகள் இருந்தால் கூட அவை காணாமல் போய்விடும். பாசிப்பருப்பு ப்ளீச் முகத்தில் சிலருக்கு ஆங்காங்கே கருப்பு தீவுகள் போல் "திட்டுகள்" தோன்றும். இதற்கு பாசிப்பருப்பு சிறந்த ப்ளீச் போல செயல்படுகிறது. பாசிப் பருப்பு, கசகசா, பாதாம், பிஸ்தா, துளசி, ரோஜா மொட்டு இவற்றை நன்றாக காயவைத்து பவுடர் பண்ணி வைத்துக் கொள்ளுங்கள். இந்த பவுடரை சிறிது எடுத்து, தினமும் பாலுடன் சேர்த்து குழைத்து, முகத்தில் பூசுங்கள். 15 நிமிடத்துக்கு பிறகு கழுவினால் முகத்தின் கருந்திட்டுக்கள் காணமல் போகும். பழக்கூழ் பேஷியல் அப்பிள் விழுது, தக்காளி விழுது, தார்பூசணி விழுது மூன்றையும் சம அளவு எடுத்து, கலக்கி பஞ்சில் முக்கி முகத்தில் பூசவேண்டும். இதனால் முகம் நல்ல பிரகாசமாகவும் குளுமையாகவும் இருக்கும். கொட்டை நீக்கிய பேரீச்சம்பழம்,1 உலர்ந்த திராட்சை பழம் இவற்றை ஒரு நாள் முழுவதும் வென்னீரில் ஊற வைக்க வேண்டும்.அதை பிறகு அரைத்து இந்த கலவையுடன் அரை டீஸ்பூன் பப்பாளி பழக்கூழை கலந்து கொள்ளவும். இதை முகத்திற்கு பேஸ் பேக் போல போட்டு 20 நிமிடம் கழித்து முகத்தை கழுவவேண்டும். வெயிலில் முகம் கறுத்துப்போயிருந்தால், இந்த பேஷியல் மாற்றி விடும். பிசுபிசுப்பு நீங்க முகத்தில் அதிக எண்ணெய் பசை இருந்தாலே முகம் கருமை அடையும். தலையில் பிசுபிசுப்பை நீக்க ஆப்பிள்சாறு, வெந்தயத்தூள், சீயக்காய்த்தூள் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து தலைக்கு தேய்த்து அலசினால் முடி பிசுபிசுப்பு நீங்கிவிடும். ஆப்பிள் இலைகளை காயவைத்து அதனை பொடியாக்கி ஷாம்பு அல்லது சீயக்காய்த் தூளுடன் கலந்து தலைக்கு தேய்த்து குளித்தால் கூந்தல் மென்மையாகும். அப்புறம் பாருங்கள் முகம் ப்ரிட்ஜில் வைத்த அப்பிள் போல பளிச் தான்.



பச்சை மிளகாய் அதிகமாக இருந்தால் காம்பு நீக்கி உப்பு சேர்த்து மிக்சியில் விழுதாக அரைக்கவும். அதில் அரைமூடி எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்து காற்றுப்புகாத டப்பாவில் போட்டு பிரிட்ஜில் வைத்து தேவையான போது உபயோகப்படுத்தலாம்.

காலி ஃப்ளவர் வேகும் போது அதில் சிறிது பாலை ஊற்றினால், பூவில் உள்ள கறுப்பான அழுக்கு போன்ற கசண்டு மேலே படிந்து விடும். அதை கரண்டியால் சுலபமாக எடுத்துவிட்டு பயன்படுத்தலாம்.

அடை கரகரப்பாக வேண்டுவோருக்கு துவரம்பருப்பை அதிகமாக சேர்க்கலாம். சற்று மெத்தென்று வேண்டுபவர்களுக்கு உளுத்தம்பருப்பை அதிக அளவு சேர்க்க வேண்டும்.

மெதுபக்கோடா, பஜ்ஜி போன்றவை எண்ணெய் குடிக்காமலும், கரகரப்பாகவும் வரவேண்டுமானால் ஒரு கரண்டி எண்ணெயை புகை வரும் வரை காய்ச்சி மாவில் ஊற்றினால் கரகரவென்று வரும். பிறகு எப்போதும் போல் மாவைக் கலந்து செய்து பாருங்கள். வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்.



# ஆடை பாதி...

அழகை வெளிப்படுத்துவதில் ஆடைக்கு முக்கிய பங்குண்டு.

ஒல்லியாக இருப்பவர்கள் இறுக்கமாக உடை அணியக்கூடாது. பிளவுசும் இறுக்கமாக இல்லாமல் சிறிது தொள தொளவென அணிய வேண்டும். பருமனான உடல் வாகு கொண்டவர்கள் இறுக்கமாக உடையணிவது பருமனைக் குறைத்து காட்டும்.

சேலை லேசான வண்ணமுடைய தாக இருந்தால், பிளவுஸ் சற்று அழுத் தமான வண்ணமுடையதாக இருப்பது நல்லது. சேலையின் வண்ணம் அழுத்தமாக இருந்தால், பிளவுஸ் லேசான நிறத்தில் இருப்பது நல்லது. ஒரே நிறத்தில் சேலை, பிளவுஸ் என பார்த்து வாங்குவதை விட, இவ்வாறு அணிவது அழகை மேம்படுத்திக் காட்டும்.

ஷொப்பிங் போகும்போது சிறிய பூக்கள் போட்ட இளம் வண்ண நைலோன் சேலைகளையே பயன்படுத்துங்கள். கோவில், கடற்கரை போன்ற பொது இடங்களுக்கு செல்லும் போது ஆழ்ந்த வண்ணம் கொண்ட கொட்டன் சேலைகளே ஏற்றது.

உயரமாக உள்ள பெண்கள், தங்கள் உயரத்தை சற்றுக் குறைத்துக் காட்ட குறுக்கு கோடு போட்ட சேலைகளை தேர்தெடுத்து அணிய வேண்டும். குள்ளமான பெண்கள் உயரத்தை சற்று அதிகரித்து காட்ட நேர்வாக்கில் கோடு போட்ட சேலைகளை அணிய வேண்டும்.

# உயரமுத்தம்

## சில தவறான கருத்துக்கள்



வயதானவர்களுக்கே உயர் இரத்த அழுத்தம் ஏற்படும் என்று நினைப்பது சரியல்ல. வயதானவர்களுக்கு மட்டுமே உயர்ரத்த அழுத்தம் வரவேண்டும் என்பதில்லை. எல்லோருக்கும் இந்நோய் வரலாம். அண்மைக்காலத்தில் 30 முதல் 40 வயதுள்ளவர்களிடையேயும் குறிப்பிடுகின்ற அளவிற்கு உயர்ரத்த அழுத்தம் காணப்படுகிறது. வயதானவர்களுக்கு ஏற்படுகின்ற உயர்ரத்த அழுத்தத்தைவிட நடுவயதினர்க்கு வருகின்ற உயர்ரத்த அழுத்தம் அதிகத் தீங்கு விளைவிக்கக் கூடியது. எனவே விழிப்போடு இருக்க வேண்டும்.

உயர்ரத்த அழுத்தத்தை நிரந்தரமாக குணப்படுத்திவிடலாம் என்று நினைப்பது உண்மையல்ல. எங்கோ சில பேரை தவிர மற்ற அனைவருக்கும் ஏற்படு கின்ற உயர் இரத்த அழுத்தப் பிரச் சினைகள் அவர்கள் வாழ்நாள் முழுவதும் இருக்கக் கூடியவையே. இதனால் இரத்த அழுத்தம் கட்டுப்படுத்த முடியாதது என்று பொருளல்ல. இயற்கை முறையிலே உணவைக் குறைத்து, உப்பைக் குறைத்துக் கொள்ள வேண்டும். உடலுழைப்பை அதிகரிப்பதன் மூலம் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம். கடுமையான உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இந்த முறைகளோடு மருந்துகளையும் சேர்ந்து உட்கொள்வதன் மூலம் அழுத்தத்தைக் குறைக்கலாம்.





ஆனால் இந்தக் கட்டுப்பாடுகளை விட்டு விட்டு மனம்போன போக்கில் வாழ்க்கை முறையை வைத்துக் கொண்டால் இரத்த அழுத்தம் இன்னமும் உயர வாய்ப்புண்டு. உயர்ரத்தத்திற்கு என்று சில நோய்க்குறிகள் உள்ளன என்று எண்ணுவது தவறு. பலர் நினைப்பது போல தலைச்சுற்றல், மயக்கம், தலைவலி போன்ற நோய்க்குறிகள் எதையும் உயர் இரத்த அழுத்தம் உண்டாக்குவதில்லை. நடைமுறை வாழ்க்கையில் ஏற்படுகின்ற களைப்பு, சோர்வு மற்றும் தலைவலி போன்றவைகளை உயர்ரத்த அழுத்தத்துடன் இணைத்துப் பேசுவதே இது போன்ற எண்ணங்களுக்குக் காரணமாகிவிடுகின்றன.

தனக்கு உயர் இரத்த அழுத்தம் இருப்பதேதெரியாமல்பலர் இருக்கிறார்கள். ஆபத்தான நிலை ஏற்படுவதை விட இவர்கள் அதுபற்றி அறிந்து கொள்ளாமலே இருக்கும்நிலையும் உள்ளது. எனவே 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆண்டிற்கு ஒன்று அல்லது இரண்டு முறை கட்டாயமாக தங்களது இரத்த அழுத்தத்தைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

# உலக அரசியல் அரங்கின் ஆட்சி மாற்றங்களும்

## இலங்கையர்கள் எதிர்நோக்கும் சவால்களும்

அமெரிக்க தலைநகர் மீதும் தென்கொரிய தலைநகர் சியோல் மீதும் அணுகுண்டு வீசி அந்நகரங்களை சாம்பலாக்குவோம் என வட கொரியா எச்சரிக்கை விடுத்தது வட கொரியா வின் வழமையான எச்சரிக்கையாகவே



கொள்ளப்பட்ட போதிலும் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலானது அமெரிக்க வெளியுறவுக் கொள்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்தலாம் எனவும் அது வடகொரியா அமெரிக்கா உறவில் விரிசல் ஏற்படுத்தலாம் எனவும் அரசியல் வல்லுனர்கள் கருத்துக்கள் வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் எச்சரிக்கையையும் மீறி வடகொரியா அணுகுண்டு மற்றும் ஏவுகணைப் பரிசோதனை நடாத்தி வருவதும் கொரிய தீபகற்பத்தில் பதற்ற நிலையை தோற்றுவித்துள்ளதாக அண்மைய செய்திகள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில், அமெரிக்க மற்றும் தென்கொரிய துருப்புக்கள் தென்கொரியாவில் இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு வருவதும் வடகொரிய தரப்பில் அச்சத்துடன் நோக்கப் படுகின்றது.

எனினும், இது வழமையாக நடைபெறுகின்ற ஓர் யுத்தப் பயிற்சி என தென்கொரியத் தரப்பில் தெரிவிக்கப்பட்ட போதிலும், வடகொரியா தனது பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து ஏவுகணைச் சோதனையை நடாத்தியமையும் , அச்சோதனை தென்கொரியா மற்றும் ஜப்பானின் சில பகுதிகளை இலக்கு வைத்து நடாத்தப்பட்டதாகவே சர்வதேச அவதானிகளால் நோக்கப்படுகின்றது.

சென்ற யூலை மாதம் தொடக்கம் இம் மாதம் வரையில், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நான்கு ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா நடாத்தி உள்ளது. இச்சம்பவத்தை அடுத்து ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமான பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பு நாடுகளுடைய ஒப்புதலுடன் பலத்த கண்டனம் வெளியிடப்பட்டமையும், இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் இக் கண்டன அறிக்கை குறித்து வடகொரியத் தரப்பு பலத்த அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இது குறித்து வடகொரிய வெளியுறவுத்துறை தனது செய்தியில், அமெரிக்காவின் அதிகரித்து வரும் அணுஆயுத மிரட்டல்களால் தான் தமது நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்தும் முகமாக அணு ஆயுத சோதனைகளை நடாத்த வேண்டி உள்ளதாக வடகொரிய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

அதேசமயம், இத்தாலியில் அண்மையில் ஏற்பட்ட நில அதிர்வினால் 247 பேர் உயிரிழந்துள்ளமை மனித நெஞ்சங்களை துணுக்குற வைக்கின்றது. மேலும் சடலங்கள் அகப்படலாம் என்ற எதிர்பார்ப்பில் தேடுதல் நடவடிக்கைகளும் முடுக்கி விடப்பட்டிருந்தன. அது மாத்திரமன்றி இலங்கையைச் சேர்ந்த இருவர் இச்சம்பவத்தில் உயிரிழந்தது. இலங்கையர் மத்தியில் மேலும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. 6.2 ரிச்டர் அளவில் இந்நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவியியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அமாட்ரைஸ் என்ற நகரிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தையடுத்து வத்திக்கானில் பிரார்த்தனைகள் இடம் பெற்று வருகின்றன. பிரார்த்தனைகள், ஆண்டவனிடம் மன்றாடுதல் போன்ற விடயங்களுக்கு அப்பால் மனித செயற்பாடுகளும் இவ் அனர்த்தத்திற்கு மூல காரணம் என்பதனை மறுக்க முடியாது.

அணு ஆயுதப் பயன்பாடு, இரசாயன ஆயுதங்களின் பிரயோகம், சூழல் வெப்பமடைதல் போன்ற செயற்பாடுகளில் அரசாங்கங்கள் தங்கள் சுயநலம் கருதி செயற்படுவதும் ஒரு நாட்டை ஆக்கிரமிக்க முற்படுவதும் ஆயுதப் பலத்தைக் காட்டி பிற நாடுகளை அடிமைப் படுத்த வல்லாதிக்க அரசுகள் முற்படுவதும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மூல காரணம் என்பதை மறுக்க முடியாது.

சிரிய ஜனாதிபதி அசாத்தின் படையினர் கடந்த இரு வருடங்களில் மட்டும் மூன்று தடவைகள் இரசாயனத் தாக்குதலை நடாத்தியிருப்பதும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் எச்சரிக்கையையும் மீறி இத் தாக்குதலை நடாத்தியிருப்பதும் இது விடயம் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு சிரியா தரப்பு மறுப்பு தெரிவித்துள்ள போதிலும், குற்றச்சாட்டுக்களுக்கும் அவற்றுக்கு மறுப்பு தெரிவித்துள்ளதும் அரசுகளுக்கு புதிய விடயமல்ல என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

சிரிய அரசுப்படைகள் கொண்டு சென்ற வாகனங்களை சோதனையிட்டதில், அவற்றில் குளோரின் நச்சு வாயு இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. இது விடயம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஐ.நா.சபையின் உயர்மட்ட அதிகாரி சமந்தாதளஸ் தெரிவித்தாலும் கூட எவ்வளவு தூரம் இவ் விடயம் அணுகப்படப் போகிறது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

உலக அரசியல் அரங்கில் இவ்விடயங்கள் தொடர்பாக ஐ.நா. சபையால் எச்சரிக்கை விடப்பட்டு வருவதும் காலப்போக்கில் அவை செயலற்றுப் போவதுமே வரலாறாக உள்ளது. ஐ.நா. சபையின் கருத்துக்களை உலக வல்லரசு நாடுகள், அல்லது பிராந்திய வல்லரசுகள் ஒரு பொருட்டாக கருதுவதில்லை. வெறும் பதவியை அலங்கரிக்கும் சபையாக கருதுவதும்,அரசியல் ஆர்வலர்களால் சுட்டிக் காட்டப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில், தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றாக விளங்கும் கொலம்பியாவில் 52 ஆண்டுகளாக நிலவிய உள்நாட்டு யுத்தமானது பார்க் அமைப்பினருக்கும் கொலம்பிய ஜனாதிபதி ஜுவான்மான்றுவெல்லுக்கும் இடம்பெற்ற யுத்த நிறுத்த உடன்பாட்டை அடுத்து சமாதானக்காற்று வீசத்தொடங்கியமை அமைதியை விரும்பும் நாடுகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியமை வரவேற்கத்தக்க ஒரு செயலாகவே கொள்ளப்படுகின்றது.

சுமார் 52 வருட யுத்தத்தினால், சுமார் இரண்டு லட்சத்து இருபதாயிரம் பேர் கொல்லப்பட்டும்,ஐம்பதாயிரம் பேர் வரையில் அகதிகளாக்கப்பட்டும், பல ஆயிரக்கணக்கானோர் காணாமலும் போயுள்ளனர்.

கியூபாவில் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமான கொலம்பிய உள்நாட்டு யுத்தத்தை அடுத்து ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற உலக அமைப்புக்கள் பார்க் அமைப்பை தீவிரவாத அமைப்பாக வர்ணித்துள்ளதும், கொலம்பிய அரசியல் அமைப்பில் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்ற கொலம்பிய அரசின் வாக்குறுதியை அடுத்து பார்க் அமைப்பு ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் என்றும் விடுத்த அறிவிப்பானது, கொலம்பியாவில் சமாதானக் காற்று வீசும் என்ற எதிர்பார்ப்பை தோற்றுவித்துள்ள போதும் 2002 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கொலம்பிய அரசுக்கும் பார்க் அமைப்புக்கும் இடம்பெற்ற பேச்சு வார்த்தை தோல்வியில் முடிவடைந்ததும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

இதற்கிடையில் அமெரிக்க தூதுவர் அதுல் கேஷாப் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் மேற்கொண்டிருந்தார். "ஒப்பரேசன் பசுபிக் ஏஞ்சல்" என்னும் மனிதாபிமான நடவடிக்கை ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைப்பது இவரது நோக்கமாக கொள்ளப்பட்டாலும், இலங்கையை தனது பிடிக்குள் வைத்திருப்பதை அமெரிக்கா தனது கொள்கையாக கொண்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்களால் கருதப்படுகின்றது. ஒப்ரேசன் ஏஞ்சல் என்பது அமெரிக்க விமானப்படை, கடற்படை, இராணுவம் ஆகிய முப்படைகளும் பங்குபற்றுகின்ற கூட்டு மனிதாபிமான நடவடிக்கை என அமெரிக்க தரப்பில் கூறப்பட்டாலும், இலங்கை அரசியல்வாதிகள் அமெரிக்க விமானங்களில் பறக்கலாம் என ஆசை வார்த்தைகள் கூறுவது மேற்கு நாட்டு இராஜ தந்திரிகளுக்கு பழக்கப்பட்ட ஒன்று என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் இரண்டாவது தடவையாக இலங்கைக்கு மேற்கொள்ளும் விஜயம் இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றாலும் கூட, அவரது வருகை குறித்த முன்னேற்பாட்டு நடவடிக்கை இலங்கை அரசுத்தரப்பால் முழுமூச்சாக மேற்கொள்ளப்பட்டதும் அது ஒரு கண்துடைப்பு நாடகம் என்பதும் நுணுக்கமாக நோக்குவோருக்கும் புலனாகக்கூடிய விடயம்.

அமெரிக்க கடற்படைக்கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் பிரசன்னமாவது இலங்கையை நோக்கிய அமெரிக்காவின் அரசியல் காய்நகர்த்தலாகவே கருதப்படுகின்றது. அதற்கு ஏற்றாற் போல் இலங்கை அரசும் தாளம் போடுவதும் குறிப்பாக இடம்பெயர்ந்தோரின் காணிகளை மீள வழங்குவது என்ற பெயரில் கண் துடைப்புக்காக சில ஏக்கர் காணிகளை வழங்கிவிட்டு அமெரிக்கா போன்ற உலக நாடுகளை ஏமாற்றுவதும் நமக்கு புதிதல்ல.

குறிப்பாக மேற்கு நாடுகள் சவால்களின் மையமாக இலங்கை உட்பட ஆசிய நாடுகள் அமைந்திருப்பதும் அந்நாடுகளின் விரல் அசைப்பிலேயே இலங்கை அரசுகள் தாளம் போடுவதும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டைப் புறக்கணிக்கும் வகையில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மலேசியப் பயணமும் அமைவதாகக் கருதப்படுகின்றது.

உலகம் கோள மயமாதல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் எந்த ஒரு நாட்டில் இடம்பெறும் எந்த மாற்றங்களும் மற்றைய நாடுகளில் பிரதிபலிக்கவே செய்யும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே.

எனவே சர்வதேச அரசியல் காய்நகர்த்தலுக்கேற்ப, இலங்கை தமிழ் அரசியல்வாதிகளும் அரசியல் விற்பன்னர்களும், ஏன் சாதாரண தமிழ் பொதுமக்களும், தள்ளப் படுகின்றனர் என்பது மறுக்க முடியாது. எனவே அறிவியல் ரீதியாக தூரநோக்கின் அடிப்படையில் தமிழ் மக்களும் செயற்பட வேண்டிய நிலையில் உள்ளனர் என்பதும் மறுக்க முடியாததே.

க.கணேசராசா

## போட்டிச் சிறுகதை 17

பெயர் : தர்மலிங்கம்
முகவரி : சபாபதிப்பிள்ளை வீதி
கண்ணகி நலன்புரி நிலையம்
சுன்னாகம்.

சிறுகதை: ஒற்றுமையே பலம்

கண்ணை சிமிட்டும் பங்குனி மாத வெய்யிலில் வேர்க்க விறு விறுக்க குடை பிடித்தவாறு நடந்து வருகிறான் முருகன் வீடு வந்தது பெருமூச்சுடன் சிறுது நேரம் களைப்பாற்றினான். என்ன வெய்யில் குடை பிடித்தும் உச்சந்தலையை சுட்டெரிக்கிறது என்றவாறு கொண்டு வந்த பொருட்களை வேலைக்காரியிடம் குடுத்து விட்டு,

"எனக்கொரு அப்பிள் யூஸ் கொண்டுவா" என்று திண்ணையில் தலை சாய்கிறன் முருகன்.

அந்த பூஞ்சோலை கிராமம் மிகவும் அழகானது. அங்கு சுமார் முன் நூறு குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அங்கு வாழும் மக்கள் மிகவும் கஸ்டப்பட்டவர்கள். பெண்கள் தோட்ட வேலைக்கும், ஆண்கள் காட்டுக்குச் சென்று விறகு வெட்டியும் சீவியம் நடத்தி வருகின்றார்கள். கஷ்டப்பட்டாலும் இன, மத வேறுபாடின்றி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆனால் முருகன் மட்டும் கிராமத்தில் வசதியானவன் அவனுக்கு தான் மட்டும் வசதியாக வாழ வேண்டும். கிராமத்தில் உள்ள மக்கள் தனக்கு அடிமையாக வாழ வேண்டும் தன்னை விட எவரும் வசதியாக வாழக்கூடாது என்று பொறாமை கொண்டவன். அது மட்டும் அல்ல வட்டிக்கு பணம் குடுத்து வந்தான். மக்களும் அவசர தேவைக்கு முருகனிடம் பணம் வாங்கி வந்தார்கள். முருகனின் உள்நோக்கம் மக்களுக்கு தெரியாது அவனை நல்லவன் என நினைத்தார்கள்.

முருகனுக்கு காயத்திரி எனும் மகள் உண்டு. அவளுக்கு தாய் இல்லை என்றதால் அதிக செல்லம் குடுத்து வந்தான். அவள் என்ன ஆசைப்பட்டாலும் மறுக்காமல் செய்து வந்தான். அவளின் விருப்பப்படி மேல் படிப்புக்காக வெயியூரில் தங்கி படிக்க வைத்தான். இவ்வாறு ஒரு வருடம் ஓடியது.

மக்கள் தங்களது முட்டாள் செயலை புரிந்து நாங்கள் படிக்காமல் இவ்வாறு கஷ்ரப்படுகிறோம் எங்களது பிள்ளைகளாவது படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்று நினைத்தார்கள். இதனால் தாங்கள் உழைப்பதை மிச்சப்படுத்தி ஒரளவு வசதியாக வாழ்ந்து வருகின்றார்கள் அதனால் முருகனிடம் மக்கள் வட்டி பணம் வாங்குவதில்லை. இதனால் முருகன் கோபம் கொண்டான்.

கிராமத்தில் என்னை விட எவரும் வசதியாக வாழக்கூடாது எனக்கு எப்புவம் அடிமைகளாகவே வாழ வேண்டும் என்று அவர்களை மறைமுகமாக தாக்க நினைத்தான். வெளியூருக்கு மகளை பாக்க போவதாக கூறிவிட்டு மதுபோதைகளை வாங்கி தனது அடியாட்களை கொண்டு கிராமத்தில் விற்று வந்தான். சந்தோசமாக வாழ்ந்த மக்கள் மது போதைக்கு அடிமையாகி விட்டார்கள். உழைப்பதையெல்லாம் குடித்து அழித்து விட்டார்கள்.

இளைஞர்கள்,மாணவர்கள்,வயோதிபர்கள் என அனைவரும் மதுவைக் குடித்து விட்டு தங்கள் வாழ்க்கையை சீர் குலைத்தார்கள். மதுவை அதிகமாகக் குடிப்பதால் எத்தனையோ குடும்பங்களில் ஆண்கள் நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார்கள். அதனால் பெண்கள் வாழ்க்கையை இழந்து தவிக்கின்றார்கள்.

ஒரு நாள் வழக்கம் போல மது குடித்து விட்டு கிராமத்தில் உள்ள இரு பிள்ளைகளை கடத்தி பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய போது அவர்கள் இறந்து விட்டார்கள். இதை அறிந்த மக்கள் பெரும் அச்சத்திற்கு உள்ளாகினர். தொடர்ந்தும் பெண்கள் சிறுவர்கள் மாணவர்கள் என துஸ்பிரயோகத்திற்கு ஆளானார்கள். மதுவை குடித்துவிட்டு இளைஞர்கள் வீதி ஓரங்களில் நின்று பெண்களை கிண்டல் செய்வதும் தகாத முறையில் பேசுவதும் நடந்து வருகின்றன.

இதனால் பெண்கள் அன்றாட தேவைக்கு வெளியில் செல்ல முடியாமல் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியாமல் கஸ்டப்பட்டார்கள். ஒரு நாள் மக்கள் எல்லோரும் சேர்ந்து கிராமத்து பொலிஸிடம் இங்கு நடக்கும் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் கொலைகாரனுக்கு தண்டனை தரவேண்டும் என்று முறையிட்டார்கள். இதை அறிந்த



# ஒற்றுமையே பலம்

பொலிஸ் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏனென்றால் முருனிடம் இலஞ்சம் வாங்கி விட்டு அவன் செய்யும் சட்டவிரோதமான செயலுக்கு உடந்தையாக இருந்தார்கள்.

இதற்கெல்லாம் காரணம் முருகன் என மக்கள் அறிந்து கொண்டார்கள். மக்கள் எல்லோரும் முருகனிடம் எதற்காக இவ்வாறு செய்கிறாய் என்று கேட்ட போது,

"ஆமா இதற்கெல்லாம் நான் தான் காரணம் கிராமத்தில் நான் மட்டும் தான் வசதியாக வாழவேண்டும் எனக்கு அடிமைகளாக வாழ வேண்டிய நீங்கள் வசதியாக வாழக் கூடாது என்று தான் இவ்வாறு செய்தேன் தொடர்ந்தும் செய்வேன்" என்று கூறி மக்களை துரத்திவிட்டான்.

மக்களின் துன்பங்கள் கண்டு முருகன் சந்தோசப்பட்டான். பொலிஸ் அதிகாரியும் முருகன் செயலுக்கு உடந்தையாக இருப்பதை அறிந்து கொண்டார்கள். இப் பிரச்சனைக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்று தெரியாமல் மக்கள் கவலையும் கண்ணீருமாக இருந்தார்கள். மறு நாள் காயத்திரி தனது படிப்பை முடித்துக் கொண்டு கிராமத்திற்கு வந்தாள்.

காயத்திரி முருகனைப் போன்று இல்லை கிராமத்தில் உள்ள அனைவரோடும் எந்த ஒரு வேறுபாடும் இன்றி பழகுவாள். தனது படிப்பையும் அந்தஸ்தையும் நினைக்காமல் எல்லோரோடும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவாள். மக்கள் கிராமத்தில் நடந்தவற்றை காயத்திரியிடம் கூறினார்கள். இதை அறிந்த காயத்திரி கோபத்தோடு தந்தையிடம் "நீங்கள் செய்வதெல்லாம் சரிதானா? இதனால் எந்தனை குடும்பங்கள் பிள்ளைகளை இழந்து தவிக்கிறார்கள் தெரியுமா? இதையெல்லாம் விட்டு விடுங்கள் எல்லோரும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழலாம்" என்று கூறினாள். முருகன் இதற்கு சம்மதிக்கவில்லை இவ்வாறு பல முறை கூறியும் முருகன் சம்மதிக்கவில்லை.

முருகன் செயலை நிறுத்த காயத்திரிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. காயத்திரிக்கு ஒரு யோசனை தோன்றியது. என் திருமணத்தில் எனது விருப்பப்படி நடந்து கொள்வார். எந்த தடையும் விதிக்கமாட்டார் என்று மக்களின் சந்தோ சத்துக்காக தனது படிப்பையும் அந்தஸ் தையும் நினைக்காமல் கிராமத்தில் ஒரு பையனை திருமணம் செய்து மாலையும் கழுத்துமாக வீட்டிற்கு சென்றாள்.

இதைக் கண்ட முருகன் ஒரு கணம் அமைதியாக நின்றான்.

"என்னை மன்னித்து விடுங்கள் இதை தவிர வேறு வழியே தெரியவில்லை. சிறு வயதில் நான் என்ன ஆசைப்பட்டு கேட்டாலும் மறுக்காமல் செய்து வந்தீர்கள். ஆனால் இப்பொழுது நான் சொல்லும் எதையும் ஏற்றுக்கொள்ளவில்லை. திருமணத்திற்காவது என் விருப்பத்தை ஏற்று நல்லவராக திருந்தி நடப்பீர்கள் என்று நினைக்கிறேன்" என கூறினாள் காயத்திரி.

"உன் சந்தோசம் தான் என் வருப்பம் இனி எந்த தவறும் செய்ய மாட்டேன் எல்லோரும் ஒற்றுமையாக வாழலாம்" என்று கூறினான் முருகன் இதை கேட்ட காயத்திரி முருகனின் உள் நோக்கம் தெரியாமல் சந்தோசத்தில் கூத்தாடினாள். மக்களுக்கு விடிவு காலம் வந்து விட்டது என்று நினைத்தாள். மறு நாள் காயத்திரியின் கணவனை கொலை செய்து விட்டான் முருகன்.

இதையறிந்த காயத்திரி முருகனை கோபத்தோடு எதற்காக இவ்வாறு செய்தீர்கள் என்று கேட்டதற்கு "என்னோட வசதிக்கும் அந்தஸ்திற்கும் இவனா உனக்கு மாப்பிள்ளை எங்களுக்கு அடிமையா வாழ்பவனா எனக்கு மருமகன் இப்படி ஒரு வாழ்க்கைக்கா உன்னை இவ்வளவு தூரம் படிக்க வைத்தேன்" என்று கூறினான்.

"ச்சீ இவ்வாறு கூற உங்களுக்கு வெட்கமா இல்லையா? எதற்காக பணம் பணம் என்று அலைகின்றீர்கள் பண ஆசையால் எத்தனை உயிர்களை பறித்து விட்டீர்கள். கல கல என்று இருந்த கிராமத்தை சுடுகாடாக மாற்றி விட்டீர்கள். உங்களை என் தந்தை என்று கூற வெட்கமாக இருக்கின்றது. இனி மேல் உங்கள் முகத்தில் முளிக்கமாட்டேன்" என்று கூறி அழுதபடியே உள்ளே சென்றாள்.

காயத்திரி இரண்டு நாட்கள் சரியாக சாப்பிடாமல் தூங்காமல் என்னால் ஒரு அப்பாவியின் உயிர் போய்விட்டதே என்று கூறிய படி இருந்தாள். இதனால் கண்ணீரும் தனிமையுமே அவளது வாழ்க்கை என்றாகி விட்டது.

நிம்மதிக்காக காயத்திரி கிராமத்தில் உள்ள கோயிலுக்கு வருவாள். அவ்வாறு ஒரு நாள் கோயிலுக்கு சென்று வரும் வழியில் சில ரவுடிகள் மது குடித்து விட்டு வந்தார்கள். காயத்திரியை கண்ட அவர்கள் கடத்தி சென்று பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தி கொலை செய்து விட்டார்கள். இதை அறிந்த முருகன் காயத்திரியின் நிலைமை கண்டு கதறி அழுதான். "எனது தவறான செயல்களினால் என் மகளை இழந்து விட்டேன். என் மகள் எத்தனை தடவை புத்திமதி கூறியும் கேட்கவில்லையே மற்றவர்களின் துன்பங்களை கண்டு சந்தோசப்பட்டேன் எத்தனை உயிர்களை பறித்தேன். நான் செய்த தவறுக்கு சரியான தண்டனை தான் கடவுள் குடுத்திருக்கிறார் என்று கூறி அழுதான் முருகன்.

வெளியூர் பொலிஸ் மேல் அதிகாரிகள் கிராமத்தில் நடந்தவற்றை அறிந்து கொலைகாரனுக்கும் அவர்களுக்கு உடந்தையாக இருந்த முருகனுக்கும் சட்டரீதியாக சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. ஒரு வருடங்கள் கழிந்து விடுதலையாகி பூஞ்சோலை கிராமத்திற்கு வந்தான் முருகன். தான் செய்த தவறுகளுக்குமக்களிடம் மன்னிப்புக் கேட்டான். மக்களும் முருகனை மன்னித்து கிராமத்தில் வாழ ஏற்றுக்கொண்டார்கள்.

முருகன் காயத்திரியின் நினைவாக ஆஸ்பத்திரி, பாடசாலை, முதியோர் இல்லம், இவ்வாறன உதவிகளை கிராமத்தில் செய்து வந்தான். முருகன் செயல் கண்டு மக்கள் சந்தோசப்பட்டார்கள்.

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 17

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................
..............................
சிறுகதையின் இலக்கம் : ..............................
எழுதியவர் பெயர் : ..............................
சிபார்சு செய்பவர் பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................
தொலைபேசி இலக்கம் : ..............................
.............................. ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**




ஜெ. யோகராஜ்

# தேடல்பொறி, இணையம், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல்

இந்தவாரம் நாம் இணையத்தளங்களில் பிரபல்யமான சில தளங்கள் பற்றிய தகவல்களை வழங்கவுள்ளோம். அதில் facebook என்பது முக்கியமானது. இந்த facebook எனும் முகப்புத்தக நடைமுறையை German நாட்டைச் சேர்ந்த 26 வயதுடைய மார்க் சுக்கபல் என்பவரால் உலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த தொழில்நுட்ப வசதியின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரி www.facebook.com ஆகும். இந்த இணையத்தளத்திற்குள் பிரவேசிப்பதற்கு பிரபல மின்னஞ்சல் தளங்களில் ஒரு முகவரியை கொண்டிருத்தல் வேண்டும். அதனோடு, இரகசிய சொல் ஒன்றை பெற்றுக் கொள்ள உத்தியோகபூர்வ இணை யத்தளத்திற்கு விஜயம் செய்து, அங்குள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். அதன் மூலம் facebook இணையத்தளத்தின் ஒரு அங்கத்தவராக மாறமுடியம். இந்த இணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ள வசதிகள் குறித்து அடுத்து பார்ப்போம்.

இங்கே ஒரு பாவனையாளருக்கு தமது நண்பர்களை இணைத்துக் கொள்வதற்கான அடிப்படை வசதி உள்ளது. இந்த நண்பர்களை அவர்களது மின்னஞ்சல் முகவரி ஊடாகவோ அல்லது facebook அங்கத்தவர் ஊடாகவோ இணைத்துக் கொள்ளலாம். ஒரு வாடிக்கையாளருக்கு A என்ற நண்பர் இணைந்து கொள்வாரானால், A என்ற இந்த நண்பரின் ஏனைய நண்பர்களும் இந்த வாடிக்கையாளர்களின் நண்பர்களாக மாறிவிடுவர். அதற்கான சில விதிமுறைகளும் இங்கு குறிப்பிடப் பட்டுள்ளன. விதிமுறைகளின் பயன்பாட்டுக்கிணங்க சிலரை நண்பர்கள் பட்டியலிலிருந்து நீக்கிவிடலாம். அடுத்து facebook இணையத்தளத்தில் முகங்கள் உடனான உரையாடல் பிரபல்யமானது. ஒரு கருத்தை நண்பர்கள் பட்டியலுடன் பகிர்ந்து கொள்ளலாம். அதேவேளை, அதே கருத்தை தனிநபருடனும் பகிர்ந்து கொள்ளலாம். இங்கு மேற்கொள்ளப்படும் இணைய உரையாடல்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். எமது அந்தரங்க தகவல்களை இந்த உரையாடல்களில் வெளிப்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதேவேளை, உரையாடல் மேற்கொள்ளப்படும் போது, சில கோப்புக்களை பரிமாற்றிக் கொள்ள சந்தர்ப்பம் ஏற்படின் அந்த கோப்புக்கள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். இவற்றில்





வைரஸ் அல்லது ஒற்றர் சேவை மென்பொருட்கள் (Spyware) இணைந்து வரக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

அதேவேளை, facebook இணையத் தளத்தில் எமக்குரிய புகைப்படங்களை பிரசுரிக்கும் பொழுது மிகவும் முக்கியமான புகைப்படங்களை பிரசுரிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், இந்த புகைப்படங்களை பயன்படுத்தி சில மென்பொருள் நிபுணர்கள் போலி பிரசாரங்கள் மற்றும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் பிரசாரங்களை மேற்கொள்ளலாம். ஒரு புகைப்படத்தை கிரபிக்ஸ் தொழில்நுட்பம் மூலம் தமக்கு தேவையானவாறு மாற்றியமைத்து அதனை உண்மையென நம்பக்கூடிய வகையில் இணையத் தளங்களில் பிரசுரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். எனவே, facebook ன் களஞ்சிய சாலையில் பதிவு செய்யும் உங்கள் புகைப்படங்களுக்கு பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும். இதற்கு சில வழி முறைகள் உண்டு. இந்தப் புகைப்படங்களை இரகசிய சொல்லோடு (Password) கூடிய களஞ்சியசாலையில் பதிவுசெய்தல் வேண்டும். இங்கு பதிவு செய்யப்படும் புகைப் படங்களுக்கு watermark ஐ பயன் படுத்துவதும் ஒரு பாதுகாப்பான நடைமுறையாகும்.

facebook ன் இணையத்தள படம் கீழே தரப்பட்டுள்ளது.

facebook ல் சுவரில் எழுதல் (writing on the wall) என்ற ஒரு அம்சம் உண்டு. இதில் நீங்கள் ஒரு கருத்தை எழுதினால், அது ஏனைய நண்பர்களுடன் பகிரப்படக் கூடிய செய்தியாக மாறிவிடும்.

facebook இணையத்தளத்தில் பதிவு செய்த ஒரு அங்கத்தவராயின், இந்த கூண்டுகளில் பாவனையாளர் அடையாள இலக்கம் மற்றும் இரகசிய சொல்லை type செய்யலாம்.




இல்லாவிட்டால், sign up என்ற பகுதிக்குள் சென்று புதிய அங்கத்தவராக பதிவு செய்து கொள்ளலாம்.

facebook எனும் முகப்புத்தகத்திற்குள் சென்றதும் கிடைக்கக்கூடிய திரை கீழே காட்டப்பட்டுள்ளது.




சுவரில் எழுதல் சேவை

இது ஏனைய தொழில்நுட்ப சேவைகள்

ஏனைய முகப்புத்தகம் சார் சேவைகள்

முகப்புத்தகத்தில் பல நன்மைகள் இருந்தாலும், இதனூடாக பல குற்றச் செயல்களும் இடம்பெறுகின்றன. இலங்கையில் இதுவரை முகப்புத்தகம் ஊடான நூற்றுக்கும் மேற்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைத்துள்ளன. இது தொடர்பான தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. குற்றவாளிகளாக அடையாளம் காணப்படுமிடத்து 2007 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க கணினி குற்றவியல் சட்டத்தின்படி தண்டனைகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, facebook ஐ பயன்படுத்தும் போது, மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டும். ஏனையோரின் நற்பெயருக்கோ அல்லது புகழுக்கோ எந்த வித களங்கமும் ஏற்படாத வகையில், கருத்துக்கள் பரிமாறப்படல் வேண்டும்.


**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com

email : yogaraj35@gmail.com)

# சூரியனை ஆராய விண்கலம் அனுப்புகிறது 'இஸ்ரோ'

இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான, 'இஸ்ரோ" 2020 அளவில் 'ஆதித்யா எல்-1' என்ற விண்கலத்தினை விண்ணில் செலுத்தும். இது, சூரியனை விரிவாக ஆராய்ச்சி செய்ய இந்தியா அனுப்பும் முதல் விண்கலம். அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் மொத்தம், 70 செயற்கைக் கோள்களை விண் ணில் செலுத்தும் என்று, அதன் செயற்கைக் கோள் மையத் தின் இயக்குனர் மயில்சாமி அண்ணா துரை தெரிவித்தார். இதில் முக்கியமான நான்கு செயற்கைக்கோள்கள், 2016 நவம்பருக்குள் ஏவப்படும் என்றும் அவர் தெரிவித்தார். கடந்த ஆண்டு ஓகஸ்ட் முதல், 2016 ஓகஸ்டுக்குள், 10 செயற்கைக்கோள்களை இஸ்ரோ ஏவியிருப்பதாகமயில்சாமிதெரிவித்தார். 'இன்சாட் - 3 டி.ஆர்., ஸ்காட்சாட் -1" ஆகியவை செப்டெம்பரிலும், 'ஜிசாட் -18" ஒக்டோபரிலும், 'ரிசோர்ஸ்சாட் - 2ஏ" நவம்பரிலும் விண்ணில் செலுத்தப்படும் என்று மயில்சாமி தெரிவித்தார். நிலவை ஆராயும் 'சந்திரயான் 2" திட்டத்தை, எந்த நாடுகளுடனும் கூட்டுறவு இல்லாமல் சுயமாகவே இஸ்ரோ அனுப்பும் என்று மயில்சாமி தெரிவித்தார். முன்னர் ரஷ்ய விண்வெளி அமைப்பின் தொழில் நுட்பத்தை இதற்கென வாங்குவதாக இருந்தது குறிப்பிடத்தக்கது. 2018 இல் சந்திராயன் 2 விண்கலன் நிலவில் இறங்கி, நிலவின் மேற்பரப்பின் வேதியியல் தன்மைகளை ஆராயும் என்று மயில்சாமி தெரிவித்தார்.



# நல்லைக் கந்தனின் இரதோற்சவ பெருவிழா



உலகமெங்கும் வாழும் சைவ மக்கள் வரம் வேண்டி நிற்கும், பிரசித்தி பெற்ற யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவப் பெருவிழா ஆகஸ்ட் 31 ஆம் திகதி புதன்கிழமை இனிதே நிறைவு பெற்றுள்ளது.

யாழ். மண்ணின் தொன்மைவாய்ந்த கலாசாரப் பாரம்பரியங்களின் கேந்திர நிலையமாக நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் விளங்குகின்றது. அதிகாலை நடைபெற்ற விசேட பூஜைகளை அடுத்து வள்ளி நாச்சி, தெய்வானை அம்பாள் சமேதராய் சண்முகப்பெருமான் பக்தர்கள் புடைசூழ ஆலயத்தின் வெளி வீதியில் எழுந்தருளினார்.

பிராமண உத்தமர்களின் வேதமந்திர உச்சாடனமும் மங்கள வாத்தியங்களும் முழங்க பக்தர்களின் அரோஹரா கோஷம் கடலலையை விஞ்சி ஆர்ப்பரிக்க, காண்டாமணியோசை அணி செய்ய நல்லையம்பதியின் நாயகன் தேரில் ஆரோகணிக்கப்பட்டார். அதனை அடுத்து அகிலம் போற்றும் அலங்காரக் கந்தனின் வருடாந்த மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறுகின்ற இரதோற்சவப் பவனி ஆரம்பமானது.




நல்லையம்பதியில் திரண்டிருந்த பக்தர்கள் பக்திப் பிரவாகத்தில் திளைக்க நல்லூரின் நாயகன் கம்பீரமாக வெளிவீதி வலம் வந்தார். பக்தியுணர்வு மேலிட அரோஹரா கோஷம் எழுப்பி பக்தர்கள் திருவடத்தைப் பிடித்து இழுத்தும், பறவைக் காவடி, தூக்குக்காவடி ஆகியவற்றை எடுத்தும் ஏந்தியும் சிதறு தேங்காய்களை உடைத்தும் தமது நேர்த்திக்கடன்களை செலுத்தினார்கள்.

மாலை அழகால் அலங்காரக் கந்தன் என்றும் இளமையால் குமரன் என்றும் அழைக்கப்படும் எம்பெருமான், பச்சை சாத்தி பக்திக் கோலத்துடன் மீண்டும் ஆலயத்திற்குள் எழுந்தருளினார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு பெருந் தொகையாக பக்தர்கள் சென்றிருந்தனர். நீண்ட தூரங்களில் இருந்து வந்த பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவுசெய்யும் பொருட்டு காவடிகள், பாற்செம்பு, கற்பூரச் சட்டிகளை ஏந்தி வந்த காட்சிகள் வீதியெங்கும் பக்திப்பரவசமாக இருந்தன.

கந்தனின் தேருலாக் காட்சியைக் காண வந்த பக்தர்களுக்கு தாக சாந்தியை பல்வேறு இடங்களிலும் தண்ணீர்ப் பந்தல் அமைத்து அடியவர்கள் வழங்கிய அதேவேளை, பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கண்டம் கடந்து சர்வதேச நாடுகளில் வாழும் தாயக மக்கள், சொந்த மண் திரும்பி குடும்ப விழாவாகக் கொண்டாடும் நல்லைக் கந்தனின் மகோற்சவப் பெருவிழாவில் இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு நல்லைக் கந்தனை தரிசித்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா செப்ரெம்பர் முதலாம் திகதி வியாழக்கிழமை நடை பெற்ற தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெற்றது.











# ஆன்மீகம்



## பக்திமயமான சூழலில் சந்நிதியான் உற்சவம் ஆரம்பம்



இலங்கையின் வரலாற்று புகழ் பெற்ற ஆலயங்களுள் தனித்துவம் வாய்ந்த வந்தோரை வரவேற்கும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆலய வருடாந்த மகோற்சவமானது கடந்த 01 ம் திகதி வியாழக்கிழமை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருவதும் முருகன் அடியார்களை மகிழ்வடையச் செய்யும் எனலாம்.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்னும் முதுமொழிக்கு இணங்க செல்லக் கதிர்காமக் கந்தனை தரிசிப்பதற்காக யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து திரண்டு வரும் அடியார் கூட்டமும் பால்காவடி, தூக்குக்காவடி, பறவைக் காவடி என்று தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்காக சாரிசாரியாக திரண்டு வரும் அடியார் கூட்டத்தினால் ஆலய சூழலில் எழுப்பப்படும் அரோகரா கோஷமும் செல்வச் சந்நிதி ஆலயச்சூழலை பக்திப்பரவசம் கொள்ளச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும் இம் மகோற்சவமானது 10 ம் திகதி சனிக்கிழமை பூங்காவன உற்சவமும், 14 ம் திகதி புதன் கிழமை சப்பறத் திருவிழாவும் 15 ம் திகதி வியாழக்கிழமை தேர் உற்சவமும் 16 ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் மகோற்சவம் இனிது நிறைவடையும். மகோற்சவ தினங்களில் மோகனதாஸ் சுவாமிகளால் நடாத்தப்படும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினசரி ஆன்மீக சொற் பொழிவுகள் காலை 10.30 மணிக்கு நடைபெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேற்படி தேவஸ்தான அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தேவாரா திருவாசகங்கள் ஓதுதலும் பிற்பகல் 4.00 மணி முதல் 6.00 மணி வரை இடம் பெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் சின்மயாமிஷன் ஜாக்ரத் சைதன்யா சுவாமிகள், தெல்லிப்பளை துர்க்கா தேவி ஆலய நிர்வாகத்தை அலங்கரிக்கும் கலாநிதி ஆறுதிருமுருகன் பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை உப அதிபரும் சிறந்த சொற்பொழிவாளருமான திரு.லலீசன் ஆகியோருடைய சமய சொற்பொழிவுகளும் இடம்பெற்று வருகின்றமை ஆலய பக்திமயமான சூழல் அதிகரிப்பதற்கும் ஆன்மீகம் சார் சிந்தனைகள் மேலோங்குவதற்கும் வாய்ப்பாக அமைவதாக சமய பெரியோர்கள் தெரிவித்துள்ளனர். தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலய அமைவிடச் சிறப்பு, வரலாற்று அம்சங்கள் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டியது இந்து சமயிகளது கடமையாகும்.

தொண்டைமானாற்றுக் கிராமத்திலே நகரின் தெற்குப் பகுதியில் தொண்டைமானாற்றுக் கரையின் கழிமுகப் பகுதியில் செல்வச் சந்நிதி முருகன் கோவில் அமைந்துள்ளது. இத்தலத்திற்கு சின்னக் கதிர்காமம், செல்லக் கதிர்காமம், கல்லோடை என்னும் பெயர்களும் உள்ளன. இவ் ஆலயத்தின் மேற்குப் பகுதியில் தொண்டைமானாறு பாய்கின்றது. இக் கோவிலின் மேற்குப் புறமாக உள்ள பூவரசமரமே தல விருட்சமாகக் கொள்ளப்படுகின்றது.இது ஒரு புராதன கால மரம் என்பதுடன் மிகப் பெரிய தவசிரேட்டர் சமாதி அடைந்த இடம் என்றும் கருதப்படுகின்றது. இவ்வாலயத்தில் காணப்படும் குறிப்பிடத்தக்க அம்சமாக கருதப்படுவது வேதாகம முறையிலான வழிபாடுகள் இவ் ஆலயத்தில் இல்லை. முருகனுடைய விக்கிரகம் மூலஸ்தானத்தில் இல்லை. பூசை செய்வோர் பிராமணரல்லாதோர். இவர்கள் வாயை துணியால் கட்டி தீபாராதனை காட்டுதல் முக்கிய மரபாக கொள்ளப்படுகின்றது. கதிர்காமத்திலும் இவ் வகையான வழிபாட்டு முறை இடம்பெற்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் காணப்படும் இன்னொரு சிறப்பியல்பு கதிர் காமக்கந்தனை தரிசிப்பதற்காக செல்லும் அடியார்கள் அரிசி, தேங்காய் முதலியன கொண்ட பொதியை இவ் ஆலய பிள்ளையார் வாசலில் கட்டி வைத்து அவனருள் பெற்றுச் செல்வது நடைமுறையாகும். இதனை "அடப்பம் கட்டுதல்" எனக் குறிப்பிடுவர். இவ் வாலயத்தில் காவடி, கரகாட்டம், குழந்தை களை விற்று வாங்குதல், மொட்டையடித்தல், பால்செம்பு, கற்பூரச் சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம், அடியழிப்பு, காதுகுத்துதல், தைப்பூசம், மாசிமகம், கந்தஷஷ்டி விரதம் அனுஷ்டித்தல் போன்ற புண்ணிய காரியங்களும் இடம்பெற்று வருகின்றன. கந்தஷஸ்டி காலத்தில் என்றும் இல்லாத அமைதியும் சாந்தமும் இவ் ஆலயத்தில் காணப்படுவது சிறப்பம்சமாகும். பூசை வேளைகளில் இவ் ஆலயத்தில் பறை மேளம் கொட்டப்படும் நிகழ்வும் தனித்துவம் வாய்ந்ததாக கொள்ளப்படுகின்றது. இத்தலத்தின் கிழக்குப்புறமாக காணப்படும் மடங்கள் ஆலயத்திற்கு வரும் அடியார்களின் பசியை தீர்க்கும் வகையில் காணப்படுவதும் இக் கந்தன் அன்னதானக்கந்தன் என அழைக்கப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. உற்சவ காலங்களில் பெருமளவு அடியார்கள் தேன், தினைமா ஆகியவற்றால் மாவிளக்கு படையலிட்டு வழிபாடு செய்வதும் மாவிளக்கு பூசை முருக வழிபாட் டுடன் இணைந்ததாக நோக்கப்படுவதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இதே வேளையில் செல்வச்சந்நிதியான் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பருத்தித்துறை பிரதேசசெயலகத்தினரால் ஆலய சூழலில் சுகாதாரம், மற்றும் நீர் விநியோகம், போக்குவரத்து போன்ற சகலவற்றிலும் தீவிர கவனம் செலுத்தி வருவதுடன் அடியார்கள் பாதுகாப்பும் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அடியார்கள் ஆடை அணிதல் வேண்டும் எனவும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

க. கணேசராசா

## ஆடி மாதம் அம்மனுக்கு உகந்த சிறப்புகள்



ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக் கிழமைகள் அம்பாளுக்குத் தனிச்சிறப்பு கொண்டவையாகக் கருதப்படுகின்றன.

1. ஆடி மாத வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமியை வழிபட்டால் வீட்டில் செல்வம் சேரும்.

2. ஆடி கடைசி வெள்ளிக்கிழமை மகாலட்சுமிக்கு உகந்த வரலட்சுமி விரதம் இருப்பது கூடுதல் பலன்களை தரும்.

3. ஆடி மாதம் ஏதாவது ஒரு வெள்ளிக்கிழமை அம்மனை ஆவாகனம் செய்து வீட்டுக்கு வரவழைத்து வழிபடுவது சிறப்பைதரும்.

4. ஆடி மாதம் குத்துவிளக்கை லட்சுமியாக பாவித்து அலங்கரித்து வழிபடுதல் வேண்டும்.

5. ஆடி மாதம் அம்மனுக்கு பால் பாயாசம், சர்க்கரைப் பொங்கல் வைத்து வணங்குதல் வேண்டும்.

6. அம்மனை வழிபடும் போது மறக்காமல் லலிதாசகஸ்ர நாமம் சொல்ல வேண்டும்.

7. ஆடி மாதம் வீட்டில் சிறப்பு பூஜைகள் செய்யும் போது சிறு பெண் குழந்தைகளை அம்மனாக பாவித்து, உணவு கொடுத்து, ரவிக்கை, சீப்பு, குங்குமச்சிமிழ், கண்ணாடி, வளையல், தாம்பூலம் கொடுக்க வேண்டும்.

8. ஆடி மாதம் வெள்ளிக்கிழமை அம்பிகையை வழிபட்டால் வீட்டில் சுப காரியங்கள் தங்கு தடையின்றி நடைபெறும்.

9. பெரியபாளையம் கோவிலில் எந்த அம்மன் தலத்திலும் இல்லாத வகையில் 2 மாதங்கள் ஆடி திருவிழா நடைபெறும்.

10. ஆடிப்பூரத் தன்று ஆண்டாள் பிறந்தாள் என்பது உங்களுக்குத் தெரிந்து இருக்கும். ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவிலில் ஆடிப்பூரத் தன்று ஆண்டாளை நந்த வனத்துக்கு எழுந்தருள செய்வார்கள். அப்போது திருப்பாவை, நாச்சியார் திருமொழி, திருப்பல்லாண்டு பாசுரங்கள் பாடப்படும். இதனால் ஆண்டாள் மனம் குளிர்ந்து இருப்பாள். அந்த சமயத்தில் ஆண்டாளை வழிபட்டால், உங்களது எல்லா பிரார்த்தனைகளும் நிறைவேறும்.

11. ஆடி மாதம் அம்மனுக்கு சாற்றப்படும். வளையல்களைப் பெண்கள் அணிந்து கொண்டால் திருமண பாக்கியம், குழந்தை பாக்கியம், சகல நலன்களையும், நீங்காத செல்வத்தை பெறலாம் என்பது ஐதீகம்.

12.ஆடி மாத வெள்ளிக்கிழமைகளில் அதிகாலையில் எழுந்து குளித்து, தூய ஆடை அணிந்து, சாணத்தைப் பிள்ளையாராகப் பிடித்து, செவ்வரளி, செம்பருத்தி, அறுகு கொண்டு சூர்யோதயத்திற்கு முன்னர் விநாயகரை பூஜிக்க வேண்டும். வாழையிலை மீது நெல்லைப்பரப்பி அதன் மீது கொழுக்கட்டை வைத்து விநாயகரை வழிபட செல்வம் கொழிக்கும்.

13. ஆடி மாதத்தை "பீடை மாதம்" என்று ஒதுக்குவது, அறியாமையால் வந்த பழக்கம். உண்மையில், "பீடமாதம்" என்றுதான் பெயர். அதாவது மனமாகிய பீடத்தில் இறைவனை வைத்து வழிபடவேண்டிய மாதம் என்பதே சரியானது.

14.ஆடி பவுர்ணமியன்று சிவபெருமானுக்கு திரட்டுப்பால் அபிஷேகம் செய்து, கருப்புப் பட்டாடை, நூறு முத்துக்கள் கோர்த்த மணி மாலை, கருஊமத்தம் பூமாலை அணிவித்து, மூங்கில் அரிசிப் பாயாசம் படைத்து வழிபட்டால் எப்பேர்ப்பட்ட பகையும் விலகும்.

15.பொதுவாகவே வெள்ளிக்கிழமைகள் அம்பாளுக்குரிய சிறந்த நாட்களாகும். இதனோடு அயனத்துக்குரிய சிறப்பும் சேருவதால் ஆடி மாதத்தில் வரும் வெள்ளிக் கிழமைகள் அம்பாளுக்குத் தனிச்சிறப்பு கொண்டவையாகக் கருதப்படுகின்றன.

பூத்தவளே, புவனம் பதினான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே. பின் கரந்தவளே. கறைக்கண்டனுக்கு
மூத்தவளே. என்றும்மூவா முகுந்தற்கு இளையவளே.
மாத்தவளே. உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே

(14 ஆம் பக்க தொடர்ச்சி)

## புலிகளின்..

ஊடாக அவர்கள் தொடர்புகளை ஏற்படுத்த முனைந்தனர்.

படுகாயமடைந்த பல ஆயிரம் விடுதலைப் புலிகளின் போராளிகளும் பொதுமக்களும் மக்கள் பாதுகாப்பு வலயம் எனப்படும் பகுதியிலிருப்பதாகவும் விடுதலைப் புலிகளின் தரப்பில் இருந்து எவ்விதமான துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்த அவர்கள் இது தொடர்பாக ஜெனீவாவில் உள்ள அனைத்துலக சங்கத்திற்கு தெரியப்படுத்தி படுகாயமடைந்து உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

இவை அனைத்தும் நடைபெற்று ஒரு சில மணி நேரத்தில் அதாவது இன்று (மே.18. 2009) காலை பா.நடேசன் சீ புலித்தேவன் உட்பட 18 மூத்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் செய்தி வெளியாகியிருந்தது.

மே-18-2009: புலிகளின் பொலிஸ் பிரிவின் தலைவர் இளங்கோ பிரபாகரனின் மகனான சாள்ஸ் அன்ரனியின் நெருங்கிய உதவியாளர் சுதர்மன் மற்றும் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த கபில் அம்மான் ஆகிய மூவரின் சடலங்களை படையினர் கைப்பற்றியுள்ளனர்.


மே-18-2009: புலிகளின் கடற்படை சிறப்புத்தளபதி சூசையின் உடல் இன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கரிய முள்ளிவாய்க்காலின் சதுப்பு நிலப்பகுதியில் இவரின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திரு.நஜெயபாலன் எழுதிய,"வட்டுக்கோட்டையிலிருந்து முள்ளிவாய்க்கால் வரை,"– பக்கங்கள் ( 227–234)

# சந்தர்ப்பவாதிகள்

அத்தியாயம் 18

ஏ.ஜே.ஞானேந்திரன்



பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். பாம்பென்றால் எல்லோருக்குமேபயந்தான். அப்படித்தான் பொலிஸ் என்றால் பொதுவாகவே குற்றம் செய்யாதவருக்குக் கூட தேவையற்ற ஒரு சின்னப் பயம் அடி மனதில் வந்துவிடும்.

சுவிஸ்நாடு ஒரு சீரான நாடாகஇருப்பதற்கு முழுமுதற்காரணம் அங்குள்ள பொலிஸாரின் அற்புதசேவைதான். அங்கு இராணுவத்திற்கு வேலை இல்லை. நாட்டை ஒரு கட்டுக்கோப்பில் வைத்திருக்கும் பணியை பொலிஸாரே செய்து கொண்டிருக்கின்றார்கள். வாகன ஒழுங்கு தொடக்கம் கொலை, கொள்ளை, கள்ளக் கடத்தல் போன்ற குற்றச் செயல்களையெல்லாம் தமது கண்காணிப்பில் வைத்திருக்கும் சுவிஸ் பொலிஸார் ஆற்றும் சேவை மகத்தானது.

அப்படியான பொலிஸார் இருவர் தன்னிடம் அன்று வந்ததை அப்பொழுது நினைத்துப் பார்த்தார் கார்த்தி. என்ன காரணமாக இருக்கும் என்று பலதையும் நினைத்துப் பார்த்து அன்று குழம்பிப் போனார் கார்த்தி.

வெகு நட்போடு அவரிடம் பேச்சுக் கொடுத்த அதிகாரிகள், ஆறு மாதங்களுக்கு முன்பு நடந்தகொலை பற்றி விசாரிக்க வந்திருப்பதாகக் கூறி, தெரிந்ததை தமக்கு ஒளிக்காமல் கூறும்படி கார்த்தியிடம் கேட்டிருந்தார்கள்.

ஆறு மாதங்களுக்கு முன்பு இவருக்கு நன்கு தெரிந்த ஜெயசீலன் என்பவன் அவனது அறையில் கத்திக்குத்தில் கொல்லப்பட்டிருந்தான். சீட்டுப் பண விவகாரம் என்று பலரும் பேசிக் கொண்டார்கள். வட்டிக்குப் பணம் கொடுக்கும் பழக்கமும் இந்த ஜெயசீலனிடம் இருந்தது.

கார்த்தி தனக்குத் தெரிந்ததையெல்லாம் மறைக்காமல் கூறினார். தமிழர்கள் சீட்டுப் போடும் வழக்கத்தை வைத்திருக்கின்றார்கள். வங்கியில் போடுவது போல மாதாமாதம் ஒரு தொகையை பொறுப்பாக ஒருவரிடம் கொடுத்து, நம்பிக்கையின் அடிப்படையில் பணம் ரொக்கமாகக் கைமாறும் முறை இது. ஒருவர் பொறுப்பாக இருந்து மாதாமாதம் பணத்தை வசூலிப்பார். பின்பு தொகையாகப் பணத்தை எடுப்பது வழமை. கழிவுச் சீட்டு என்ன என்பது பற்றியும் விளக்கிக் கூறினார். இந்தச் சீட்டு ஏல விற்பனை போல நடக்கும். அவரவர் விரும்பிய தொகையைக் கூறலாம். பண நெருக்கடி உள்ளவர்கள்,பெரிய கழிவில் சீட்டுத் தொகையை எடுப்பார்கள் என்பதை கார்த்தி அதிகாரிக்கு விளக்கமாகக் கூறினார். தானும் இறந்த சீலனுடன் சீட்டுப் போட்ட 20பேர்களில் ஒருவன் என்று விளக்கமாகக் கூறி முடித்தார்.

பொலிஸார் நன்றி கூறிவிட்டு,கைகுலுக்கிவிட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் வெளியில் போன பின்புதான் அவருக்கு நிம்மதியாகப் பெருமூச்சு விட முடிந்தது.

சீலனைக் கொன்றவனை இன்னும் பிடிக்கவில்லை. வெளிநாட்டுக்கு ஓடி விட்டதாகப் பேசிக்கொள்கிறார்கள். இன்டர்போலின் உதவியை சுவிஸ் பொலிஸார் நாடியிருப்பதாக அங்குள்ள புதினப் பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

ஸ்வான்ஸிக் மினிட்டன் - 20 நிமிடங்கள் என்ற பெயரில் இலவசமாக விநியோகிக்கப்படும் தினசரியை கார்த்தி தினமும் வீட்டுக்கு எடுத்து வருவார். அவருக்கு ஜேர்மன் அறிவு பெரிதாக இல்லையென்றாலும், அகராதியின் உதவியுடன் தினமும் இந்தத் தினசரியின் செய்திகளை மேலோட்டமாகப் பார்ப்பதை அவர் வழமையாக வைத்திருந்தார். இதனால் நாட்டு நடப்புகளை ஓரளவு அறிய முடிந்ததோடு, ஜேர்மன் மொழியின் சொற்பலமும் தனக்கு அதிகரிப்பதை அவர் உணர்ந்திருந்தார்.

அகதியாக அவருடன் ஒன்றாக முகாமில் இருந்த ஒரு நண்பனின் மகளுக்கு அன்று பிறந்த நாள் கொண்டாட்டம். நேரில் வீட்டுக்கு வந்து அழைப்பிதழைத்தந்து அவசியம் வாடா மச்சான் என்று அன்புக் கட்டளையிட்டு விட்டு அவன் சென்றிருந்தான். கார்த்தியால் அந்த அழைப்பைப் புறக்கணிக்க முடியவில்லை. நம்மவர்கள் பூப்புனித நீராட்டு விழா, பிறந்த நாள் விழா, கல்யாண வீட்டு விழா என்று விழாக்களை வைப்பது ஒருவகையில் சந்திப்பு நிகழ்வுகளாக அமைந்தாலும், பலருக்கு வார முடிவுகளில் இப்படியான அழைப்புகளுக்கு போய்வரவே நேரம் சரியாக இருந்தது. போகமறுத்து விட்டு எப்படி சமூகத்தில் உலாவ முடியும்? தன் பிள்ளைகளுக்கு ஒரு கொண்டாட்டம் என்று வந்து விட்டால் எந்த முகத்தோடு போய் அவர்களை அழைப்பது?

கார்த்திக்கு அப்படியொரு நிர்ப்பந்தம் இல்லையென்றாலும், நட்புக்காக இந்தக் கொண்டாட்டத்திற்கு அவர் போகவேண்டி இருந்தது. 11 மணியளவில் இவரது இன்னொரு நண்பன் காரில் இவரையும் ஏற்றிச் செல்வதற்குச் சம்மதித்திருந்தான். உடுத்திக் கொண்டு தயாராகத் தெருவில் காத்துக் கொண்டு நின்றார் கார்த்தி.

சுவிஸ் நாட்டுப் பழக்கதோஷமோ தெரியவில்லை. நண்பது கார் சரியாக 10.59 க்கு அவரடியில் வந்து நிறுத்தப்பட்டது. காரின் முன்சீட்டில் நண்பனின் மனைவி உட்கார்ந்திருந்தாள். இருவரிடமும் சுகம் விசாரித்துவிட்டு, கார்க் கதவைத் திறந்துகொண்டு பின்சீட்டில் உட்கார்ந்தார் கார்த்தி.

" என்ன சிவலிங்கம் சொல்லி வைச்ச மாதிரி 11.00 மணிக்கு வந்திற்றா.? "

" இந்த மண்ணில வருஷக் கணக்கா இருக்கிற நாங்க அதையும் செய்யாட்டி, இங்க இருந்து என்ன பிரயோசனம் ? " என்றார் சிவலிங்கம்.

" அது உண்மைதான். இந்த நாட்டு மணிக்கூடுகள் போல நேரந் தவறாமை ஓர் அருமையான விடயந்தான். ஆனால் எனக்கு இன்னமும் அவங்களைப் போல வாழ முடியல்லை. கடைசி நேரத்தில ஓடிப்போய் டிராம் பிடிக்கிற கோஷ்டிதான் நான் "

" கார்த்தி திருந்த வேணும். மாற வேண்டிய நேரங்களில் நாம் மாற வேண்டியது முக்கியம். நான் இப்பிடித்தான் எண்டு சொல்லுறது மோட்டுத்தனம்"

" உண்மைதான் சிவலிங்கம்.. ஆனால் எப்பிடி முயற்சி செய்தாலும் முடியல்லையே"

நண்பர்கள் இருவரும் பல விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். யாழ்ப்பாணத்து அரசியல் நிலைமை தொடக்கம், பிரிட்டனின் தேர்தல் வரை பலதையும் பற்றி இருவரும் பேசிக் கொண்டார்கள். சிவலிங்கமும் கார்த்தியைப் போல தினசரிச் செய்திகளை தவறவிடாமல் வாசிப்பவர்.

சிவலிங்கம் பிரேக்கை அழுத்தி, சரி இறங்குவம் என்ற போது, அட அதுக்கிள சூரிச் வந்திற்றமா என்று ஆச்சரியத்தோடு கேட்டுக் கொண்டே கார்க் கதவைத் திறக்க முற்பட்டார் கார்த்தி.

இருவரும் சுவாரஸ்ஸியமாக பல விடயங்களைத் தொட்டுப் பேசிக் கொண்டிருந்ததால் ஒரு மணி நேரம் எப்படிப் போனது என்று தெரியாமல் பறந்து போய்விட்டது. சிவலிங்கத்தின் மனைவி ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுந்து விட்டாள்.

பிறந்த நாள் கொண்டாட்ட மண்டபம் நிரம்பியிருந்தது. நீண்ட நாட்களாகச் சந்திக்காமல் இருந்த பலரை அப்பொழுது கார்த்தியால் சந்திக்க முடிந்தது. பலர் நன்றாக மாறிப் போயிருந்தார்கள். பிள்ளைகள் குடும்பம் என்று எல்லோரும் அவரவர்பாடு கார்த்தியின் மனைவி பற்றி விசாரித்தார்கள். எதைச் சொல்வது? எப்படிச் சொல்வது? நண்பர்களைச்சமாளிக்க பெரும் சிரமப்பட்டார் கார்த்தி.

அந்த விழாவிற்கு சுவிஸ் நாட்டவர்களும் வந்திருந்தார்கள். இப்பொழுதெல்லாம் தமிழர் விழாக்களுக்கு சுவிஸ் நாட்டவர்கள் வருவது வழமையான நிகழ்வாகி விட்டது. அதிலும் சுவிஸ் பெண்கள் சேலையுடுத்தி வருவது பலரும் காணக்கூடிய ஒன்றாக இருக்கின்றது. உறைப்பான உணவையும் விரும்பி உண்ண அவர்கள் பழகிக் கொண்டு விட்டார்கள். மட்டன் ரோல் இவர்கள் மிகவும் விரும்பி உண்ணும் ஒரு தின்பண்டம்.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சுவிஸ் பெண்களை, ஆண்களை வகுப்புத் தோழர்களாகவும், வேலை செய்யும் இடங்களில் சுவிஸ் நண்பர்களையும் பலர் கொண்டிருப்பதால், ஜேர்மன் மொழியைச்சரளமாகப் பேசுவதாலும், நட்பு இப்படி விழாக்கள் வரை நீண்டு கொண்டிருக்கின்றது.

மொழிதானே சகலதிற்கும் பாலம் அமைத்துக் கொடுக்கின்றது?

பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு அழைத்திருந்த காண்டீபன் கார்த்தி அருகில் வந்து, தோளில் தட்டி எழுப்பிக் கொண்டு பின்னே சென்றான். வந்த ஆரம்ப நாட்களில் தண்ணிச்சாமி என்று காண்டீபனை கார்த்தியும் நண்பர்களும் கூப்பிடுவதுண்டு. அந்த அளவு க்கு காண்டீபன் பெருங்குடிமகன்.

இப்போது அடியோடு குடிப்பதை நிறுத்தி விட்டானாம். அவனது குடும்ப மருத்துவர் நிறுத்தியிருக்கின்றார் என்று சொல்வது பொருத்தமாக இருக்கலாம்.

கார்த்தி கொண்டு செல்லப்பட்ட அறையில் பத்துக்கு மேற்பட்ட மதுபானப் பிரியர்கள் கூடியிருந்தார்கள். அதில் சிலரை கார்த்திக்கு முன்பே தெரியும்.

கார்த்திக்கின் முகத்திற்கு நேரே விஸ்கி நிரப்பப்பட்ட கிளாஸ் நீட்டப்பட்டது. குடிக்கக்கூடாது என்று நினைத்துக் கொண்டுதான் விழாக்களுக்கு கார்த்தி வருவார். ஆனால் எப்படியோ அவர் வாயில் பானம் இறங்கி விடும். அப்படி ஆரம்பித்தால் சும்மா பெயருக்கு தொண்டையை நனைக்க மாட்டார் கார்த்தி.

அற நனைந்தவனுக்கு கூதலென்ன குளிரென்ன. டேஸ்ட்டுக்கு ஆட்டுக்கறியையும் கொண்டு வந்து வைத்தான் காண்டீபன்.

இறுதியில் அதே காண்டீபன்.கார்த்தியைத் தூக்காத குறையாக இழுத்துக் கொண்டு போய் கார்த்தியின் நண்பனின் காரில் ஏற்ற வேண்டியிருந்தது. கார் புறப் பட்டு பாசலை நோக்கி ஓடிக்கொண்டிருக்க, பின் சீட்டில், இன்னொரு உலகத்தில் பயணி த்துக் கொண்டிருந்தார் கார்த்தி.

"மனுஷன் குடிச்சு குடிச்சு ஈரல் அழுகிச் சாகப் போவுது" என்ற தன் மனைவியின் முணுமுணுப்பு சிவலிங்கத்தின் காதில் விழுந்தது.... (தொடரும்..)

## 150 வருட...

நாங்கள் எங்கள் குலதெய்வம் ஆலடி முருகனுக்கு பூஜை செய்ய வேண்டும்.

கனகரட்ணம் நாகேஸ்வரி- நான் இந்த ஊரைச் சேர்ந்தவள். இந்தக் கோயிலுக்கு நானும் எங்கள் குடும்பமும் கூட சொந்தக்காரர்கள்தான். எங்கள் பரம்பரைக் கோயிலை சிலர் அறியாமல் தகர்த்து விட்டார்கள். அவர்களுக்காக கடவுளிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன். ஆலடி முருகள் எங்கள் உடம்பிலும் மூச்சிலும் நிறைந்திருக்கும் தெய்வமாகும். முருகன் திருவருளால் நாங்கள் அந்த கோயிலை மீண்டும் கட்டுவோம் என்ற அசையாத நம்பிக்கை எமக்குண்டு.

சுப்பிரமணியம் நாகராசா- எனக்கு வயது 67 நானே இந்தக் கோயிலின் மணியகாரர். 1990 ஆம் ஆண்டிற்கு பின்னர் நானே மணியகாரராக இருக்கின்றேன். எனக்கு முன்னர் எனது தந்தையார் இராமலிங்கம் சுப்பிரமணியம் மற்றும் எனது பரம்பரையைச் சேர்ந்தவர்கள் கோவிலின் மணியகாரர்களாக இருந்தார்கள். கோவில் பிரச்சினை சம்பந்தமாக ஊர்காவற்துறை பொலிஸாருக்கு ஐந்து முறை முறைப்பாடு செய்தோம். ஆனால் பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கோயிலை இடித்தவர்கள் தொலைபேசியில் அழைத்தால், பொலிஸார் பறந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறார்கள். இது என்ன மர்மம் என்று புரியவில்லை. பொலிஸார் எமது முறைப்பாடுகளுக்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் முறைப்பாடு செய்துள்ளோம். எங்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் எல்லோரும் முருகள் அருள் பெறவேண்டும். தமிழ் கடவுள் முருகன் சாந்தி சாந்தி சாந்தி.



# விளையாட்டு

# கண்ணீருடன் விடைபெற்ற ஜேர்மனி உதைபந்தாட்ட அணித் தலைவர்

ஜேர்மனி உதைபந்தாட்ட அணியின் கப்டன் பஸ்டியான் ஸ்வெய்ன்ஸ்டீகர் (32), பின்லாந்துக்கு எதிரான நட்பு ரீதியிலான ஆட்டத்தோடு பிரியா விடை பெற்றார்.

யூரோ கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் அரையிறுதியில் ஜேர்மனி அணி, பிரான்ஸிடம் தோற்றதைத் தொடர்ந்து சர்வதேச போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார் ஸ்வெய்ன்ஸ்டீகர். இதையடுத்து அவரை கௌரவிக்கும் விதமாக பின்லாந்துக்கு எதிரான நட்பு ரீதியிலான ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் ஜேர்மனி, இரண்டாம் நிலை வீரர்களுடன் விளையாடியபோதும் 2-0 என்ற கோல் வெற்றி கண்டது.

ஆட்டம் தொடங்குவதற்கு முன்னதாக ஸ்வெய்ன்ஸ்டீகர் கௌரவிக்கப்பட்டார். அப்போது அவருடைய கண்கள் குளமாகின. ஆட்டம் தொடங்கியபோது ஸ்வெய்ன்ஸ்டீகர் வசம் பந்து செல்லும்போதெல்லாம் ரசிகர்கள் அவருடைய பெயரை சொல்லி உரக்கக் கத்தினர். 67-ஆவது நிமிடத்தில் கண்ணீருடன் மைதானத்திலிருந்து வெளியேறினார் ஸ்வெய்ன்ஸ்டீகர். அப்போது மீண்டும் ஒரு முறை ரசிகர்கள் அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பி அவருக்கு மரியாதை செய்தனர். முன்னதாக மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்த ரசிகர் ஒருவர், ஸ்வெய்ன்ஸ்டீகருடன் "செல்பி" எடுத்துக் கொண்டார். கடைசி ஆட்டத்தில் விளையாடியது குறித்துப் பேசிய ஸ்வெய்ன்ஸ்டீகர், "இந்த ஆட்டம் மிகுந்த உணர்வுபூர்வமாக இருந்தது. ஒவ்வொரு நொடியையும் ரசித்து விளையாடினேன் ஜேர்மனிக்காகவும், ஜேர்மனிரசிகர்களுக்காகவும் விளையாடியது மிகப்பெரிய கௌரவம் ஆகும்" என்றார்.

2004-ஆம் ஆண்டு ஹங்கேரிக்கு எதிரான ஆட்டத்தில் அறிமுகமானார் ஸ்வெய்ன்ஸ்டீகர். அதில் ஜேர்மனி 0-2 என்ற கோல் கணக்கில் தோல்வி கண்டாலும், கடைசி ஆட்டத்தில் பின்லாந்தை வீழ்த்திய மகிழ்ச்சியோடு விடை பெற்றுள்ளார் ஸ்வெய்ன்ஸ்டீகர். ஜேர்மனியின் தலைசிறந்த மிட்பீல்டர்களில் ஒருவரான ஸ்வெய்ன்ஸ்டீகர் 121 ஆட்டங்களில் விளையாடி 24 கோல்களை அடித்துள்ளார். 2014- இல் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டியில் ஸ்வெய்ன்ஸ்டீகர் தலைமையிலான ஜேர்மனி அணி சாம்பியன் பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது.

பஸ்டியான் ஸ்வெய்ன்ஸ்டீகரின் ஓய்வைத் தொடர்ந்து ஜேர்மனியின் புதிய கேப்டனாக கோல் கீப்பர் மானுவேல் நூயர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2018 உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்றில் ஜேர்மனியும், நோர்வேயும் மோதுகின்றன. ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அந்த ஆட்டத்தில் மானுவேல் நூயர் கேப்டனாக செயல்படுவார் என ஜெர்மனி கால்பந்து சங்கம் அறிவித்துள்ளது.



## தங்கம் வென்றதற்கு பரிசாக கிராமத்துக்கு மின்சாரம்




ரியோ ஒலிம்பிக்சில் தங்கம் வென்றதற்கு பரிசாக, 40 ஆண்டாக காத்திருந்த தனது கிராமத்துக்கு மின்சாரத்தை பெற்று தந்து சாதித்துள்ளார் கென்ய தடகள வீராங்கனை பெய்த் கிப்யிகான். பிறேஸிலில் நடந்து முடிந்த ரியோ ஒலிம்பிக்கில், 1500 ஓட்டப்பந்தயத்தில் கென்ய வீராங்கனை பெய்த் கிப்யிகான் தங்கம் வென்றார். ஒவ்வொரு நாடும் பதக்கம் வென்ற தங்களது வீரர், வீராங்கனைகளுக்கு அதிக பொருட்செலவில் பரிசுகளை வாரி வழங்கி வருகின்றன.

அந்த வகையில், கிப்யிகானுக்கும் பரிசு தர அந்நாட்டு அரசு முடிவு செய்தது. அப்போது, கிப்யிகானின் தந்தை கேட்ட பரிசு, மின்சாரம். நகுரா மாகாணம் நடாபிபிட் கிராமத்தில் பிறந்தவர் கிப்யிகான். அந்த கிராமத்தில் மின்சாரம் உள்ளிட்ட எந்த அடிப்படை வசதியும் கிடையாது. மின்சாரத்துக்காக அந்த கிராமம் 40 ஆண்டாக காத்திருக்கிறது. மின்சார வசதி இல்லாததால் தனது மகள் தங்கம் வெல்லும் நிகழ்வை கூட அவரது தந்தையால் தொலைக் காட்சியில் பார்க்க முடியவில்லை.

இதனால், தங்கப் பதக்கத்துக்கு பரிசாக ஒட்டுமொத்த கிராமத்துக்கும் மின்வசதி வேண்டுமென கிப்யிகானின் தந்தை, அந்நாட்டு அதிபருக்கு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளை உடனடியாக நிறைவேற்ற அரசு உத்தரவிட்டது. அதன்படி, கிப்யிகானின் வீடு மற்றும் கிராமம் முழுவதற்கும் 10 நாளில் மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது. கிப்யிகான் தங்கம் வென்று நாட்டுக்கு பெருமை சேர்த்ததோடு, தனது கிராமத்துக்கும் வெளிச்சத்தை கொண்டு வந்து சாதித்துள்ளார். அவரது குடும்பத்தினரை மக்கள் மனதார பாராட்டுகின்றனர். மேலும், கிப்யிகானின் வீட்டுக்கு பிரபல நிறுவனம், விலையுயர்ந்த தொலைக்காட்சி ஒன்றை பரிசாக வழங்கி உள்ளது.


## 100 – மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் 100 –வயது பாட்டி






அமெரிக்க மாஸ்டர்ஸ் தடகளப் போட்டி வான்கூவரில் நடைபெற்றது. இதுவும் ஒலிம்பிக் போலத்தான். 10 ஆயிரம் தடகள வீர வீராங்கனைகள் பங்கேற்ற போட்டி இது. ஒரே விதி 30 வயசுக்கு மேல் இருக்க வேண்டும். இந்த போட்டியில் சண்டிகாரைச் சேர்ந்த இந்திய பாட்டி மான் கவுர் பங்கேற்றார். இவருக்கு வயது 100. பாட்டியோட இலக்கு 100 மீற்றர் ஓட்டத்துல தங்கம் ஜெயிப்பது தான். பாட்டி கூட ஓடுவதற்கு 100 வயசுல யாருமே மைதானத்தில் இல்லை. 100 மீற்றர் தூரத்தை 100 வயசுல ஒன்றரை நிமிஷத்துல கடந்து தங்கம் வென்றார். கவுர் பாட்டி இலக்கை தொட்ட போது, 80, 90 வயசுல உள்ள பெருசுங்க எல்லாம் ஓடி வந்து கட்டி பிடிச்சு வாழ்த்தினார்கள். இலக்கை கடந்ததும் பாட்டி, கொஞ்சம் தண்ணீர் மட்டும் தான் குடித்தார். அதுக்கு முன்னாடி, ஈட்டி எறிதல்லில் பாட்டிக் கூட போட்டி போட, யாரும் இல்ல பாட்டிக்குத்தான் தங்கம். அடுத்து குண்டு எறிதல். அங்கேயும் மோத யாருக்கும் "தில் " இல்ல. அங்கெல்லாம் தங்கம் ஜெயிச்சுட்டுதான் 100 மீற்றருக்கு வந்து பட்டையை கிளப்பிருக்காங்க.

## இறந்தவரின் பதக்கம் எனக்கு வேண்டாம்



இலண்டனில் 2012-ம் ஆண்டு நடந்த ஒலிம்பிக்கில், ஆண்களுக்கான மல்யுத்தம் பிரீஸ்டைல் 60 கிலோ உடல் எடைப்பிரிவில் இந்திய வீரர் யோகேஷ்வர் வெண்கலப்பதக்கம் வென்றார். இந்த போட்டியில் தங்கப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் போராடி தோல்வி கண்டு வெள்ளி பெற்ற ரஷ்ய மல்யுத்த வீரரான 27 வயது பெசிக் குடுகோவ் 2013 ஆம் ஆண்டில் நடந்த கார் விபத்தில் மரணம் அடைந்தார்.

தற்போது ரஷ்ய வீரர்கள் மீது ஊக்க மருந்து பிரச்சினை கிளம்பி இருப்பதால், நான்கு முறை உலக சாம்பியனான பெசிக் குடுகோவிடம் ஒலிம்பிக் போட்டியின் போது எடுத்து பாதுகாப்பாக வைக்கப்பட்டு இருந்த ரத்த மாதிரியை உலக ஊக்க மருந்து தடுப்பு மையம் மீண்டும் பரிசோதனை செய்ததில் அவர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தியது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவரது வெள்ளிப்பதக்கத்தை சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் பறிமுதல் செய்கிறது. அந்த பதக்கம் யோகேஷ்வர் தத்துக்கு வழங்கப்பட இருக்கிறது.

இது குறித்து யோகேஷ்வர் டுவிட்டரில் வெளியிட்டுள்ள கருத்தில், 'பெசிக் குடுகோவ் அற்புதமான மல்யுத்த வீரர். இறந்து விட்ட நிலையில் அவர் ஊக்க மருந்து சோதனையில் சிக்கி இருப்பது மிகவும் சோகமானதாகும். சாத்தியம் இருந்தால் அந்த பதக்கம் பெசிக் குடுகோவ் குடும்பத்தினரிடமே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அது தான் அவரது குடும்பத்துக்கு அளிக்கும் கௌரவமாகும். என்னை பொறுத்தமட்டில் மனிதாபிமானம் தான் எல்லாவற்றையும் விட உயர்வானது' என்று தெரிவித்துள்ளார். யோகேஷ்வரின் இந்த செயல் பல்வேறு தரப்பினரையும் கவர்ந்து இருக்கிறது.

தினச்செய்தி
என்றும் உங்களுடன்



# தமிழ்ச்செல்வனின் சசிரேகாவின் தெரியாத உண்மைகள்



பிராமணர் குடியிருப்பு, சுழிபுரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவச்செல்வம்-மங்களகுமாரியின் ஐந்து பிள்ளைகளில் ஒருவரே சசிரேகா. இவருடன் சேர்த்து இவர்களில் இருவர் பெண்களும் மூன்று ஆண்களும் ஆவர்.

ஆரம்ப காலத்தில் இவர்கள் கொழும்பு தெஹிவளையில் வசித்து வந்தனர். சசிரேகாவின் தகப்பனார் கொழும்பு பம்பலப்பிட்டியவில் உள்ள மஜெஸ்ரிக் சிற்றிக்கு எதிராக ஒரு கடை வைத்திருந்தார். இதனால் சசிரேகா தனது ஆரம்பக் கல்வியை 5 ஆம் வகுப்பு வரை கொழும்பிலுள்ள சென். அன்ரனீஸ் மகளிர் கல்லூரியில் கல்வி கற்றார்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் இவர்களது குடும்பம் யாழ் திரும்பியதையடுத்து வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் வரை படித்தார். ஆனால் பரீட்சை எடுக்கவில்லை. சசிரேகா நடனத்தில் அக்கறையுடையவராக இருந்தார். இவர் நாட்டியத்தில் Grade 5 வரை படித்தார். நடனக் கலையில் ஆர்வம் கொண்டவராக இருந்தமையினால் சசிரேகா நடன நிகழ்ச்சிகளில் பங்குபற்றத் தொடங்கினார்.

சசிரேகா கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய காலத்தில் அவர் விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகத்தின் பல நடன நிகழ்ச்சிகளையும் நடாத்தி வந்தார். அந்தக் காலத்தில் இவரின் நடன நிகழ்ச்சிகளைப் பார்வையிட்ட தமிழ்ச் செல்வன் சசிரேகாவின் மீது ஆசைப்பட்டு அவரை திருமணம் செய்ய விரும்பினார். அவரது விருப்பத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் தெரிவித்தார்.

1990 களில் யாழ் குடாநாடு முழுவதுமே புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இசை நிகழ்ச்சிகளில் சசிரேகா ஈடுபட்டு வந்த காலத்தில் இவரது பெற்றோர்கள் அவர் இவ்வாறு விடுதலைப் புலிகளின் கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதை விரும்பவில்லை. அப்போது தான் 1995 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் யாழ் மாவட்டம் அரச படைகளால் கைப்பற்றப்பட்டதையடுத்து புலிகள் வன்னி நோக்கிச் சென்றனர்.

அவ்வாறு சென்றவர்களில் ஒருவராக சசிரேகாவும் இருந்தார். சசிரேகாவின் பெற்றோர்கள் தமது மகள் தமிழ்ச் செல்வனை திருமணம் செய்வதில் விருப்பம் காட்டவில்லை. ஏனெனில் அவர்கள் பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்.

அதே நேரம் தமிழ்ச்செல்வன் சாவகச்சேரியைச் சேர்ந்த நாவிதர் குலத்தை சேர்ந்தவர். எனவே சாதி குறைந்த ஒருவரை திருமணம் செய்வதற்கு சசிரேகாவின் பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த எதிர்ப்பால் சசிரேகாவை விட்டுவிட்டு அவரது பெற்றோர் கொழும்பிற்குச் சென்று குடியேறினார்கள். இதனையடுத்து வன்னிக்குச் சென்ற சசிரேகாவை அன்ரன் பாலசிங்கம் சந்தித்து தமிழ்ச்செல்வனை திருமணம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

புதுக்குடியிருப்பில் இவர்களது திருமண வைபவம் நடைபெற்றது. இவர்களது திருமணத்தை பிரபாகரனும் மனைவி மதிவதனியும் தமிழ்ச்செல்வனின் பெற்றோர் ஸ்தானத்திலும் அன்ரன் பாலசிங்கமும் மனைவி அடேலும் சசிரேகாவின் பெற்றோர் ஸ்தானத்திலும் இருந்து திருமணத்தை நடத்தி வைத்தார்கள்.

காலப்போக்கில் இவர்களுக்கு அலைமகள் ஒளிவேந்தன் எனும் இரு பிள்ளைகள் பிறந்தனர். யுத்தம் தீவிரமடைந்த நேரம், தமிழ்ச்செல்வன் 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ஆம் திகதி இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பில் வாழ்ந்து வந்த சசிரேகாவும் 2 பிள்ளைகளும் முல்லைத்தீவில் உள்ள ஒரு வீட்டிற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். அவர் வன்னியை விட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வ தற்கு புலிகளின் தலைமையிடம் பல தடவைகள் விருப்பம் தெரிவித்த போதும் அனுமதி வழங்கப்படவில்லை.

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைந்த பின்னர் சசிரேகாவும் பிள்ளைகளும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு சென்றனர். இராணுவத்தினர் முகாமில் வைத்து சசிரேகா வையும் இரண்டு பிள்ளைகளையும் அடையாளம் கண்டனர். சில காலம் வன்னியில் உள்ள இராணுவ முகாமிலும் அதனையடுத்து பனாகொடையிலுள்ள இராணுவக் குடியிருப்புப் பகுதியிலும் குடியேற்றினர்.

பின்னர் 2011 ஆம் ஆண்டு சசிரேகாவும் பிள்ளைகளும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர் கொழும்பு தெஹிவளையில் பெற்றோருடன் சென்று வாழ்ந்து வந்தார். பிள்ளைகளின் கல்விக்காக இராணுவத்தின் அனுமதியுடன் தமிழ்நாட்டிற்கு சென்ற சசிரேகா அங்கே பிள்ளைகளுக்கு கல்வி கற்க வசதிகள் செய்து கொள்ள முடியாமல் தடுமாறிய வேளை லண்டனிலுள்ள அவரது சகோதரர்களின் உதவியுடன் பயண முகவர் ஒருவரூடாக பிரான்ஸ் சென்றார்.

தற்போது சசிரேகா பிரான்சில் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார். சசிரேகா இலங்கையி லிருந்து இந்தியாவிற்கு போவதற்கு முன்னர் புலிகள் மீது கொண்டிருந்த கோபத்தையும் ஆத்திரத்தையும் பத்திரிகையாளர்களிடம் கொட் டித் தீர்த்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு செப். 03, 2016 அன்று வெளியிடப்பட்டது.